23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

**Jey Ahamparam** P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca
Tel.:416.315.9397 / www.mahendran.ca

நதி 23 | பாலம் 05 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 01, 2013

# "தமிழர் மீதான வன்முறை - ஐயத்திற்கு இடமில்லை"

பிரான்சிஸ் ஹரிசன் கடந்த பெப்ரவரி 25, 2013 இல் குளோப் அன்ட் மெயில் பத்திரிகையில் மேற்கூறியவாறு கூறியுள்ளார். 2009 இல் இலங்கையில் நடைபெற்ற போரில் நடந்த மிகவும் தரக்குறைவான போர்க்குற்ற நிகழ்வான 'வெள்ளைக் கொடி நிகழ்விற்கு' (the white flag incident) சாட்சியாக முதன்முறையாக நேரில் கண்ட இருவர் தற்போது நடந்தவற்றை கூறியுள்ளனர். இந்த 'வெள்ளைக்கொடி நிகழ்வு' என்பது போரின் இறுதிநாளில் வெள்ளைக்கொடியுடன் வந்து சரணடைந்த விடுதலைப் புலிகளின் 40 அரசியல் தலைவர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்வாகும்.

உயிருடன் இலங்கை இராணுவத்தினரால் அழைத்துச் சென்றதை இவர்கள் இருவரும் உறுதிப்படுத்துகின்றனர்.

இவர்களில் ஒரு சாட்சி குமரன் எனப்படுபவர். அவரது பெயர் பாதுகாப்பு காரணமாக மாற்றப்பட்டுள்ளது. குமரன் புலிகளின் அரசியல் தலைவரின் பாதுகாப்பாளராக இருந்தவர். பாரதூரமாக காயப்பட்டிருந்ததால் இவர் முதலிலேயே இலங்கை இராணுவத்திடம் சரணடைந்திருந்தார். தனது உயிரை காப்பாற்றுவதற்காக தனது விருப்பத்திற்கு மாறாக இலங்கை இராணுவத்திடம் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களுடன் கலந்து வரும் புலிகளின் அரசியல் தலைவர்களை இராணுவத்திற்கு அடையாளம் காட்டும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது. குமரன், புலிகளின் அரசியல் தலைவரின் பாதுகாப்பாளராக இருந்ததால் அவர் இந்த வேலை செய்வதற்கு தகுதி ஆனவராக இருந்தார். குமரனிற்கு இந்நிகழ்வு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒழுங்காக செயற்படுத்தப்படும், ஒரு சரணடையும் நிகழ்வாகவே தெரிந்தது. அவரை சுற்றிவர காணப்பட்ட இராணுவ வீரர்கள் எல்லோரும் இந்த நிகழ்விற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தனர்.

அந்த இடத்திற்கு அருகில் சர்மிளன் எனப்படும் முன்னாள் கணித ஆசிரியரும் இருந்தார். இவர் பதுங்கு குழிகளை வெட்டுவதற்கும், இறந்தவர்களை புதைப்பதற்குமாக புலிகளால் பலவந்தமாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர். போர் முடிவடையப் போவதை அறிந்து சர்மிளன், சில விடுதலைப் புலிகள், மற்றும் சில பொதுமக்கள் முதல் நாள் இரவே இராணுவத்திடம் சரணடைந்திருந்தார்கள். இவர்கள் எல்லோரும் இராணுவத்தினரால் பரிசோதிக்கப்பட்டு அருகில் உள்ள பாழடைந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த இடத்தில் இருந்து சர்மிளனால் சரணடைய வருகின்ற விடுதலைப்புலிகளின் அரசியல் தலைவர்களை நன்றாக காணக்கூடியதாக இருந்தது. சர்மிளன் முதலாவதாக சரணடைய வந்த புலிகளின் அரசியல் தலைவர்களில் நடேசன், அவரது சிங்கள சமூகத்தை சேர்ந்த மனைவி, புலித்தேவன் ஆகியோர் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அவரது ஆச்சரியத்திற்கு காரணம் புலிகளின் தலைவர்கள் இராணுவத்திடம் பிடிபட்டால் இறப்பதற்காக கழுத்தில் சயனைட் குப்பிகளை அணிந்தவர்கள் சரணடைய வருவார்கள் என எதிர்பார்க்கவில்லை. அவர்கள் ஒரு வெள்ளைக் கொடியை



இலங்கை அரசாங்கம் இதுவரை காலமும் இவ்வாறு சரணடைய வந்தவர்களை அவர்களுடைய ஆட்களே பின்னால் இருந்து கொன்றார்கள் எனக் கூறிவந்தது. இலங்கை அரசின் இக்கூற்றுக்கு இச்சாட்சிகள் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். இந்த இரண்டு சாட்சிகளும் தற்போது இலண்டனில் பாதுகாப்பாக உள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்கள் போர்முனையில் இருந்து பாதுகாப்பாக விடுதலைப் புலிகளை அடையாளம் காட்டுவதற்கு உடன்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்கள் சரணடைய ஒத்துக்கொண்ட அன்று மாலை இலங்கை இராணுவத்தால் குமரன் போர்முனைக்கு அழைத்து செல்லப்பட்டு ஒரு மண் அரணிற்கு பின்னால் இருக்க வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு சரணடைய வரும் விடுதலைப்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies

Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE
TOYOTA

KUMAR JEGASOTHY
(Product Advisor)
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
5362 Highway 7 (East of Mccowan Rd).
Markham, ON L3P 1B9
குமார் ஜெகசோதி
10 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# “தமிழர்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏந்தியவாறு, நடேசனின் மனைவி சிங்கள மொழியில் இராணுவத்தி னரை நோக்கி கத்தியபடி வந்தார்கள். அது பெரும்பாலும் எங்களை சுடவேண்டாம் என்பதாக இருந்திருக்கும்.



சரணடைய வந்த புலிகளின் அரசியல் தலைவர்களிடம் இராணுவம் சென்று அவர்களை வரவேற்று பாலம் ஒன்றிற்கு மேலாக ஓடையை கடந்து அப்பால் உள்ள வாகனங்களுக்கு அழைத்து சென்றது என குமரனும், சர்மிளனும் சாட்சியம் அளித்திருந்தனர். சர்மிளன் மேலும் தெரிவிக்கையில் அங்கே இராணுவ வாகனங்களுடன் சர்வதேச நிறுவனங்கள் பாவிக்கும் வெள்ளை ஜீப் வண்டிகளும் நின்றன என்றார்.

குமரன் அங்கு ஒரு மணித்தியாலம் வரை நின்ற பின்னர் இராணுவத்தால் ஒரு பிக்கப் வாகனத்தின் பின்புறத்தில் இருத்தி அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது அவர் இராணுவ வீரர்கள் சிலர் அங்கே நிலத்தில் கிடக்கும் சடலங்களை தங்களது கைத்தொலைபேசி மூலம் படங்கள் எடுப்பதைக் கண்டார். வண்டியில் அவ்விடத்தை கடக்கும் போது அங்கே புலித்தேவன் மற்றும் நடேசனின் சடலங்கள் இருப்பதையும் குமரன் கண்டார். அப்போது அவரது எண்ணத்தில் இவர்களை இவ்வாறு கொன்றவர்கள் என்னை என்ன செய்வார் களோ என்ற பயம் எழுந்தது என்றார். அதனால் தான் கண்ணால் கண்டவற்றை பற்றி எவரிடமும் ஒரு சொல்லுக் கூட சொல்லவில்லை என்றார் குமரன்.

இந்த இரண்டு சாட்சிகளின் வாக்குமூலப்படி பார்த்தால் புலிகளின் அரசியல் தலைவர் களை சரணடைய வைக்க இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இந்த செய்கை யானது புலிகளின் தலைவர்களை ஏமாத்தி ஒரு கீழ்த்தரமான முறையில் கொலை செய்ய இராணுவத்தால் திட்டமிடப்பட்ட ஏற்பாடு ஆகும். இலங்கை அரசு இவர்களை சிறைக்கைதியாக பிடிக்கும் நோக்கத்தை கொண்டிருக்கவில்லை. அதுவும் குறிப்பாக ஆங்கிலம் பேசக் கூடிய புலிகளின் அரசியல் தலைவர்களை கைதியாக வைத்திருக்க இலங்கை அரசு விரும்பவில்லை. அவர்களால் சர்வதேசத் தின் கவனத்தை தம்பால் திரும்ப வைக்க முடியும் என அரசு எண்ணியே அவர்களை கொன்றது. இதன் மூலம் இலங்கை அரசு போர்முறையின் எல்லாச்சட்டங்களையும் அலட்சியப்படுத்தி உள்ளது (flouted). ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை இலங்கை அரசு எவ்வாறு போர்க்குற்றம் (war crimes) இழைத்தது என்று மட்டுமல்லாமல் எவ்வாறு மனித இனத்திற்கு எதிரான குற்றம் (crimes against humanity) செய்துள்ளது என விபரித்துள்ளது. அரசியல் தத்துவப்படியும் இலங்கை அரசிற்கு விடுதலைப் புலிகளின் மூத்த அரசியல் தலைவர்களை உயிருடன் வைத்திருப்பது சரியானதாக படவில்லை. அவர்கள் உயிருடன் இருந்தால் தமிழர் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நடத்த முயற்சிப்பார்கள். இதனால் தமிழர்களின் தேசிய வாதத்தை முற்றாக அழிக்க வேண்டும் என்ற முனைப்போடே இந்தப் படுகொலைகளை இலங்கை அரசு செய்தது.

இவ்வாறு நடைபெறக்கூடும் என்பதை விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்கள் எதிர்பார்த்து இருந்ததால் தான் அவர்கள் சரணடைய வரும்போது தாங்கள் சரணடைய வருவதை பல்வேறு சர்வதேச ஊடகங்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சரணடையவரும்போது ‘Sunday Times’ ஊடகவியலாளர் Marie Colvin இடமும், ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரிடமும், நோர்வே தூதரக அதிகாரிகளிடமும், ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளிடமும், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடமும், ஒரு ஐரோப்பிய தூதுவரிடமும், தாங்கள் சரணடைய வருவதை தெரிவித்திருந்தார்கள். இதனால் இலங்கை அரசியல் வாதிகளில் பலரும், இலங்கையின் தலைநகர் கொழும்பில் உள்ள அரச அதிகாரிகள் பலரும் மற்றும் இலங்கை அதிபரும் விடுதலை புலிகளின் அரசியல் தலைவர்கள் சரணடையப் போவதை அறிந்திருந்தார்கள்.






இதனால் இப்போது இலங்கை அரசாங்கம் ‘வெள்ளைக்கொடி நிகழ்விற்கு’ பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாகி உள்ளது. புலிகளை இக்கொலைக்கு குற்றம் சாட்டுவது இனிமேலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தற்போது ஒன்றுமட்டும் தெளிவாக தெரிகிறது. போரின் இறுதி மூன்று நாட்களிலும் போராளிகளை சீருடையை கழட்டிவிட்டு பொதுமக்களின் உடை அணிந்து தப்பிச் செல்லுமாறு விடுதலை புலிகளுக்கு அவர்களது தலைவர் அனுமதி அளித்திருந்தார். இந்த ‘வெள்ளைக் கொடி நிகழ்வு’ மிகவும் பிரபல்யப்படுத்தப்பட்ட ஒரு சரணடையும் நிகழ்வு. நிச்சயமாக ஒரு இரகசிய நிகழ்வு அல்ல. புலிகளின் தலைவர் அனுமதி அளித்த ஒரு நிகழ்வு. மற்றும் புலிகளின் அடிமட்டநிலை உறுப்பினர் ஒருவரால் இவ்வாறு 40 பிரபல்யமான அரசியல் தலைவர்களையும் அவர்களது குடும்பத்தையும் எழுந்தமானத்திற்கு சுட்டுக் கொன்றிருக்க முடியாது.

இறந்த சடலங்கள் எவ்வாறு சீரழிக்கப் பட்டுள்ளன என்று வெளியான புகைப்படங் கள் தெரிவிக்கின்றன. இது இவர்கள் எவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என பல கேள்விகளை எழுப்பி நிற்கின்றன. முன்னாள் போராளிகளின் சாட்சியங்களை சிலர் ஏற்கத் தயாரில்லாவிட்டாலும் இப் போது பல சாட்சிகள் இச்சம்பவத்தை பற்றி கூற முன்வருகின்றனர். இவ்வாறு சாட்சி கூற வருபவர்கள் எவ்வாறான மனக்கஷ்டங்க ளுக்கு உள்ளாகி இருப்பர். அதைவிட இவ்வாறு சாட்சி கூறுவதால் அவர்கள் தங்களையும் தங்களது குடும்பங்களையும் மேலும் அபாயத்துக்கு உள்ளாக்குகிறார்கள்.

குளோப் அன்ட் மெயிலில் இந்தக் கட்டுரையை எழுதிய Francis Harrison ஏற்கனவே இலங்கைப்போர் பற்றி ‘Still Counting the Dead’ என்ற புத்தகத்தை வெளியிட்டவர். இவர் தனது இணையத் தளதமான www.stillcountingthedead.com இல் இலங்கையில் நடைபெற்ற போர் நிகழ்வுகளுக்கு ஒரு பதிவை வைத்திருக்கிறார். அதில் இலங்கையின் போர்க்குற்றம் மனித உரிமைச்சபையின் நிகழ்வுகள் பற்றி உடனுக்குடன் தகவல்களை வெளியிட்டு வருகிறார்.




பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com*
   *www.tamilvanakkam.com*




# கனடா ஒரு கண்ணோட்டம்

### கடந்த இதழ் தொடர்ச்சி

## இனுவிற் இனத்தவர்

வடபுலக் குளிருக்கு ஈடுகொடுத்து கடல் நாய், திமிங்கிலம், வறுகிமான், துருவக் கரடி வகைகளை வேட்டையாடி வாழ்ந்து வந்தார்கள். இன்றும் இனுவிற் இனத்தவர்



நுனவுற், வடமேல் புலங்கள், வட குவிபெக், லாபிரடோர் பகுதிகள் அடங்கிய வட கனடா வில் வாழும் பழங்குடி மக்கள் இனுவிற் இனத்தவர் ஆவர். அவர்கள் நிலத்துடனும், அதனைப் பகிரும் மரஞ்செடி-கொடிகள், பிராணிகள் அனைத்துடனும் நெருங்கிய தொடர்புடையவர்கள். அவர்கள் சிலர் உணவுக்காகவும் உடைக்காகவும் வேட்டையாடி வருகிறார்கள்.

## மேற்றி இனத்தவர்

முற்காலத்தில் மென்மயிர்த்தோல் வியாபாரம் செய்த பிரெஞ்சுக்காரர் பலரும், ஆங்கிலேய வியாபாரிகள் சிலரும் முதற்குடிப் பெண்களை மணம் முடித்தார்கள். அவர்களுடைய வழித்தோன்றல்களே மேற்றி இனத்தவர். புல்வெளிகளில் வாழ்ந்து தமக்கென ஒரு தனித்துவமான பண்பாட்டை உருவாக்கிய மேற்றி இனத்தவர் மென்மயிர்த்தோல் வியாபாரத்தில் முக்கிய பங்கு வகித்தார்கள்.



இன்று மேற்றி இனத்தவருள் பெரும்பாலானோர் கனடாவின் மேற்குப் புலங்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்தகால, தற்கால, எதிர்காலப் பொருத்தனைகள்

1701 முதல் 1923 வரை பிரித்தானிய, கனடிய அரசாங்கங்கள் பழங்குடி மக்களுடன் உடன்படிக்கைகள் அல்லது பொருத்தனைகள் பலவற்றைச் செய்து கொண்டன. தமது காணி உரித்தைக் கைவிடுவதற்குக் கைமாறாகச் சில உரிமைகளையும் நன்மைகளையும் பழங்குடி மக்களுக்கு அப்பொருத்தனைகள் வழங்கின. ஒவ்வொரு பொருத்தனையும் தனித்துவமானது. ஒவ்வொன்றும் பற்றுறுதியுடன் கூடிய வாக்குறுதியாகவே நோக்கப்படுகிறது.

காணி உரிமைகள், மற்றும் பிற உரிமைகள் குறித்துப் புதிய உடன்படிக்கைகள் செய்வதற்காகப் பழங்குடிக் குழுமங்களும் கனடிய அரசாங்கமும் தற்பொழுதும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. தற்கால உடன்படிக்கைகள், காணி உரித்து இணக்கங்கள் எனப்படும். ஒரு காணி உரித்து இணக்கத்தின் பயனாகவே கனடாவின் ஆகப்புதிய ஆள்புலமாகிய நுனவுற் தோற்றுவிக்கப்பட்டது.

பழங்குடி மக்கள் தத்தம் அலுவல்களைத் தாமே தீர்மானித்து நிர்வகிக்கும் வல்லமையை மீட்டுக்கொள்வதற்கு ஏதுவாக அவர்களுடன் கனடிய அரசாங்கம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதுவே தன்னாட்சி எனப்படும். அவர்களுடைய பொருள்வளத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்கு அவர்களுடன் கனடா ஒத்துழைத்து வருகிறது.

பழங்குடி மக்கள் தனித்துவமான வரலாறுகள், பண்பாடுகள், மொழிகள் படைத்தவர்கள். கனடிய சமூகத்தில் அவர்கள் தொடர்ந்தும் முன்னின்று பங்கு வகித்து வருகிறார்கள்.

தொடரும்...

*- மணி வேலுப்பிள்ளை*

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# "ஆண்மீகம்" மட்டுமல்ல ஆன்மீகம்



சத்குரு வாசுதேவ்

## *World women day*

பெண்களை பலவீனமானவர்கள் என்று கருதுகிற வழக்கம் உலகம் முழுவதுமே உள்ளது. உடலளவில் இயற்கையாகவே ஆண்கள் கூடுதலான பலம் பொருந்தியவர் கள். அவ்வளவு தான். ஆனால், எல்லா நிலைகளிலும் பெண்களை பலவீனமானவர் களாக சித்தரிக்கும் போக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே நடைமுறையில் உள்ளது. பெண்ணை மதிக்காத எந்த ஆணும் தன்னை உணர வழியே இல்லை. ஏனெனில் ஒவ்வோர் ஆணிலும் பெண்மையின் தன்மைகள் உண்டு.

இந்திய ஆன்மீக மரபில், தன்னையுணரும் உச்சநிலையை அடைவதில் அந்தக் காலங்களில் ஆண்களும் பெண்களும் சரி நிகர் சமானமாகவே இருந்திருக்கிறார்கள். உள்நிலை வளர்ச்சியில் ஆண்மை, பெண்மை என்பதான வேதங்களுக்கு இடமே இல்லை. மேலே இருக்கும் தோலைத்தான் ஆண் என்றும், பெண் என்றும் அடையாளம் காண்கிறீர்கள். கனியின் தன்மையை நிர்ணயிக்கப்போவது மேலே உள்ள தோலல்ல. ஆன்மீகம் கனிவதற்கு ஆண்தோல் - பெண்தோல் என்ற பேதங்கள் இல்லை. இயற்கையின் படைப்பில் உடலளவில் பெண்கள் பலவீனமாக கருதப்பட்டாலும் உளவியல் நிலையில் அவர்கள் மேம்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். வேத காலந்தொட்டு, எத்தனையோ பெண் துறவிகள் ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலைகளை எட்டியிருக்கிறார்கள். வழிபாட்டு முறைகளிலேயே தொன்மையான வழிபாடு, தாய்வழிபாடுதான். இன்று கூட ஆண் தெய்வங்களைக் காட்டிலும் பெண் தெய்வங்களை வழிபடுவது அதிகமாக இருப்பதற்கும் இந்த ஆதிமுறைதான் காரணம்.

வேத காலங்களில் பிராமணர்களைப்போல பெண்களும் பூணூல் அணிந்திருந்தனர். ஏனெனில், பூணூல் அணியாமல் வேதங்களையும், உபநிடதங்களையும் பயிலக்கூடாது என்றொரு நியதி இருந்தது. அத்தகைய பெண்களில் ஒருவர், மைத்ரேயி.

தன்னையுணர்ந்தவராகவும் அரசராகவும் திகழ்ந்த ஜனகர், தன்னுடைய அரசவையில் ஆன்மீக மாநாடொன்றைக் கூட்டினார். ரிஷிகளும், முனிவர்களும் கூடி தங்களின் பேரறிவையும், ஆன்மீக அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் விதமாக அந்த மாநாடு அமைந்தது. முனிவர்கள் மட்டுமின்றி வேதவிற்பன்னர்களும், அறிவிலும் ஆன்மீகத்திலும் உச்சந்தொட்டவர்களும் ஒன்றாகத் திரண்டிருந்தனர்.

விவாதங்கள் தொடங்கின. கூரிய அறிவின் எல்லையையும் தாண்டி, சூட்சுமமான நிலையை நோக்கி விவாதங்கள் நகரத் தொடங்கின. மிக நுட்பமான நிலை நோக்கி விவாதங்கள் உயர உயர, அதன் நுண்மையைத் தாக்குபிடிக்க முடியாதவர்கள் மெல்ல நழுவினர். தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டவர்கள் இரண்டே பேர்தான். ஒருவர் மைத்ரேயி. இன்னொருவர் யக்ஞவால்கியர். ஆன்மீக சம்வாதங்களில் கடவுளர்களையே தோற்கடித்துக் கொடி நாட்டியவராகக் கருதப்பட்டவர் யக்ஞவால்கியர். அவர் ஞானத்தின் வரம்பு கண்டவர். அவருக்கும் மைத்ரேயிக்கும் இடையிலான சம்வாதம் நாட்கணக்கில் நீடித்தது. அவர்கள் எது குறித்துப் பேசுகிறார்கள் என்பது அந்த இருவரையும் தவிர ஒருவருக்கும் புரியாத அளவு உயர்ந்த தளத்தில் விவாதம் வளர்ந்துகொண்டே போனது.

ஒரு காலகட்டத்தில் மைத்ரேயி தொடுத்த வினாக்கள் மிகமிக சூட்சுமமாய் ஆகிவிட்ட நிலையில் அந்த வினாக்களை யக்ஞவால்கியர் பலவிதங்களில் தவிர்க்க முயன்றார். முடியாமல் போன நிலையில், தன்னை மறந்தவராக, "நிறுத்து! இதற்குமேல் ஒரு கேள்வி கேட்டாலும் உன் உடல் துண்டு துண்டாக வெடித்துச் சிதறும்" என்று கூச்சலிட்டார் யக்ஞவால்கியர். உடனே ஜனகர் தலையிட்டு, வாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். எப்படியென்றால், வென்றவருக்கான சன்மானத்தை மைத்ரேயிக்கு வழங்கினார் ஜனகர்.

தன் குறைபாட்டைப் புரிந்துகொண்ட யக்ஞவால்கியர், மைத்ரேயின் பாதங்களைப் பணிந்து தன்னை சீடராக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். அப்போதுதான் யாரும் எதிர்பாராத ஒன்று நடந்தது. அவரை சீடராக ஏற்றுக்கொள்ள மைத்ரேயி மறுத்துவிட்டார். மாறாக, தன்னுடைய கணவராக ஏற்றுக் கொண்டார். காரணம், ஞானத்திலும், புரிதலும் மைத்ரேயிக்கு நிகராக வேறு யாருமே இல்லை. ஓரளவு நெருங்கி வந்தவர் யக்ஞவால்கியர் மட்டும் தான். இருவரும் இல்லறத்தில் இணைந்தனர்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு யக்ஞவால்கியர் தன்னிடம் இருக்கும் செல்வங்களையெல்லாம் மைத்ரேயின் வசம் ஒப்படைத்துவிட்டு, தன்னை உணர்வதற்காக, வனங்களுக்குள் செல்ல முற்பட்டபோது, "இந்த அல்பமான செல்வங்களை நான் ஏற்பேன் என்று நீங்கள் எப்படி நினைத்தீர்கள்? உள்நிலைத் தேடலை நானும் மேற்கொள்ள வேண்டும்" என்றார். இருவரும் முழுமையான ஆன்மீக வாழ்வை மேற்கொண்டு, தம்மை உணர்ந்த ஞானியராய் வனங்களிடையே வாழ்ந்தார்கள்.

இப்படி பண்டைய பாரதத்தில் எத்தனையோ பெண்கள் ஆன்மீகத்தில் உயர்ந்த நிலை-களைத் தொட்டிருக்கிறார்கள். எல்லா விதத்திலும் முழுமைபெற்ற சமூகங்களில் பெண்மை மேலோங்கியிருப்பது இயல்பு. குறைந்தது ஆண்களுக்குப் பெண்கள் சமமாயிருப்பதாவது அத்தகைய சமூகங்களில் காணப்படும்.

கி.மு.3000 த்திலிருந்தே இந்தியாவில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமான வாழ்வை நிகழ்த்தி வந்தார்கள். மங்கோயோ - மத்திய சீனா போன்ற பகுதிகளில் இருந்து, வாழ்வின் சூட்சுமமான அம்சங்களை அறிந்தேயிராத அளவு கொடூரமான வாழ்க்கை வாழ்ந்தவர்களின் படை யெடுப்புக்குப் பிறகு பெண் தன் சுதந்திரத்தை இழக்கும் சூழல் ஏற்பட்டது. ஏனெனில், படையெடுத்து வந்தவர்கள் பொன்னை அபகரிப்பது போலவே பெண்ணையும் அபகரிக்கத் தொடங்கிய பிறகு பெண் பாதுகாக்கப்பட வேண்டியவர் ஆனாள். ஆணின் பாதுகாப்புக்குள் வாழத் தொடங்கியவள் ஆணின் கட்டுப்பாடுகளுக்கு ஆளானாள். சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் மாற்றி எழுதப்பட்டன. ஸ்மிருதிகள், வாழ்வின் அடிப்படை உண்மையை உணர்த்துபவை.

அடையாளங்களுக்கு அப்பாற்பட்ட அந்த நூல்களே மாற்றி எழுதப்பட்ட போது அவற்றின் பெரும்பகுதி பெண்களுக்கான கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தன. பெண் பூணூல் அணியக் கூடாது என்பதில் தொடங்கி, பெண்ணுக்கு மோட்சம் கிடையாது என்பதுவரை விதவிதமான வகைகளில் பெண்ணை பலவீனமானவளாக அவை சித்தரித்தன. எல்லாம் ஒன்று என்று அத்வைதம் பேசபவர்கள் கூட பெண்களை 3 படி தாழ்வாகவே பார்த்தது விசித்திரம்.

வேத காலங்களில், குடும்பத்தை உருவாக்கும் சுதந்திரமும், உள்நிலையில் வளர்ந்த பிறகு குடும்பத்தை உதறும் சுதந்திரமும் பெண்களுக்கிருந்தது. காலப்போக்கில் பெண்களுக்கு துறவறம் மறுக்கப்பட்டது.

உறவோ, துறவோ, தன் வாழ்வை நிர்ணயித்துக் கொள்கிற உரிமை பெண்களின் கைகளிருந்து பிடுங்கப்பட்டு விட்டது. இந்த 21- நூற்றாண்டிலும் இதே நிலை தொடர்கிறது.

உயிர்களின் பிறப்புக்கு பெரும்பங்களிப்பைப் பெண் தருகிறாள். அதில் ஆணின்பங்கு சிறிதளவுதான். எனவே பிரபஞ்ச இயக்கம் பெண்ணைச் சார்ந்துதான் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், பெண்ணை ஆண் ஏற்க மறுப்பானென்றால், ஒன்று அவன் அறியாமையில் இருக்கவேண்டும்.

ஆலயத்தில் அம்பாள் முன்னர் விழுந்து வணங்குபவன், வீட்டில் மனைவியை அடித்து உதைத்தால் அது அறியாமை மட்டுமல்ல. அயோக்கியத்தனமும் கூட. இதற்கு மாற்று முயற்சி என்று கருதி, மேலை நாடுகளில் பெண்கள் ஆண்களைப் போல் நடந்து கொள்ள முயல்கிறார்கள். இது மிகவும் ஆபாசமானது. பெண்ணாக இருப்பது தாழ்வானது என்று கருதுகிற பெண்தான் ஆணைப்போல் நடந்து கொள்ள ஆசை கொள்வாள். பெண், தன் முழுமையான பெண்மையில் முழு சுதந்திரத்துடன் வாழ்வதுதான் பெண் விடுதலை என்று சொல்லக்கூடியது.

விவேகானந்தரிடம் சமூக சேவகர் ஒருவர் வந்து, "பெண் விடுதலைக்கு ஆதரவாக செயல்பட விரும்புகிறேன். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். "நீங்கள் ஒன்றும் செய்யாமல் விலகி வழி விட்டாலே போதும். தங்கள் விடுதலையைப் பெண்களே பார்த்துக் கொள்வார்கள்" என்றார் விவேகானந்தர்.

வாய்ப்புகளின் வாசல் திறக்கும் போது தன்னை பெண்ணே சீரமைத்துக் கொள்ளலாம். இப்போது அதற்கான சூழல் ஏற்பட்டு வருகிறது. பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்ற குற்றச்சாட்டிலும் உண்மை இல்லாமல் இல்லை. இதையெல்லாம் பெண்கள் தாண்டி வரவேண்டும்.

சின்ன விஷயங்களில் எல்லாம் பெண் திருப்தியடைந்து விடுகிறாள் என்பது காலங்காலமாய் இருக்கும் கருத்துக்களில் ஒன்று. மைத்ரேயி தன் கணவரிடம் கேட்ட கேள்வியை எல்லாப் பெண்களுமே கேட்க வேண்டும். வாழ்வில் பெரிய இலட்சியங்களை நோக்கி பெண் நடக்கிற போதுதான் பெண்மை எந்த விதத்திலும் தாழ்ந்ததில்லை என்பதை உலகம் உணரும்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org



# மோட்கேஜ் கிளினிக்

- லைன் ஒப் கிரெடிட் (equity) எடுக்க வேண்டுமா?
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமன்டையும் ஒரே பேமண்டாக மாற்ற வேண்டுமா?
- ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- 2வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- பாங்க்ரப்சி, கொன்சுயுமர் புறப்போசல் செய்தோருக்கு மோட்கேஜ் தேவையா?
- உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- 2வது 3வது தடவை வீடு வாங்குவதற்கான மோட்கேஜ் தேவையா?
- உங்கள் வீட்டு உரிமத்தினை உறவினரின் பெயருக்கு மாற்ற வேண்டுமா?
- அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?

மற்றும் பல சேவைகள்...

**வோக் இன் சனிக்கிழமை தோறும் 9.00 am – 5.00 pm**

**416-644-3555**

**CENTUM Rapid Mortgages Inc.**
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. 416-259-2002 **"Rapid Response; Rapid Results"**

# அழிந்து கொண்டிருக்கும் கபீர், மற்றும் மலேய் இனங்கள்

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை துடுப்பெடுத்தாட்ட அணியின் முன்னணி பந்து வீச்சாளர் சாமிண்ட வாஸ் (Chaminda Vaas) ஒரு தமிழர் என்று நண்பன் ஒருவன் கூறிய போது ஆச்சரியமாகவிருந்தது. கடந்த 20 ஓவர் உலகக் கோப்பையை வென்ற மேற்கிந்திய அணியின் தலைவர் சாமி ஒரு தமிழன் என அதே நண்பன் கூறினான். இலங்கையையும் இந்தியாவையும் மூவேந்தர் கள் ஆண்ட போது (போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் (ஆங்காங்கே பிரெஞ்சுக்காரர்)) பல தமிழர்கள் வேலை நிமித்தம் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். தூத்துக்குடியை அண்டிய பகுதியில் இருந்து இவ்வாறு வந்தவர்கள் நீர்கொழும்பு பகுதிகளில் குடியேறினர். படிப்படியாக இவர்கள் சிங்கள கலாச்சாரத்தையும் மொழியையும் உள்வாங்கி சிங்களவர் களாகவே மாறிவிட்டார்கள். இவர்கள் அங்கிருந்து வரும்பொழுதே கத்தோலிக்க மதத்தை தழுவியவர்களாகவே இருந்தார்கள். அவ்வழியில் வந்தவர்களின் வம்சாவளியில் தோன்றியவரே சாமிண்ட வாஸ். இந்தியாவில் இருந்து மேற்கிந்திய தீவுகளுக்கு சென்ற தமிழர்களின் வம்சாவளியில் தோன்றியவரே மேற்கிந்திய அணித் தலைவன் சார்மி. உலகக் கோப்பையை வென்ற அணியில் 7 வீரர்கள் இந்திய வம்சாவளியினராவர்.

இவ்வாறாக இனப் பரம்பல்களினாலும் புலம்பெயர்வுகளினாலும் ஆதிக்க மொழிகளாலும், கலாச்சாரங்களாலும் பல மொழிகளும், கலாச்சாரங்களும் அழிந்து வருகின்றன. இப்போது புதிய தொழில்நுட்ப வசதிகள் மொழிக் குடும்பங்களையும் கலாச்சாரத்தையும் பாதுகாக்க சில உதவி-களை செய்கின்றன. அவ்வாறு இருந்தும் 2100ம் ஆண்டளவில் சுமார் 50 வீதமான மொழிகள் அழிந்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் பிபிசி, ஆங்கிலோ இந்தியர்கள் இனம் அழிந்து வருவதாக கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. நான் சென்னையில் இருந்தபோது ஒரு ஆங்கிலோ இந்திய ஆசிரியையிடம் ஆங்கிலம் கற்றுள்ளேன். இவர்களை இந்தியர்களோ அல்லது ஆங்கிலேயரோ தங்களுள் ஒருவராக கருதாமையால் இவர்கள் படிப்படியாக இந்தியர்களாகவே மாறிவிட்டனர். சிலர் இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்து லண்டனை அண்டிய பகுதியில் வாழ்ந்துவருகின்றனர். இலங்கையில் ஆங்கிலோ இந்திய இனத்தவர் வெகு வெகுவாக குறைந்தே விட்டனர். அபர்ணா சென்னின் '36 சவ்வரங்கி லேன்' என்ற படம் இவர்களைப் பற்றியது. இந்தியாவின் பிரபல அரசியல் இயக்குனர் சியாம் பெனகல் 'Trikal' என்ற படத்தை இயக்கியிருந்தார். இப் படம் கோவாப் பகுதியில் வாழும் போர்த்துக்கீச ஆங்கிலோ இந்தியர்களைப் பற்றிய படமாகும்.

இதேபோன்று மற்றொரு இனம் இலங்கையில் இருந்து அருகி வருகின்றது. இவர்களும் போர்த்துக்கீசரால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்கள். இவர்கள் கொழும்பை அண்டிய பகுதியான அடிமைகள் தீவு (Slave Island), ஜாஎல, (ஜாவா) சாவகச்சேரி போன்ற பகுதிகளில் பெருமளவு வாழ்ந்ததாக விக்கிபீடியாவின் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஜாவகச்சேரியே



- பதமி -

சாவகச்சேரியாக மாற்றம் பெற்றதாக விக்கிபீடியா தெரிவிக்கின்றது. இது யாழ்ப்பாண வைபவமாலையில் தெளிவாக உள்ளது. ஆனாலும் இதற்கு முன்பாக கி.பி 13ம் நூற்றாண்டில் சந்திரபாகுவின் படைவீரர்களாக மலேய்கள் இலங்கை வந்தாகவும் வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்துக்கும் ஜாவாவிற்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்ததாக தெரிகின்றது. இன்று பலர் கனடாவிலும் வாழ்கின்றனர். இவர்கள் இந்தோனிசியாவின் மலாய் பகுதியில் இருந்து வந்தமையால் இப் பெயரைப் பெற்றனர். போர்த்துக்கீசர் போரில் படை களாக பயன்படுத்த இவர்களை இலங்கை அழைத்து வந்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. குறிப்பிடத் தக்க மலேய்கள் 1. ரி.பி. ஜயா (T.B. Jayah) முன்னாள் இலங்கை அமைச்சராவார். கொழும்பு சாகிராக் கல்லூரியின் ஸ்தாபகர். 2. முன்னாள் இலங்கை அணியின் தலைவரும் ஆரம்ப துடுப்பெடுத்தாளருமான டில்சன், 3. இவரது தம்பியும் தமிழ் யூனியன் அணி துடுப்பெடுத்தாட்ட வீரருமான சம்பத், 4. முன்னாள் இலங்கை அணி வீரர் Roshan Jurangapathy இவர்களைவிட ஆறுக்கு மேற்பட்ட நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். இவர்களது மக்கள் தொகை குறைவாக இருந்தமையாலேயே இவர்கள் தேர்தலில் போட்டியிடுவது சாத்தியமற்றிருந்தது. காலப்போக்கில் இவர்கள் சிங்கள மொழியில் ஐக்கியமாகிவிட்டார்கள்.

இதுபோன்ற பல இனங்கள் பெரும்பான்மை இனங்களுடன் ஐக்கியமாகிவிடுகின்றன. திராவிட மொழிக்குடும்பத்தில் இருந்த விஸ்னவம் (Vishavam) போன்ற மொழிகள் தமிழுடனும், சில தெலுங்குடனும் இரண்டறக் கலந்துவிட்டன. கேரள எல்லையை அண்டி பாலக்காடு பகுதிகளில் வாழ்ந்த முடுகர் (Mudugar), குரும்பர் போன்ற இனங்கள் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அழிந்துவிட்டன. வட அமெரிக்க பூர்வீகக் குடிகளின் மொழிகள் பல அழிந்து விட்டன. ஐரோப்பிய மொழிகளின் ஆக்கிரமிப்பும், இன அழிப்பும் இதற்கு ஏதுவாகிவிட்டன.

எங்களது பிள்ளைகள் எங்களது மொழியை தாய் மொழியாக பேசுகின்றார்களா? நாங்கள் தாய் மொழியாக பேசும் மொழி எமது பிள்ளைகளுக்கு அந்நிய மொழியாகிவிடுகின்றது. எமது பிள்ளைகளும் தேசிய நீரோட்டத்தில் கலந்துவிடுகின்றனர். இவ்வாறு கலந்து அழிந்து போகும் நிலையில் உள்ள மற்றொரு இனம் கபீர் இனமாகும். பலர் இவ்வினத்தைப் பற்றி அறிந்திருப்பீர்கள். பலருக்கு இலங்கையில் தமிழ், சிங்களம், முஸ்லீம் இனங்களையே தெரியும். கபீர் இனம் மலேய் இனத்தைப் போல் செல்வாக்கான இனமல்ல. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் பேசும் மொழியைக் கொண்ட இனம். மொழி எப்போதோ அழிந்து விட்டது. கபீர் மக்கள் ஆரம்பத்தில் தமிழ் மொழியைப் பேசினாலும், பெரும்பாலேனோர் சிங்கள மொழியே பேசுகின்றனர். Kaffir என்பது போர்த்துக்கீச சொல்லான cafre ல் இருந்து உருவானது. இச் சொல் அரேபியச் சொல்லான qafr இல் இருந்து உருவானது. (meaning unbeliever).

இவர்களும் போர்த்துக்கீசரால் மொசாம்பிக்கில் இருந்து போர் வீரர்களாக கொண்டுவரப்பட்டவர்கள். பின்னர் இவர்கள் சிங்கள, தமிழ் மொழிகளுடன் ஐக்கியமாகி விட்டார்கள். ஆனாலும் இவர்களுக்கான தனித் தன்மைகள் இவர்களை சற்றே தள்ளிவைத்திருந்தது. போரில் பெரும்பாலான ஆண்கள் இறந்து விட இன்றும் கூட அதிகளவு பெண்களைக் கொண்ட இனமாகவுள்ளது கபீர் இனம். புத்தளம் நகரத்தை அண்டி சில பகுதிகளில் வாழ்கின்றார்கள். Afro - Sinhala சமூகங்கள் என்ற பெயர் கபீர் சிங்கள கலப்பின் விளைவாக எழுந்தது. இது போல பல இனங்களுடன் இவர்கள் கலந்துவிட்டார்கள். இவர்களது மதம் முஸ்லீம் ஆக இருந்தாலும் இன்று பலர் புத்தமதத்தை கடைப்பிடிக்கின்றனர். பைலா எனப்பட்ட இசை-நடன வடிவத்தை இவர்களே முதலில் இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

இன்று இவர்கள் பெரும்பாலும் கூலிகளாக வேலை பார்க்கின்றனர். இவர்களது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல முடிவதில்லை. வறுமையின் விளைவு அனைவரும் வேலை பார்த்தால் தான் உணவு என்ற நிலை. வாழ்க்கையே இவர்களுக்கு போராட்டமாகத்தான் உள்ளது. கல்வியின்மை, பொருளாதார முன்னேற்றமின்மை போன்றவை இவர்களால்




இவர்களது கலாச்சாரத்தையோ மொழியையோ பாதுகாக்க முடியாமல் போய் விட்டது. தமிழ்க் காப்பியங்களில் கூட கறுப்பின மக்கள் பற்றிய பதிவுகள் உள்ளன. மலேய்களிலும் ஒரு பகுதியினர் கூலிகளாக தங்களது சுயத்தை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கபீரும் அதேபோல் வாழ்ந்து வருகின்றார்கள். கூலிகளாக இடம் பெயர்ந்தவர்கள் வாழ்வு உலகெங்கும் அவ்வாறு தான் உள்ளது. மலேசியாவில் கூலிகளாக சென்ற தமிழர்கள் இன்றும் அதே நிலையில் தான் உள்ளார்கள். மேற்கிந்தியத் தீவுகள் போன்ற பிரதேசங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆக்கிரமிப்பு மொழிகளின் வளர்ச்சி பல மொழிகளையும் கலாச்சாரங்களையும் அழித்துவிடுகின்றது. இலங்கையில் கூட வெகு விரைவில் தமிழ் தனது அழிவை நோக்கி போய்க் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. காப்பாற்ற வேண்டியவர்கள் காப்பாற்றாவிடின் கபீர் நிலை தான் தமிழுக்கும் ஏற்படும்.

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at **Scarborough & Stouffville**

**Contact: 647.340.9490 / 416.732.2228**

# Super Rich இன் ஆதன முதலீடுகள்

உலகில் ஏழைகள் ஏழைகளாக மாறிக்கொண்டிருக்கும் இந்தக்காலத்தில், பணக்காரர்கள் மிகவும் பணக்காரர்களாக முன்னேறிக் கொண்டு வருகின்றார்கள். ஒவ்வொரு நாட்டிலும் குறைந்தது ஒரு வீதமான சனத்தொகை மக்கள் மிகமிகப் பணக்காரர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக கனடாவை எடுத்துக் கொண்டால் ஏறக்குறைய 350,000 மக்கள் மிகவும் பணக்காரர்களாக உள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தின் திசையை நிர்ணயிக்கக் கூடியவர்களாக உள்ளார்கள். உலகின் மிகப்பெரிய பணக்காரர்கள் தமது பணத்தை மிகவும் பாதுகாப்பான இடத்தில் முதலிடவே விரும்புவார்கள். அண்மையில் ஆதனத்தின் விலை கூடிய இடங்களில் ஒன்றாகக் கருதப்படும் மான்காற்றன் (Manhattan) நியூயோர்க் (USA) இல் நடைபெற்ற அடுக்குமனை வியாபாரத்தை உதாரணமாக கொள்ளலாம். நியூயோர்க்கில் உயரமாக கட்டப்படும், அடுக்குமாடி மனைக்கட்டிடம் One57. இந்தக்கட்டிடத்திலே இந்த அடுக்குமாடி மனை விற்கப்பட்டுள்ளது. Uber wealthy (super Rich) மக்களே (Billionaires மற்றும் multi Millionaires) இவ்வாறான மனைகளை வாங்குவதாக தெரியவருகின்றது.

2012ஆம் ஆண்டில் மட்டுமே நியூயோர்க், மான்ஹாற்றன் பகுதியில் , 15 மில்லியனிற்கு மேற்பட்ட விலையுள்ள ஆதனங்களின் விற்பனையின் எண்ணிக்கை இரண்டு மடங்காகி உள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்தப்பகுதியில் வேறும் பல விலைகூடிய அடுக்குமனைக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப் படுகின்றன. உதாரணமாக 432 Park Ave, இதன் உயரம் One 57 ஐ தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த விலை கூடிய மனைகளை சீனா, ரஷ்யா, தென்அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருபவர்களே வாங்குகின்றனர்.



கனடாவைச் சேர்ந்த Lawrence Stroll என்பவரும் இதில் வாங்கியுள்ளார். இவரின் பெறுமதி $1.8 பில்லியன்.

அனேகமான வாங்குனர்கள், தமது பணத்தின் ஒரு பகுதியை பாதுகாப்பான இடத்தில் முதலிடவே விரும்புகின்றனர்.

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 385

அதற்கு கனடாவும் விதிவிலக்கல்ல. உதாரணமாக One57, அடுக்குமாடி மனைக்கட்டிடத்தை கட்டி முடிக்க $1.3 பில்லியன் டொலர் தேவைப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் 92 அடுக்குமாடி மனைகளும் Five Star (5*) park hyatt ஹொட்டலும் (Hotel) அடங்குகின்றது. இதில் இரண்டு மனைகள் $90 மில்லியன் டொலரிற்கு விற்கப்பட்டுள்ளன. 60 வீதத்திற்கு மேற்பட்ட மனைகள் விற்கப்பட்டு விட்டன. இக்கட்டிடத்தொகுதிகளிலுள்ள விலை குறைந்த மனை $17 மில்லியன் ஆகும்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



**Raja Mahendran,** P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666

**CONDO FOR RENT**



**HWY 401 & KENNEDY**
Brand new condo for rent.
2 Bedroom, 2 washroom.
Avail. immediately.
Rent $1495.

**101 ERSKINE IN UPTOWN T0RONTO**



Another Tridel Project. price starting from $259,900. Summer 2015.

**CONDO FOR SALE**
**HWY 401 & KENNEDY**
1 Bedroom + den.
Indoor swimming pool.
Recreation facilities.
Asking price $259,900.

**CONVENIENCE STORE FOR SALE**
Over 10 years establish convenience / Grocery / Audio / video. Space for expansion. Asking only $129,900

**COMMERCIAL SPACE FOR LEASE**



**MIDDLEFIELD & FINCH**
1000Sq.ft. Available on the main floor. many uses available. avail. April 01, 2013.

# சாரதி அனுமதி பத்திரம் எந்த சந்தர்ப்பத்தில் ரத்தாகும்?

## கனடிய தகவல் தொடர் 190

### *DRIVER'S LICENSE SUSPENSION LAW IN ONTARIO*

அவரது வாகனமோட்டும் சாரதி அனுமதி பத்திரம் குறிப்பிட்ட ஒரு திகதியிலிருந்து ரத்தாகி விட்டது என்ற செய்தி ஒன்ராரியோ மாகாண போக்குவரத்து அமைச்சிலிருந்து கடிதமூலம் வந்தபோது காரண காரிய தொடர்பு எது என்பதனை அறிந்து கொள்ள அவருக்கு சற்று காலதாமதம் எடுத்தது.

மனைவி, பிள்ளைகளை பிரிந்து வாழ்ந்த அவர், நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட்ட குடும்பத்திற்கு செலுத்த வேண்டிய தாபரிப்பு பணம் (Family Support payments) செலுத்த தவறிய ஒரு காரணத்தினால், கனடாவில் ஒழுங்காக வாகனம் செலுத்தியும் அனுமதிப்பத்திரத்தினை பறிமுதல் கொடுக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார் என்பதனை அவரால் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது.

ONTARIO MINISTRY OF COMMUNITY & SOCIAL SERVICES
**ஒன்ராரியோ மாகாண சமூக சேவைகள் அமைச்சு**

இவ் அமைச்சகத்தின் கீழ் குடும்ப பிரச்சினைகளின் சட்டரீதியான தீர்ப்புகள், நடவடிக்கைகளை நிர்வகிக்கும் 'குடும்ப பொறுப்பு அலுவலகம்' (FRO - FAMILY RESPONSIBILITY OFFICE) என்னும் பிரிவினர்களுக்கு மாகாண அரசு கடந்த டிசம்பர் 01, 2010 யிலிருந்து சில சட்ட ரீதியான அதிகாரங்களை வழங்கியுள்ளது.

அதாவது நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட்ட தாபரிப்பு பணத்தினை குடும்பத்திற்கு வழங்க தவறினால் முதலில் எச்சரிக்கை கடிதம்! தொடர்ந்து அனுமதிபத்திரம் பறிமுதல் மட்டுமல்ல, வங்கிக் கணக்கு, அவர் பெயரிலுள்ள வீடு, சொத்துகள், பாஸ்போட், மத்திய அரசின் சலுகைகள் யாவற்றினையும் அழுத்திப் பிடிப்பார்கள் என்பதனையும் அனுபவத்திலிருந்தே அவரினால் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. இந்த நிலைமையிலிருந்து விடுபட வேண்டுமானால் மூன்று வழிகள் உள்ளது என்பதனை அந்த அலுவலகமே குறிப்பிடுகின்றது.

1. கொடுப்பனவுகளை முழுவதாக கொடுத்து தீர்ப்பது (Pay the arrears in full)

2. ஏதோ ஒரு வழியில் இதனை கொடுத்து தீர்க்கும் ஒழுங்குகளை இவ் அலுவலகத்துடன் பேசி தீர்ப்பது. (Enter into repayment arrangement with FRO director)

3. தடை உத்தரவினை நீதிமன்றத்தில் பெறுவது (Ask for court for refrain order)




சரி, விடயத்திற்கு இப்போது வருவோம். இந்த நிலைமை தவிர வேறு எந்த சந்தர்ப்பங்களில் சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகி விட்டது என்பது கடிதத்தில் வரும். அவையாவன பின்வருமாறு:

**மருத்துவ ரீதியான காரணங்களினால் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்படுதல்**
(MEDICAL SUSPENSION)

கனடாவில் சகல மருத்துவர்கள், மற்றும் கண் வைத்தியர்கள் யாவரும் தங்களிடம் வரும் நோயாளிகளின் நோயின் தன்மை என்பது அவர்களின் வாகன ஓட்டத்திற்கு ஆபத்தானது என தென்பட்டால், அது தொடர்பாக உடனடியாக மருத்துவ அறிக்கைகளுடன் போக்குவரத்து அமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும் என்பது அவர்களுக்குரிய சட்டங்களின் நிர்ப்பந்தங்களாகும்.

ஆதாரம் - highway traffic act sec 203 & 204

அவ்வாறு அறிவிக்காது விட்டால் அது அவர்களின் தொழில் அனுமதி பத்திரத்தினையும் கனடாவில் பாதிக்கும் என்பதற்கு சில மருத்துவர்களுக்கு கனடாவில் நடந்த பாதிப்புகள் ஒரு உதாரணமாகும்.

உதாரணமாக பின்வரும் உடல் பாதிப்புகளை இங்கு குறிப்பிடலாம்.

- கண் பார்வைகளில் ஏற்படும் கோளாறுகள் (Both visual acuity & visual field impairment)
- காக்கை வலி (Epilepsy)
- பாரிச வாதம் & பக்க வாதம் (Storks & Paralysis)
- மூளையில் ஏற்படும் பாதிப்புகள், மறதியினை உருவாக்கும் நோய்கள், நினைவுகளை இழக்கும் தன்மை (Mental or emotional illness and dementia or alzheimer's)
- கட்டுப்படுத்த முடியாத நீரிழிவு நோய் (Diabetes or hypoglycemia uncontrolled)
- மது போதைக்கு, போதை வஸ்துகளுக்கு அடிமையான உச்ச நிலைமை (Alcohol & drug addiction)

மருத்துவர்களின் அறிக்கை போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பப்பட்டாலும், போக்குவரத்து அமைச்சின் மருத்துவ ஆலோசனை குழு (MTO - Medical advisory committe) இந்த அறிக்கைகளை ஆய்வு செய்து முடிவு பண்ணும்.

அவர்களின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட நோயாளி வாகனம் செலுத்தினால் வீதியில் செல்வோருக்கு ஆபத்தாகவிருக்கும் என முடிவு பண்ணும்போது சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகிவிட்டது என்ற கடிதம் வீடு தேடி வரும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

MERVIS & HWY 401
2 Story detached home for sale. Very demand area.

Daisy Mart
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

LAND VALUE
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

Scarborough Big lot's Investment
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

GAS STATION
North of Barrie with property. Good income. Store + Apartment

எண்ணம் போல் உங்கள் இல்லங்களை, வியாபார நிலயங்களை விற்க, வாங்க அழையுங்கள்.



# Sell your home faster and more money

| Eglinton/Midland | 9th Line / 16th Avenue | 9th Line/Reeves Way Blvd. | Denison/Markham/Fonda | Nelson/Morningside |
|---|---|---|---|---|












| 3+1 Bedrooms, 2 W Rooms Ceramic Floor | 3 Bedrooms, 3 W Room Ceramic Floor | 3 Bedrooms, 3 W Rooms Hardwood ,Ceramic Floors | 3 Bedrooms, 2 W Rooms Hardwood Floors | 3+1 Bedrooms, 3 W Rooms Hardwood,Ceramic Floors |
|---|---|---|---|---|

| Tenth Line & Hoover Park | Bathurst/Davis Dr. | Morningside/Finch | 9th Line/Hoover Pk | Mccowan / Raymerville |
|---|---|---|---|---|












| 3 Bedrooms, 3 W Rooms Tile Floor | 3 Bedrooms, 3 W Rooms Laminate Floor | 4 Bedrooms, 3 W Rooms Hardwood, Ceramic Floors | 3+1 Bedrooms, 3 W Rooms Hardwood Floors | 4+2 Bedrooms, 4 W Rooms Ceramic Floors |
|---|---|---|---|---|

| Finch/Staines/Morningside | Kenndy/Maj Mackenzie | Main St / Sandale | Millard/Braith | Gas Station |
|---|---|---|---|---|












| 4 Bedrooms, 5 W Rooms Hardwood, Ceramic Floors | 4+1 Bedrooms, 4 W Rooms | 4 Bedrooms, 5 W Rooms Ceramic, Hardwood Floor | 4 Bedrooms, 4 W RoomsC Gas Fireplace | Business For Sale |
|---|---|---|---|---|

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold

Your home advertised in full color prints ads every week until it is sold

Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**



**Elaguppillai Srinathan (Mike) B.Sc**

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@yahoo.com

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# சாரதி அனுமதி...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

**தண்டனைப் பணம் ஏதாவது செலுத்தாத காரணத்தினால் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்படுதல்**
(LICENSE SUSPENSION FOR MISSING FINE PAYMENT)

பொலீஸ் உத்தியோகத்தர் வீதியில் இடைமறித்து தந்த தண்டனை ரிக்கற்றின் பணத்தினை செலுத்தியிருக்க வேண்டும். அல்லது நீதிமன்றத்திற்கு மனு செய்திருக்க வேண்டும். இறுதியில் நீதிமன்றத்தின் தீர்ப்பினை அனுசரித்து தண்டனைப்பணம் செலுத்தியிருக்க வேண்டும். இல்லையேல் என்ன நடக்கும்? குறிப்பிட்ட சில நாட்களின் பின்பு சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்பது கடிதத்தில் வரும்.

இந்த நிலையில் பிரச்சினையில்லை. உடனடியாக தண்டனை பணத்தினை செலுத்த வேண்டிய இடத்தில் போய் செலுத்தி, $150 டொலர் பணம் செலுத்தி (Driver's license reinstatement fees) அனுமதிபத்திரத்தினை மீள்பெறலாம். இதனையும் ஒரு வருடம் காலதாமதமாக



விட்டால் கண்பார்வை பரீட்சை (Vision test) மட்டும் நடக்கும். மூன்று வருடங்களுக்கு மேலானால் எழுத்துப்பரீட்சை மற்றும் வீதிப்பரீட்சைகளுக்கு தோற்றியே அனுமதிபத்திரம் புதுப்பிக்க வேண்டும்.

**வீதி ஒழுங்குகளை மீறி, அதிக புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை எதிர்கொண்டு அனுமதிபத்திரம் இழத்தல்.**
(license suspension for accumulation of too many demerit points on your record)
தண்டனை ரிக்கற்றுகளை குறிப்பிட்ட மூன்று வருடத்தினுள் அதிகமாக வாங்கி, புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் அதிகமாகும் போது முதலில் எச்சரிக்கை கடிதத்தில் வரும். இரண்டாவதாக நேரடியாக அழைத்து எச்சரிக்கை நடக்கும். நேரடி அழைப்புக்கு சமூகம் அளிக்க தவறினால் அல்லது புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் தொடர்ந்து ஒரு எல்லையினை மீறி அதிகரித்தால் சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகி விட்டது என்ற செய்தி கடிதத்தில் வரும்.

**வீதியில் வைத்தே சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்தல்**
(Road side license suspension)

மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டால் அல்லது மதுபோதை பரிசோதனைக்கு பொலிசாருடன் ஒத்துழைக்க மறுத்தால், அதே இடத்தில் வைத்து குறைந்தது ஒரு மாதத்திற்கு சாரதி அனுமதி பத்திரத்தினை பறிக்கும் சட்ட உரிமை பொலீசாருக்கு உண்டு.

அதுபோல மோசமான, ஆபத்தான வாகன ஓட்டம் (Careless or dangerous driving) செய்யப்போய் பிடிபடும்போதும் உடனடியாக அனுமதிபத்திரம் அந்த இடத்தில் வைத்து ரத்து செய்யும் உரிமை பொலிசார்க்கு உண்டு.

**நீதிமன்ற தீர்ப்பில் ரத்து செய்தல்**
(Court order suspension)

மதுபோதையில் வாகனம் செலுத்தியது உட்பட வாகனமோட்டும் கிரிமினல் குற்றங்களில் குற்றவாளி என்பது நிருபணம் ஆகும் போது, நீதிமன்ற தீர்ப்பில் அனுமதிபத்திரம் பறிமுதலாகும்.

**காலாவதியாகும் சட்ட ஒழுங்குகளை பின்பற்றத் தவறியதால் ரத்து செய்யப்படுதல்**
(Novice driver violation suspension)

G(1) மற்றும் G(2) அனுமதிபத்திரம் வைத்திருப்பவர்கள் தேவையான வீதிப் பரீட்சைக்கு தோற்றி தங்கள் அனுமதிபத்திரதை குறிப்பிட்ட காலத்தினுள் புதுப்பிக்கவேண்டும். இதேபோல சகலரும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை தங்கள் அனுமதிபத்திரத்தை நேரே சென்று புதுப்பிக்க வேண்டும். இவ்வாறு புதுப்பிக்கத் தவறினால் அனுமதிப்பத்திரம் காலாவதி யாகிவிட்டது என்பதே முடிவாகும்.

**ரத்து செய்யப்பட்ட நிலையில் வாகனம் செலுத்தி பிடிபட்டு மீண்டும் தொடர்ச்சியாக ரத்து செய்தல்**
(Suspension for drivers under suspension period)

அனுமதி இல்லாத ஒருவர் வாகனம் ஓட்டி பிடிபட்டால் ஒரு சிறுதண்டனை. ஆனால் சட்டரீதியாக தடை செய்யப்பட்டவர் தடை செய்யப்பட்டிருக்கும் காலத்தில் வாகனம் செலுத்தி பிடிபட்டால்

1. வாகனம் பறிமுதலாகி அது சிலகாலம் தடுப்பு காவலில் இருக்கும். மீளப்பெற அதற்கு ஒரு தொகை பணம்
2. தண்டனை பணம்
3. சில நேரங்கள் ஆறுமாத காலம் வரை சிறை தண்டனை
4. இவற்றுடன் மீண்டும் அனுமதி பத்திரம் மேலதிகமாக ஆறுமாதகாலம் ரத்து செய்யப்படும்.


TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974


# Super Rich...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

விலைகூடிய அடுக்குமாடி மனைகள் ($10 மில்லியனிற்கு மேற்பட்ட விலை) வாங்க பலர் இருப்பதாக தெரியவருகின்றது. அவர்களிற்கு ஏற்ப அடுக்குமாடி மனைகள் பற்றாக்குறையாகவே காணப்படுவதாக தெரிகின்றது. மேலும் இந்நிலைமை தொடரும் என்றே தெரிய வருகின்றது. மிக விரைவில் ரொறொன்ரோ நகரமும் உலகில் முன்னிலை நகரங்களில் ஒன்றாக இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. அந்தக்காலத்தில் ரொறொன்ரோ ஆதன விலையின் அதிகரிப்பும் இருந்தே தீரும் என்பதே பொருளாதார ஆய்வாளர்களின் எதிர்வு கூறல் ஆகும்.

### அண்மையில் நடந்த சில விலைகூடிய *Real Estate Transaction*

| | | | |
|---|---|---|---|
| May 2012 | One57 | 6 Bedrooms | $90மில்லியன் |
| July 2012 | One57 | 6 Bedrooms | $90 மில்லியன் |
| Feb. 2012 | 15 Central park west | 4 Bedrooms | $88 மில்லியன் |
| June 2012 | 50 Central park South | 4 bedrooms | $70 மில்லியன் |
| November 2012 | 785 5th Ave., | 7 Bedrooms | $54 மில்லியன |


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# காலத்தோடு வளரும் கணினிகள் -16

அன்பான வாசகர்களே!

ஒரு கணினியை இயங்கச் செய்வது (Booting-up) பற்றியும், கணினியைப் பயன்படுத்தியதன் பின்பு எவ்வாறு நிறுத்துவது (shutting-down) பற்றியும் கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேன்.



கணினிக்கு முற்றிலும் புதியவர்களின் நன்மை கருதி மேலும் சில செயன்முறைக் குறிப்புக்களை இங்கு குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். ஒரு கணினியை ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்தும் பொழுது ஒவ்வொருவருக்கும் பிறம்பான பயனர் களுக்கான (users) பயனர் கணக்குகளை (user accounts) ஏற்படுத்திக் கொள்வது நல்லது. பயனர் கணக்குகளை ஆரம்பிக்கும் பொழுது விரும்பினால் கடவுச் சொல்லையும் (passwords) சேர்த்துக் கணினியின் பிரத்தியேகத்தினை வலுவாக்கலாம். இதன் மூலம் வெவ்வேறு பயனர்களின் கோப்புக்கள் (files) பிரத்தியேகமானதாக இருக்கும். ஸ்ரார்ட் பட்டியில் (start menu) கீழ்ப் பகுதியில் காணப்படும் Log Off பட்டன் மூலம் ஏனைய பயனர்கள் கணினியை மீள ஆரம்பிக்காது மாறி மாறிப் பயன்படுத்திக் கொள்ளலாம். எல்லாப் பயனர்களும் ஒரே மென்பொருட்களைப் பாவித்தாலும் ஏனைய பயனர்களின் கோப்புக்களைப் பார்வையிட முடியாதவாறு இருக்கும்.

கணினியை இயங்கச் செய்ததும் அதன் வேகத்தைப் பொறுத்துச் சில செக்கன்களில் அல்லது நிமிடங்களில் திரையகத்தில் பல ஐகன்ஸ் (Icons) தோன்றும். இந்த ஐகன்களில் சாதாரண ஐகன்கள், ஷோர்ட்கட் ஐகன்கள் (shortcut icons) என இரண்டு வகையானவற்றைக் காணலாம். இயக்க மென்பொருள் Windows XP மூலம் இயக்கப்படுவதாகக் கருதிக்கொள்வோம். இது பொதுவாக நீலம் பச்சை நிறத்திரை யாகக் காணப்படும். நாங்கள் விரும்பினால் இந்த முகத்திரையில் பல வர்ணப் படங்கள் கொண்ட வோல்பேப்பேர்ஸ் (wallpapers) மூலம் அலங்கரிக்க முடியும். இயக்க மென்பொருள் வின்டோஸ்-7 (Windows 7) அல்லது விஸ்ரா (Vista) ஆக இருக்கும் பொழுது திரையகத்தில் தோன்றும் முகத்திரையில் (டெஸ்க்ரொப் Desktop) சிறிது வேறுபாடு காணப்படும். இது பற்றிப் பின்பு ஆராய்வோம். திரையகத்தின் அடிப்பகுதியின் கீழ் வரிசையில் இடது மூலையில் ஸ்ரார்ட் (START) பட்டன் இருக்கும். முகத்திரையில் ஸ்ரார்ட் (START) பட்டன் காணப்படும் கீழ் வரிசையினைப் பணிக்கடச் சட்டம் (ராஸ்க் பார் - Task Bar) என அழைப்போம். பொதுவாகத் திரை யகத்தின் கீழ்வரிசையில் பணிக்கடச் சட்டம் (ராஸ்க் பார்) காணப்பட்டாலும் இதனை நாங்கள் விரும்பினால் எத்திசையிலும் அசைக்க முடியும். குறியழுத்தி (மவுஸ் Mouse) துணையுடன் ஸ்ரார்ட் பட்டன் ஊடாகவே பட்டியில் (மெனுவில் menu) உள்ள கட்டளைகளைத் தெரிவு செய்வோம். ராஸ்க் பாரின் வலது மூலையில் காணப்படுவது அமைப்புத் தட்டு (சிஸ்ரம் ரே - System Tray) ஆகும். இதில் அமைப்புக் கடிகாரம் (சிஸ்ரம் கடிகாரம்- System clock), சில ஐகன்கள், போன்றவை காணப்படும். ராஸ்க் பாரில் ஸ்ரார்ட் பட்டனுக்கும், சிஸ்ரம்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# மனித உடலில் வெளிவரும் மர்மங்கள்!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

மனித உடலின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பிரதான நிலையம் தலையென்றால் அதனை உடலோடு இணைக்கும் பாலம் கழுத்தாகும். அந்தப் பகுதியைப் பாதிக்கும் கழுத்துவலி நோய் (Cervical Spondylosis) இப்போது ஏராளமானோர்களுக்கு வருகின்றது. சித்த மருத்துவத்தில் இதனை தோள்பட்டைவாதம் என அழைப்பதுண்டு.

தீராத மன உளைச்சல், நேரம் தவறிய உணவு, அதிக வேலைப்பழு, கம்யூட்டர், செல்போன், நீண்ட நேரம் வாகனம் ஓட்டுதல் என்று மாறிய இக்காலத்து வாழ்க்கை முறை என்ற காரணங்களால் இக்கழுத்துவலி ஏற்படுகிறது. இவைகளால் தான் முதுகுவலியும் (Back Pain) உருவாகின்றது. மேற்கூறிய காரணங்களால் குடலின் நீரானது அதிகம் சுரந்து செரியாமையை (Indigestion) ஏற்படுத்தி அதுபின் மலச்சிக்கலாக மாறும் போது குடலில் அபான வாயு உருவாகி குடல்நீரை மேல்நோக்கித் தள்ளுகிறது. இந்தக் குடல்நீர் ஆவியாகி சிரசை நோக்கி சென்று அங்கே தங்குகிறது. இதன் போதுதான் தீராத தலைவலிகள் பின்பகுதி நரம்புகள் வழியாக கீழ்இறங்கி கழுத்துப்பகுதிக்கு வரும்போது அங்குள்ள தசைகளும் நரம்புகளும் இறுக்கமடைகின்றன. பின் இந்த சூலை நீரானது தோள்பட்டையிலுள்ள வர்மமப்புள்ளிகளில் தங்கிவிடுகின்றன. இக்காரணங்கள்தான் நீடித்த தோள்பட்டை வலி, கழுத்துவலி, முழங்கைவலி என்பன உருவாகின்றன.

இத்தகைய வலிகளுக்கு ஆங்கில மருத்துவர்களை அணுகும்போது பெரும் பாலும் அறுவை சிகிச்சை (Surgery) மூலமாகவே குணப்படுத்தப் பரிந்துரைக் கின்றனர். ஆனால் வர்மப் புள்ளிகளை (Prestore Points) சரிவர இயங்கச் செய்யும் வர்ம மருத்துவத்தின் மூலம் சிகிச்சை ஏதுமின்றி இவற்றை குணப்படுத்த முடியும்.

பலவருடங்கள் பெண்கள் தண்ணீர் குடங்கள், பெரும்சுமையான பொருட்களைத் தலையில் சுமந்தும், ஆண்கள் நெல், அரிசி, மாவு போன்ற மூடைகளை தோள்களிலும் சுமந்து நெடுந்தூரம் சென்று வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் தோள்வலியும், கழுத்துவலியும் வரவில்லை. இக்காலத்தில் சொல்லப்படுவது போன்று எலும்பு தேய்மானத்தால் இந்த நோய்கள்



வருவதில்லை. எனவே கழுத்தெலும்பு மற்றும் முள்ளந்தண்டு தேய்வதால் கழுத்து வலி, முதுகுவலி வருகிறது என்பதனை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாது. எலும்பு முடிச்சுகள், தசைநார்கள் இவற்றில் சூலைநீர் பரவி இறுக்கம் கொள்வதால் பெரும்பாலும் இந்த வலிகள் தோன்று கின்றன. இந்த நிலைமைகளில் எலும்பு முடிச்சுகளில் தேங்கியுள்ள நீரை அகற்றுவதே சரியான சிகிச்சை முறை ஆகும். எனவே கழுத்துவலி, முதுகுவலி என்பவற்றிற்கு அறுவை சிகிச்சைதான் இறுதியான தீர்வென்று கருத்தக் கூடாது. இதனால்தான் வர்ம, சித்தி, ஆயுள்வேத சிகிச்சை முறைகளுக்கு இப்போது மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகம்.

வர்ம மருத்துவத்தைப் பொறுத்தமட்டில் நோயினால் பாதிக்கப்பட்ட வர்மபுள்ளிகளை சரிவர அறிந்த பின்பே சிகிச்சையளிக்க வேண்டும். நோயின் தாக்கம், வர்ம பாதிப்பு நோயாளியின் மனநிலை என்பனவற்றை முதலில் தெரிந்து கொள்வது முக்கிய மானது. உடலிலுள்ள 108 வர்மபுள்ளிகள் (Prestore Points) கழுத்து, தோள், முதுகுத்தண்டு போன்றவற்றின் சமநிலைத் தன்மையைக் காக்கும் வர்மப் புள்ளிகளை அறிந்தபடி பொருத்தமான தைலங்கள் கொண்டு தடவி நோயாளியின் நாடித் துடிப்பிற்குத் தகுந்தவாறு வலது புறமாகவும், பின்இடது புறமாகவும் கைவிரல்களினால் மாறி மாறி அழுத்தவேண்டும். இதனை தினமும் ஒருதடவை செய்துவர நோயின் பாதிப்பு குறைந்து வருவதை அவதானிக்க முடியும். இந்த முறையைப் பின்பற்றி உடலின் வேறு பகுதிகளில் ஏற்படும் நோய்களுக்கும் சிகிச்சையளிக்க முடியும். இது எந்தவித பக்க விளைவுகளும் இல்லாத சிகிச்சைமுறையாகும்.

மேலும் இவ்வகையான சிகிச்சை மூலம் நோய் முற்றாக நீங்கிவிடும் என்று நினைப்பது தவறு.

### உணவுமுறை

கழுத்துவலி, முகுதுவலி, முழங்கால்வலி போன்றவற்றிலிருந்து விடுபட உணவுத் திட்டத்திலும் பல மாற்றத்தை கொண்டு வருவது அவசியம். வாதத்தையும், வாயுவையும் உருவாக்கக்கூடிய உணவு களை தவிர்ப்பது சிறந்து. மலச்சிக்கல் வராது பார்க்க வேண்டும்.

1. அளவுமீறி சாப்பிடுவது
2. அவசரத்தில் சாப்பிடுவது
3. பழைய, புளித்த உணவுகளை சாப்பிடுவது
4. நின்றபடி, நடந்தபடி சாப்பிடுவது
5. அடிக்கடி சாப்பிடுவது
6. நீண்டநேரம் பட்டினி இருந்து சாப்பிடுவது

இவற்றை முடிந்தவரை தவிர்க்கவும்.

### யோகா மூச்சுப்பயிற்சி

எனது அனுபவத்தில் தினமும் சிறிது நேரமாவது யோகா (Yoga) செய்து வருபவர்களுக்கு எந்தவகையான மூட்டு வலியும் அணுக வாய்ப்பில்லை.



ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm
416.617.5721


TBC Toronto Business College

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 weeks

Business Administration
26 weeks

Computerized Accounting
26 weeks

Medical Office Administrator
32 weeks

Personal Support Worker
26 weeks

SECOND CAREER
WHO IS ELIGIBLE?
★ Currently Receiving EI
★ Laid off after 2005 working less than 20 hours/week
★ Received maternity / Parental benefits within last 3 years
Eligible for Tuition Fees,Books, Living Expenses,Day care & Transportation up to $28000

Certificate Courses
Windows,Word,Excel,Power Point,Access
Quick Books,Simply Accounting,Accpac
Bank Teller, Online Stocks & Options Trading

416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ), Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)





YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்






மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்





GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# ஓடும் நீர் உறைவதில்லை 162

## உண்மை பொய்யாகும் மாயம்

பொய் என்றால் என்ன என்பதற்கு நாம் பல்வேறு வகையான விளக்கங்களைக் கொடுக்கின்றோம். இவ்வாறான விளக்கங் களில் ஏறத்தாழ அனைத்துமே பொருத்த மற்றவையாக அமைகின்றன. உதாரணமாக, ஒருவர் என்னிடமுள்ள பணத்தை எனது அனுமதியின்றி எடுப்பது களவு. அவரிடம் "எனது பணத்தை எடுத்தீர்களா? என்று கேட்கும்போது இல்லை என்று கூறுவது மறைத்தல். ஆனால் பொய் என்றுதான் நாம் கருதுகிறோம். உண்மையில் அது பொய் அல்ல. அது மறைத்தல். இவ்வாறே ஏமாற்றுதல், போலித்தனம், முன்னுக்குப் பின் முரணாகக் கூறுதல் என்பன பொய் அல்ல என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். காலம் காலமாக, தலைமுறை தலைமுறையாக பொய் என்பதற்கான விளக்கம் புரியப்படாமை யால் பொய் என்பது பல பிரிவுகளைக்



கொண்ட ஒரு பொதுச் சொல் என்றாகி விட்டது.

பல சந்தர்ப்பங்களில் பொய் என்பதற்கு "உண்மைக்கு எதிரானது, உண்மைக்கு மாறானது, உண்மை அல்லாதது என்ற விளக்கம் தரப்படுகின்றது. இங்கே உண்மை என்பது அடித்தளமாகப் பயன்பயன்படுத்தப் படுவதை அவதானித்தல் அவசியம். இந்த விளக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமா யின் நாம் உண்மை என்றால் என்ன என்பதை ஐயத்துக்கு இடமின்றிப் புரிந்து கொள்ளல் வேண்டும். உண்மை என்பது "உள்ளது உள்ளபடி உள்ளமை" என்பதாகும். "எது எதுவோ அது அதுவாக இருத்தல்" என்றும் கூறலாம். அதாவது இருப்புத் தன்மையே உண்மை. இந்த உண்மையை நாம் உள்ளுணர்வால் மட்டுமே உள்வாங்கிக்கொள்ள முடியும். அதாவது உள்ளதை உள்ளபடி உள்ளுணர்வால் உள்வாங்குவதற்கு வாய்ப்பளிப்பதே உண்மையாகும். உண்மை உணர்வு சார்ந்தது மட்டுமே.

இப்போது நாம் பொய்யை மிகவும் இலகுவாக இனங்காணலாம். உண்மை என்பது உள்ளுணர்வு சார்ந்தது மட்டுமே. இந்த உள்ளுணர்வுக்கு வார்த்தை கிடையாது, வடிவம் கிடையாது, வரலாறு கிடையாது, அபிப்பிராயம் கிடையாது, விளக்கம் கிடையாது, விவாதம் கிடையாது, ஒப்பீடு கிடையாது. எனவே ஒருவரது உள்ளுணர்விற்கு அவராலோ அல்லது பிறராலோ கொடுக்கப்படும் எந்த ஒரு வடிவமும் பொய் ஆகும். சிறப்பாகக் கூறுவதாயின், உண்மைக்கு வடிவம் கொடுப்பதாலும், உண்மை என வடிவம் கொடுப்பதாலும் உண்மை பொய்யாகி விடுகின்றது. எனவே உள்ளுணர்வால் உண்மையை உள்வாங்குவோம். அப்போது தான் உண்மையைப் பொய்யாக்கும் மாயத்தில் இருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியும்.

• • • • •

## முழுமையான சுதந்திரம்

முழுமையான சுதந்திரம் என்பது எந்தவிதமான இடையூறுகளுமின்றி ஒருவர் தனது நடவடிக்கையை மேற்கொள்வதற் கான முழுமையான வாய்ப்பாகும். ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவனாக இருந்தாலும் பிறர் நன்மை கருதியோ, அல்லது சமுதாய ஒழுங்கு முறை கருதியோ சட்டவிதிகள், கொள்கைகள், கோட்பாடுகள், முன் நிபந்தனைகள், பண்பாட்டு முறைகள், கலாச்சார வழிமுறை கள் எனப் பலவற்றால் கட்டுப்படுத்தப்படு கின்றான். இங்கே கட்டுப்படுத்தல் என்பது வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமா கவோ குறிப்பிட்ட வழிமுறைகளூடாகவே வாழ்க்கையை நகர்த்துவதற்கான அனுமதி கொடுக்கப்படுவதாகும். தனிப்பட்டமுறையில் ஒருவர் மேற்கொள்ளும் நடவடிக்கையானது மற்றவர்கள் மீது சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறதா அல்லது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறதா என்பதை இனங்கண்டு கொள்வதற்கு ஒவ்வொரு மனிதனையும் உசார் நிலையில் வைத்திருப்பவையே இந்தக் கொள்கைகள், கோட்பாடுகள், முன் நிபந்தனைகள், விதிமுறைகள், பண்பாடுகள் என்பனவாகும். இவை நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், கலாச்சாரத்துக்குக் கலாச்சாரம் வேறுபட்டிருப்பதும் கவனத்தில் கொள்ளற் படல் வேண்டும்.

ஒரு மனிதனது வாழ்வியல் சுதந்திரம் பல்வேறு வழிகளால் கட்டுப்படுத்தப்படு வதால் முன் நிபந்தனைகள் ஏதுமற்ற முழுமையான சுதந்திரத்துடன் எதையாவது செய்ய முடியுமா என்ற வினாவுக்கு "முடியாது" என்பதே பலரது விடையாக அமைகின்றது. உண்மையில் இந்தக் கருத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளல் அவசி யம். ஏனெனில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நகர்வும் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ள பாதையூடாகவே மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அல்லது தேவைப்பாடு உள்ளது. ஒருவரது செயற்பாட்டுக்கான சமூக அங்கீகாரம் என்பது முன்னர் குறிப்பிட்டுள்ள கொள்கைகள், கோட்பாடு கள், தத்துவங்கள், விதிமுறைகள் சார்ந்ததாகவே அமைகின்றன. அதுமட்டு மன்றி, தனிமனிதனுக்கு புதிய பாதை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான அனுமதி என்பது நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே முழுமையாக மறுக்கப்பட்டும் உள்ளது.

ஆனாலும், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒருவிடயத்தில் முழுமையான சுதந்திரத்து டன் செயற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்பதை உறுதிப்படுத்துவதே எனது நோக்கமாகும். அதாவது வாழ்க்கையின் ஒவ்வொரு நகர்வையும், ஒவ்வொரு அனுபவத்தையும் தனக்குள்ளே சொர்க்கம் ஆக்குவதற்கோ அல்லது நரகம் ஆக்குவதற்கோ பூரண சுதந்திரம் உண்டு என்பதுவே அதுவாகும். இதுவே ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைத்துள்ள பரிபூரணமான சுதந்திரமாகும். எமது வாழ்க்கையின் பிரதி-பலிப்பாக அமைவதும் இந்த சுதந்திரத்தின் வெளிப்பாடே என்பதும் கவனத்தில் கொள்ளற்பட வேண்டிய முக்கியமான விடயமாகும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

KG Master
--www.kgmaster.com
- www.facebook.com
- kgmaster.yourlifecoach



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்
On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# காலத்தோடு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ரேக்கும் இடையில் பயன்படுத்தப்படும் கோப்புக்களின் பெயர்கள் காணப்படும். கணினியில் ஒரு மென்பொருளைப் பயன்படுத்தும்பொழுது மென்பொருளின் பெயரும் கோப்புக்களின் பெயருடன் சேர்ந்து காணப்படும். கணினியில் ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட மென்பொருட்களைப் பயன்படுத்தும் பொழுது எல்லா மென்பொருட்களின் பெயர்களையும் ராஸ்க் பாரில் பார்க்கலாம்.

சேமிக்கப்பட்டுள்ள கோப்புக்களைப் பார்வையிட முடியும். My Computer என்பதைத் தெரிவு செய்தால் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ள நிலைவட்டையும் ஏனைய இரண்டாந்தரச் சேமிப்பகங்களையும் பார்வையிடலாம். Printers and Faxes என்பதைத் தெரிவு செய்வதன் மூலம் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ள அச்சுப்பொறி (பிறின்ரர் - Printer) இனைப் பார்க்கலாம். கணினியுடன் புதிய அச்சுப்பொறியினை இணைத்துக் கொள்வதற்கும் இதனையே தெரிவு செய்ய வேண்டும். இந்தப் பட்டியியலில் (menu) காணப்படும் கட்டுப்பாட்டுப் பலகம் (கொன்ரோல் பனல்



இதனைத் தெரிவு (கிளிக் - Click) செய்யும் பொழுது தோன்றும் பட்டியியலில் (மெனுவில் - Menu) இரண்டு நிரல்கள் காணப்படும். இரண்டாவது நிரலில் ஒன்றன் கீழ் ஒன்றாக My Documents, My Pictures, My Music, My Computer, My Network places, Control Panel, Printers and Faxes போன்ற கட்டளைகள் இருக்கும். எங்களின் கோப்புக்கள் (பைல்ஸ் - Files) My Documents என்ற போல்டர் (Folder) உள்ளேயே சேமிக்கப்படுவது வழக்கம். தேவைக்கேற்ப சப் போல்டர்கள் (Sub Folders) உருவாக்கியும் கோப்புக்களைச் சேமித்துக் கொள்ளலாம். டெக்ஸ்ரொப் இலும் கோப்புக்களைச் சேமிக்க முடியும் என்றாலும் இதனைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. டெக்ஸ்ரொப் இல் அதிக கோப்புக்களைச் சேமிக்கும் பொழுது கணினியின் வேகம் குறைந்து விடுவது வழக்கம். My Pictures என்ற போல்டரில் படங்களைச் (pictures) சேமித்து வைப்பது வழக்கம். My Music என்ற போல்டரில் ஒலி, ஒளி வடிவக் கோப்புக்களையும் (sound and video files) சேமித்து வைப்பது வழக்கம். எனவே மெனுவில் உள்ள My Documents, My Pictures, My Music போன்றவற்றை குறியழுத்தி மூலம் தெரிவு செய்து

Control Panel) இனைத் தெரிவு (கிளிக் click) செய்யும்பொழுது கட்டுப்பாட்டுப் பலகப் பட்டி (Control Panel Menu) தோன்றும். இது மிகவும் முக்கியமானதாகும். இந்தப் பட்டியியலில் கணினி பற்றிய பல தரவுகள், எழுத்துருக்கள், நினைவகத்தின் கொள்ளளவு போன்ற பல தகவல்களைப் பார்வையிடுவ தற்குரிய பல கட்டளைகள் உள்ளன.

ஸ்ராா்ட் மெனுவில் (start menu) கீழே இடது பக்கத்தில் காணப்படும் all programs என்ற கட்டளையைத் தெரிவு செய்யும்பொழுது கணினியின் நிலைவட்டில் உள்ள எல்லா மென்பொருட்களின் பட்டியலும் வரும். விரும்பிய ஒரு மென்பொருளைத் தெரிவு செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு மென்பொருளின் shortcuts ஐகன்களை முகத்திரையில் வைத்திருந்தால் அவற்றைத் தெரிவு செய்வதன் மூலம் தேவையான மென்பொருளைத் திறந்து கொள்ளலாம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.


Trinity Events

மாசி 21, 2013

இசைஞானி ரசிகர்களே,

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற எங்கேயும் எப்போதும் ராஜா நிகழ்வுக்கு கொட்டும் பனியையும், அரங்கம் நோக்கிய வீதியில் ஏற்பட்ட தடையையும் பொருட்படுத்தாது, உலகெங்கிலும் இருந்து வருகை தந்த அனைத்து ரசிகப் பெருமக்களுக்கும் Trinity Events தனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறது.

பரம ரசிகர்களாகிய உங்கள் திடமான ஆதரவு இல்லாமல் இந்நிகழ்ச்சி ஒரு வெற்றி நிகழ்ச்சியாக அமைந்திருக்காது. Rogers Centre இன் வரலாற்றிலேயே முதன் முறையாக ஒரே மேடையில் 120 இசைக்கருவிகள் மற்றும் ஒலிவாங்கிகள் அமையப்பெற்றது இந்நிகழ்ச்சியில் தான். இந்த ஒரு வரலாற்று சான்று ஒட்டுமொத்த புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் தராதரத்தை உயர்த்தி, அனைத்து தமிழர்களுக்குமே பெருமை சேர்த்திருக்கிறது.

திட்டமிட்டபடி இசைஞானி இளையராஜா தனது நிகழ்ச்சியை 7 மணிக்கே ஆரம்பித்து ஏறத்தாள நான்கரை மணி நேரம் அனைவரையும் இசை வெள்ளத்தில் ஆழ்த்தினார். மாலை 5 மணி முதல் 7 மணி வரை இடம்பெற வேண்டிய நிகழ்வினில் பங்கு பெற வேண்டிய பல பிரமுகர்கள், வானிலை இடையூறுகள் மற்றும் விழா மண்டபத்திற்கான வீதித்தடைகள் காரணமாக குறிப்பிட்ட நேரத்துக்கு வர முடியாமல் போனது, நிகழ்ச்சியில் தொய்வு ஏற்பட காரணமாய் அமைந்தது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சில கலைஞர்கள் இறுதி நேரத்தில் நிகழ்சிக்கு வராமல் தவிர்த்ததால், ரசிகர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றதுக்காக Trinity Events நிறுவனம் வருத்தம் தெரிவிக்கிறது.

Canadaவின் அரசியல் தலைவர்கள், கனடிய தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களையும், கலை நயத்தையும் அறிவதோடு நம் இசைஞானியை வரவேற்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலும் இந்நிகழ்சிக்கு Canadaவின் சகல கட்சிகளையும் சேர்ந்த மூத்த சில அரசியல் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இறுதியாக, இந்நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்கிய அனைத்து விளம்பரதாரர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், மிகவும் பொறுமையுடன் வீற்றிருந்த நேயர் பெருமக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

Trinity Events நிறுவனம்



## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

### பெருமையுடன் வழங்கும்

# மகுடம் - 2013

## பல்சுவை கலை நிகழ்வு

மக்களால் நன்கு அறியப்பட்ட அனுபவமிக்க நடன ஆசிரியர்களின் மாணவர்கள் வழங்கும் நடனங்கள், நாடகங்கள், திரை இசை நடனங்கள், மெகா ரியூனர்ஸ் (Mega Tuners) இசைக்குழுவின் இன்னிசை மழை மற்றும் பல நிகழ்வுகள்.

காலம் : *March 23 , 2013*
நேரம் : மாலை 5:30 மணி
இடம் : Armenian Youth Centre, 50 Hallcrown Place, Toronto (Victoria park & HWY 401)

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: **416.414.3327** **416.299.6645** **416.283.5265** **416.283.1439** **416.296.7037** **647.894.6467**



## COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

# அபத்தம்! ஆச்சரியம்! ஏமாற்றம்!

மாசி 16, 2013 ரொரண்ரோ பெரும்பாக தமிழர் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த நாள். மாலை 5 மணிக்கு தமிழ் திரை இசை மேதை இளையராஜாவின் மாபெரும் இசை நிகழ்ச்சி. இதனை நினிற்றி அமைப்பினர் மிகவும் நேர்த்தியுடனும் பல சிரமங்களின் மத்தியிலும் ஏற்பாடு செய்திருந்தனர். கடந்த வருட பிற்பகுதியில் நடைபெற விருந்த நிகழ்வு பின்னர் பிற்போடப்பட்டது. நுழைவுச் சீட்டு வாங்கிய பலர் தமது பணத்தை மீளப் பெற்றுக்கொண்டனர். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம். பலர் மீண்டும் நிகழ்வு நடைபெறும் என்ற நம்பிக்கையில் நுழைவுச் சீட்டை வைத்திருந்தனர். அவர்கள் ஏமாற்றப்படவில்லை. ஒரு நிகழ்ச்சியை நடத்துவது என்பது இலகுவானதல்ல. ஏற்கனவே நிகழ்ச்சி பிற்போட்டதால் ஏற்பட்டுள்ள பண இழப்பு என்பதெல்லாம் நிகழ்ச்சி அமைப்பாளர்களின் தலையிலேயே விழும். அதுமட்டுமல்ல ஒரு பெரிய இசைக்குழுவை அழைத்து அவர்களுக்குரிய வசதிகள் செய்து கொடுத்து அவர்களை மேடையேற்றி ஒப்புவிப்பது என்பது இலகுவானகாரியமல்ல. இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்ட நினிற்றி அமைப்பினரின் சிரமங்களை கவனத்திற் கொள்கின்றோம். அதனால்தான் அதற்கான விலையையும் மக்கள் கொடுக்க தயாராகவிருந்தார்கள்.

நானும் சாதாரண பார்வையாளனாக அன்று காலையிலேயே நிகழ்ச்சிக்கு போவதற்கான ஆயுத்தங்களை மேற்கொண்டேன். நானும் எனது குடும்பத்தினரும் றோஜர்ஸ் சென்ரருக்கு முதற்தடவையாக இப்பொழுது தான் செல்கின்றோம். எங்கு வாகனத்தை பாதுகாப்பாக நிறுத்துவது போன்ற விடயங்களை இணையத்தளத்தில் தேடி சில விபரங்களை பெற்றுக்கொண்டு ஒரு சில நண்பர்களின் வாகனத்தை பின்பற்றி நான்கு மணிக்கு 5 நிமிடங்கள் இருக்க சிம்கோ வீதியில் உள்ள கார்தரிப்பிடத்தை அடைந்தோம். கடும் குளிர். பனிப்பொழிவு வேறு. இதற்கு மத்தியில் இந்நிகழ்வு தேவைதானா? என்ற கேள்வி எனது மனதில் எழுந்தது. இசையை இரசிப்பேன். ஆனால் வெறித்தனமெதுவுமில்லை. நாங்கள் மண்டபத்தை 4.05க்கு சென்றடைந்து விட்டோம். ஆச்சரியமெதுவெனில் எனது நண்பர்கள் சிலர் கடந்த வருட பிற்பகுதியிலேயே 150 டொலர் ரிக்கெற் வாங்கியிருந்தார்கள். நான் குடும்பத்தினரின் வற்புறுத்தலுக்கிணங்க கடைசி நேரத்தில் ரொரண்ரோ பெரும்பாக சதுக்கத்தில் (ஜி.ரி.ஏ) நிகழ்ச்சிக்கு முதல்நாள் 10 நண்பர்களை இணைத்து நுழைவுச் சீட்டுக்களை பெற்றுக் கொண்டேன். நான் ஒரு நுழைவுச் சீட்டுக்கு 60 டொலர்களையே கொடுத்திருந்தேன். எனது நண்பன் எனக்கு பின் 2 வரிசைகள் தள்ளி தனது குடும்பத்தினருடன் உட்கார்ந்திருந்தார். நுகர்வோர் விதிகள் பிரகாரம் எனது நண்பனுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவர் நுழைவுச் சீட்டு வாங்கும் பொழுது 10 நுழைவுச் சீட்டு வாங்கினால் (150 டொலர் சீட்டு) மொத்தம் 600 டொலர் (ஒன்றுக்கு 60 டொலர்) என்ற விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை. இதற்காக அவர் நட்டஈட்டுக்கான நடவடிக்கைகளில் இறங்கலாம். என்னைப் போன்றோர் இனி வரும் தமிழ் நிகழ்வுகளுக்கு இறுதி நாள் வரை நுழைவுச் சீட்டு வாங்காமல் காத்திருப்போம். 100 டொலர் சீட்டு 40க்கு கிடைக்கலாம். ஒரு தவறான முன் மாதிரியை ஏற்படுத்தி ஆச்சரியப்படுத்தி விட்டீர்கள்.

**மாயோன்**

நான்கு மணியிலிருந்து ஐந்து மணி வரை ஆவலுடன் காத்திருந்தோம். விஜய் தொலைக்காட்சியின் விளம்பரங்களுடன் நேரம் கடந்து கொண்டிருந்தது. பின்னர் நீயா நானா கோபிநாத், மற்றும் நிதா நேரத்தை கடத்திக் கொண்டிருந்தார்கள். சரியாக 7:10க்கு இளையராஜாவின் இசை நிகழ்ச்சி இனிதே ஆரம்பமானது. தொடர்ந்த நான்கு மணி நேரங்களில் 45 நிமிடங்களுக்கு மேல் அரசியல் வாதிகள் எடுத்துவிட்டார்கள். போதாக்குறைக்கு பார்த்திபனும் நேரத்தை தனதாக்கி விட்டார். சினேகா வேறு காதலுக்காக கால்களில் விழுந்து எங்கள் கண்களை குழமாக்கிவிட்டார். நிகழ்ச்சி விளம்பரங்களில் பார்த்திபன், சினேகா சமூகளிப்பார்கள் என குறிப்பிட்டு இருந்தபடியால் இவ் விடயத்தில் உங்களை குறைகூறமுடியாது. நிகழ்வு அன்று காலை விஜய் தொ.காவில் மனோ வருவதாக விளம்பரப்படுத்தினீர்கள். அவரும் இல்லை. வேறு பலரும் இல்லை. அது பற்றி நிகழ்வு முடியும் வரை மௌனம் காத்தீர்கள். ஒருவர் நுழைவுச் சீட்டு வாங்கும் பொழுது உங்களது இணையத்தளம், விளம்பரங்கள் போன்றவற்றில் குறிப்பிட்டுள்ள விபரங்களை மனதிற் கொண்டே



வாங்குகின்றார். இவ்வாறான விளம்பர மீறல்களும் நுகர்வோர் விதிகளை மீறுகின்றன. தமிழ்ச் சமூகம் இவ் விடயங்களில் மென்மையானது. நிகழ்ச்சியின் பின்னர் இணையத் தளங்களிலும் முக நூலிலும் நிகழ்வுக்கு எதிரான கருத்துக்கள் பிரசுரமாகியிருந்தன. அதன் பின்னர் நண்பர் ஒருவர் உங்களது ஊடக அறிக்கையை அனுப்பியிருந்தார். ஐந்து மணியில் இருந்து ஏழு மணிவரை நடைபெறவேண்டிய நிகழ்வு பல பிரமுகர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு வரமுடியாமல் போனதால் நடைபெறவில்லை எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். அது என்ன நிகழ்வு என நீங்கள் தெளிவுபடுத்தவுமில்லை. நாங்கள் இசை நிகழ்ச்சி ஒன்றுக்கே நுழைவுச் சீட்டு வாங்கியிருந்தோம். றோஜர்ஸ் அரங்கிற்கு 10 நிமிட நடக்கும் தொலைவில் உள்ள றோயல் அலெக்சாண்ரியா அரங்கிலோ, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அரங்கிலோ ஒரு நிகழ்விற்கு ஐந்து மணிக்கு சென்றிருந்தால் 9 மணிக்கு வீட்டில் நித்திரை கொள்ளலாம். கொடுத்த பணத்திற்கான முறையான நிகழ்ச்சியை பார்த்த மன நிறைவும் கிடைத்திருக்கும்.

நீங்கள் பல விடயங்களை பார்வையாளர்களுக்கு தெளிவு படுத்தவில்லை. எனவே நான் இங்கு முன்வைக்கும் கேள்விகளுக்கு உங்களிடமிருந்து விடைகளை ஒரு பார்வையாளனாக எதிர்பார்க்கின்றேன். 'அரசியல்வாதிகளை அரங்கேற்றி சர்வகட்சி மாநாடாக மாற்றியமைக்கான காரணங்கள் என்ன? நிகழ்வில் 45 நிமிடங்களுக்கு மேல் இவர்கள் ஆக்கிரமித்து விட்டார்கள். ஒரு இசை நிகழ்ச்சியில் சர்வகட்சி மாநாட்டையே நடத்தி சாதனை புரிந்துள்ளீர்கள். உங்களது சாதனைக்கு வாழ்த்துக்கள். நீங்கள் இசை மேதை என அழைக்கப்படும் இளையராஜாவையே இதன் மூலம் அவமானப்படுத்தியுள்ளீர்கள்.

• உங்களுக்கும் விஜய் தொலைக்காட்சிக்குமான ஒப்பந்தங்கள் என்ன? அவர்களா நிகழ்ச்சியை நடத்தினார்கள்? இந் நிகழ்வு விஜய் தொலைக்காட்சிக்கான இளையராஜா இசை நிகழ்வா? அல்லது என்னைப் போன்ற சாதாரண பார்வையாளர்களுக்கான நிகழ்வா?

• அங்கு வந்திருந்த சுமார் 25,000 பார்வையாளர்களை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்? மக்களை மந்தைகள் போன்று நடத்தியமை மனவருத்தத்தை ஏற்படுத்துகின்றது. நிகழ்வின் தாமதத்திற்கு மன்னிப்பு கூட கேட்கவில்லை. சுமார் 90 வீதமான பார்வையாளர்களுக்கு இந்த மண்டபம் புதியது. சுமார் 5 மணிக்கு 80 வீதமான பார்வையாளர்கள் அரங்கில் நிறைந்திருந்தார்கள். திருமண வீட்டிற்கே தாமதமாக போகும் பலர் 4 மணிக்கே மண்டபத்திற்கு வந்து விட்டார்கள். அன்று வேறு ரொரண்ரோ மேப்பிள் லீவ் அணியினருக்கும் ஒட்டாவா செனட்டர் அணியினருக்கும் கொக்கி ஆட்டம் நடைபெற்றது. இதனால் கார் தரிப்பிடம் பெற பலர் அவதிப்பட்டனர். புகையிரத நிலையத்திலிருந்து 10 நிமிடங்கள் நடந்தால் தான் மண்டபத்தை அடையலாம். பலர் குழந்தைகளுடன் வந்திருந்தனர். இவர்களது சிரமங்களை நீங்கள் அறிந்துள்ளீர்களா? சிரமங்கள் அவர்களது தேர்வாயினும் அதற்கான சேவையை நீங்கள் வழங்கத் தவறிவிட்டீர்கள்?

• நுழைவுச் சீட்டை விட சுமார் 30-50 டொலர்களுக்கு மேல் ஒவ்வொருவரும் செலவழித்துள்ளார்கள். கார்தரிப்பிடம் 20-30 டொலர்கள், தண்ணீர்ப் போத்தல் 4 டொலர்கள். சாப்பாடு 7 டொலர்களுக்கு மேல். இது பார்வையாளனின் சுய தேர்வு என்பது உண்மையே. ஆனால் ஆறரை மணி நேரம் ஒரு மண்டபத்தில் செலவழித்த பார்வையாளனுக்கு இறுதியாக கிடைத்தது என்ன? அவனது பணத்தின் பெறுமதிக்கான நிகழ்வை நீங்கள் கொடுத்துள்ளீர்கள் என நினைக்கின்றீர்களா?

• தமிழன் என்றாலே தாமதம் என்பது ஒட்டிப் பிறந்தது என்பதை மீண்டும் நீங்கள் நிரூபித்துள்ளீர்கள். திருமண விழாவில் இருந்து இலக்கியக் கூட்டம், புத்தக வெளியீட்டு விழா எல்லாமே தாமதம். நீங்கள் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டது போல் சரித்திர சான்றை நிறுவியுள்ளீர்கள். இப்பொழுதாவது மனந்திறந்து கூறுங்கள் தாமதத்திற்கான காரணம் என்ன?

• கனடாவின் அரசியல் தலைவர்கள் கனடிய தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் கலை நயத்தையும் அறிய வேண்டும் என்ற நோக்கோடு சகல கட்சி அரசியல் தலைவர்களையும் அழைத்ததாக ஊடக அறிக்கையில் வேறு விளக்கம் கொடுத்துள்ளீர்கள். நன்று கனடிய தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களை இளையராஜாவின் இசை நிகழ்ச்சியின் மூலம் கனடிய அரசியல் தலைவர்கள் அறியலாம் என்று உங்களுக்கு எந்த மேதை தெரிவித்தார்?

• வந்திருந்த முக்கட்சி அரசியல் வாதிகளில் சிலர் தமிழர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழர்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேல் கனடாவில் வாழ்கின்றார்கள். இந்த

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

Accounting & Tax Services
• Book keeping • Preparation of monthly & year - end financial statements • Filing of annual corporate returns • Payroll
• Periodical HST & WSIB returns • Personal tex planning & preparation of returns • CRA audit representation
Guru: 647.400.8730 / Nithi: 416.219.4902
E-mail: accounting.taxservices@hotmail.com

# எழு சுடராய் நின்ற சிவனே போற்றி!

**பிரமன் மாலறியாத பெருமையன்**
**தருமமாகிய தத்துவனெம் பிரான்**
**பரமனாருறை பாண்டிக் கொடுமுடி**
**கருமமாகத் தொழுமட நெஞ்சமே**

பெரியர் சிறியர் பேதம் பெருமைக்குரிய கடவுளர்களையும் விட்டு வைக்கவில்லைப் போலும். நீயா, நானா பெரியவன் என்ற பிணக்கு படைத்தற் கடவுளாகிய பிரமனுக்கும், காத்தற் கடவுளாகிய திருமாலுக்கும் இடையில் ஏற்பட்டது. பிரமா அன்னப்பறவையாக உருவெடுத்து மேல் நோக்கிப் பறந்து இறைவனது சடாபாரம் இலங்கும் முடியை தேடிக் காணப்புறப்பட்டார். திருமால் பன்றி உரு எடுத்து நிலத்தைக் குடைந்து இறைவனது திருவடித் தாமரையான அடியை கண்டு கொள்ளப்புறப்பட்டார். இதுவே அடிமுடி தேடிய படலமாகும். மூலமூர்த்தியான சிவனது அடிமுடி அவர்களுக்கு தென்படவில்லை. எனவேதான் பிரமன், மால் அறியாத பெருமையன் பிறைசூடிய பெம்மான் என்று பாடியுள்ளார் நாவரசர். இருவரின் அகந்தையை அடக்கி ஆட்கொள்ள அவர்கள் மத்தியில் ஒளிப்பிழம்பாகத் தோன்றினார் சிவன். அச்சோதி தோன்றிய இரவே மகாசிவராத்திரியாகும். சிவனுக்குரிய விரதங்களில் மிகவும் சிறப்புடையதாகக் கருதப்படுவது மகாசிவராத்திரி விரதம். சிவனுக்குரிய சிறப்பான இரவு இதுவாகும். ஒவ்வொரு கற்பகால முடிவிலும் சிவன் பிரளயத்தை உருவாக்கி உயிர்கள் அனைத்தையும் சங்கரிக்கும் நாளே மகாசிவராத்திரியாகும். நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மாத சிவராத்திரி, மகாசிவராத்திரி என சிவராத்திரி ஐந்து வகைப்படும். மாசி மாதத்து தேய்பிறை பதினான்காம்நாள் (கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில்) அநுட்டிக்கப்படுவது மகாசிவராத்திரி விரதம்.

**பிரமனரியென்றிருவரும் தம்பேதமையாற்**
**பரமம் யாம் பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க**
**அரனார் அழலுருவாய் அங்கே அளவிரந்து**
**பரமாகி நின்றவா தேனோக்கம் ஆடாமோ**
**என்பது மணிவாசகர் திருவாசகம்.**

பிரமாவிற்கும் அரிக்கும் அகப்படாத ஆண்டவன் நீள நினைந்து அன்பில் குழைந்து அகம் நெக்குருகும் அடியவருக்கு எளிதில் அகப்படுவான் என்பது அவனது சிறப்பியல்பாகும். அகந்தைக்கு அப்பாற்பட்டவன் சிவன்.

**திருமாலும் பன்றியாய்ச்**
**சென்றுணராச் திருவடியை**
**உரு நாம் அறியவோர்**
**அந்தணனாய் ஆண்டு கொண்டான்**
**ஒரு நாமம் ஓருருவம்**
**ஒன்று மில்லாற்கு ஆயிரம்**
**திருநாமம் பாடி நாம்**
**தெள்ளோணம் கொட்டாமோ**



அன்பரால் மட்டுமே அறியக் கூடிய சோதியனான இறைவனது இணையடிகள் பக்தர்களின் தரிசனத்திற்கு மட்டுமே காட்சி தருவன. எனவே சோதியின் சோபையில் தம்மை இழந்த அரி, பிரமன் சிவனைத் தொழுது வணங்கினர்.

**அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை**
**அந்தகனுக்குக் கந்தகனை அளக்கலாகா**
**எரிபுரியுமிலிங்க புராணத் துளானை**
**எண்ணாகிப் பண்ணாரெழுத்தனானைத்**
**திரிபுரஞ் செற்றொரு மூவர்க்கருள் செய்தானை**
**சிலந்திக்கும் அரசளித்த செல்வன் தன்னை**
**நரிவிரவு காட்டகத்திவாடலானை**
**நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே**

சிவராத்திரியின் போது புறத் தூய்மையுடன், உளத் தூய்மையராய் திருவைந்தெழுத்து ஓதல், சிவன் கோயில் தரிசனம், சிவபூசை செய்தல், திருமுறைகள் ஓதுதல், கூட்டுவழிபாடு ஆகியவற்றை மேற்கொள்வது சிறந்த பலனைத்தரும். இத்தினத்தில் பசித்திருப்பதால், தனித்திருப்பதால், விழித்திருப்பதால் பரமன் அடியிணைகளின் கீழ் நிலைத்திருக்கும் பேற்றினைப் பெறலாம் அதுவே சிவலோக பதவி.

**செங்கணானும் பிரமனும் தம்முள்ளே**
**எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்**
**இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினான்**
**பொங்கு செஞ்சடையப் புண்ணிய மூர்த்தியே**

சிவனின் இருபத்தைந்து வடிவங்களில் (மகேஸ்வர மூர்த்தங்கள்) முதலாவது வடிவம் இலிங்கோற்பவ மூர்த்தியாகும். பிரமா, விஷ்ணு இருவரும் நல்லறிவு பெற ஏற்பட்டதே இலிங்கோற்பவ மூர்த்தமாகும்.



நா. க. சிவராமலிங்கம்

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

தொடர்ந்து வந்த நாட்களில் மீண்டும் சிவா தலைவலியாலும் நித்திரையின்மையாலும் அவதிப்பட்டான். ஒருவேளை கொஞ்சம் கண்ணயர்ந்தாலும் ஏதேதோ பயங்கரக் கனவுகள் வந்து அவனைத் தொல்லைப்படுத்தின. பாதர் அருள் மீண்டும் ஒரு தடவை வீட்டுக்கு வந்து நல்ல திடமான ஜெபம் செய்தும் கூட ஒன்றும் பிரயோசனப்படவில்லை. இரண்டாம் நாள் திரும்பவும் தொல்லைகள் தொடங்கிவிட்டன.

குடும்ப வைத்தியரின் சிபாரிசில் எடுத்த எல்லா வைத்தியப் பரிசோதனைகளின் முடிவுகளும் சிவா நல்ல உடல் நிலையில் இருப்பதாகவே கூறின. ஆனாலும் தலைவலியும் கனவுகளும் மீண்டும் மீண்டும் சிவாவை அல்லற்படுத்திக் கொண்டே இருந்தன. நல்லவேளையாக நீலவேணிக்கு ஒன்றுமேயில்லை. அது கொஞ்சம் தென்பாக இருந்தது சிவாவிற்கு. எல்லா வேலைகளையும் தனியனாக ஓடி ஓடிச் செய்து கொண்டிருந்தாள்.

அன்றும் அன்னப்பிள்ளை மாமி வீட்டுக்கு வந்திருந்தா. சிவா வீட்டில் இல்லை. என்னதான் தலைவலி, நித்திரைக் குறைவு என்றாலும் வேலை வேலைதானே. ஒருநாள் வேலைக்குப் போகாது விட்டாலும் கனடாவில் நடுத்தரக் குடும்பங்களின் நிலை கடினம்தானே! ஓரளவுக்குத் திட்டமிட்ட வாழ்க்கைமுறை என்பதால் சமாளித்துக் கொண்டு போகின்றார்கள்.

‘என்ன பிள்ளை, சிவாவிக்கு தலைவலி இப்ப நிண்டிட்டுதோ?’ அன்னப்பிள்ளை மாமி.

‘இல்லை மாமி, சிலவேளைகளில் வரும் சிலவேளைகளில் நிண்டிடும். பாவம், சரியாய் வேதனைப்படுகிறார். டாக்குத்தர்மாரும் ஒன்டுமில்லை என்னினம். அது இது என்டு எடுக்காத சோதனைகளும் இல்லை. உடம்பிலையிருந்து அரைவாசி ரத்தமென்டாலும் இதுவரையிலை எடுத்திருப்பினம். அந்தச் சோதினையள். இந்தச் சோதினை எண்டு ரத்தமெல்லாம் குடுத்ததுதான் மிச்சம். சுகம் ஒண்டுமில்லை. என்ன வருத்தமெண்டு கூடச் சொல்லுகினமுமில்லை.’ அலுத்துக் கொண்டாள் நீலவேணி.

‘உவங்கள் டாக்குத்தர்மார் உப்பிடித்தான். சமயம் வரேக்கை எங்கடை ஆக்களின்ரை ரத்தத்தை அந்தச் சோதனை, இந்தச் சோதனை எண்டு சொல்லிச் சொல்லி எடுத்து தங்கடை ரத்த வங்கியோ என்னவோ எண்டு சொல்லுவினம், அதிலை சேத்து வைப்பினமாம். எனக்குத் தெரியாது உங்கை பார்க்கிலை கதைக்கிறவை. கவனமாக இருக்கவேணும் பிள்ளை’ என்றாள் அப்பாவித்தனமாய், நல்ல விசயகாரியான அன்னப்பிள்ளை மாமி.

‘அவையள் என்ன செய்தாலும் செய்யட்டும். இந்த மனிசனுக்கு இந்தத் தொல்லை தீர்ந்தால் போதும். அவர்படும் வேதனையைப் பாத்துக் கொண்டு இருக்கேலாது மாமி’ என்ற நீலவேணியின் கண்களில் கண்ணீர் மெதுவாகத் திரண்டு கொண்டு வருவதை அன்னப்பிள்ளை மாமி கண்டு கொண்டாள்.

‘நீ ஒண்டுக்கும் யோசிக்காதை பிள்ளை. உங்களுக்கு ஒண்டும் வராது’ என்று ஆதரவாகச் சொன்ன அன்னப்பிள்ளை மாமி ‘நான் ஒண்டு சொல்லுறேன், கோவிக்காமல் ஒருக்கா கேள்பிள்ளை’ என்றாள்.

கண்களைத் துடைத்தபடியே என்ன என்பது போல் நீலவேணி பார்த்தாள்.

குரலைக் கொஞ்சம் தாழ்தியபடியே அன்னப்பிள்ளை மாமி சொன்னாள் ‘நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டு தெரியேல்லை. அதிலும் சிவா என்ன சொல்லுவானோ தெரியேல்லை. எண்டாலும் என்ரை மனசு கேக்கேலை அதுதான் சொல்லுறேன். இப்ப பாதர் அருள் வந்து செபம் செய்தும் உங்கடை பிரச்சனை தீரேல்லைத்தானே. பார்க்கிலை உவள் கனகம் சொன்னவள், ரொறொன்ரோவிலை எங்கையோ ஒரு சாமியார் இருக்கிறாராம். அவர் ஆட்களைப் பார்த்தவுடனேயே நாடி பார்த்து குறை குற்றம் இருந்தால் சொல்லுவாராம். அதுக்குப் பரிகாரம் கூடச் சொல்லுவாராம். நீங்கள் விரும்பினால் அவரே பரிகாரமும் செய்ய உதவுவாராம். ஏழு நாளுக்கு பூசையில் ஏதோ வைத்து எட்டாம் நாள் நூல் கட்டி விடுவாராம். கையிலை

◊ கனி ◊

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

# A New Project By TRIDEL

## TRIO @ HWY 404 & SHEPPARD




TRIDEL BUILT FOR LIFE

DORSAY

THE NEXT GREAT PHASE AT ATRIA - NORTH YORK'S BEST SELLING COMMUNITY

TRIO AT ATRIA

## For Further information Please Call

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.Brokerage***

**"கனவு உங்களுடையு பொறுப்பு எங்களுடையது"**

**5215 Finch Ave, E, #203 - Tel: 416.321.6969**
**Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666**

*Independently Owned & Operated

# ஐங்கலை வெண்பா

## 5. ஓவியம்

நூதனமார் ஓவக் கலைவரையும் நுட்பத்தைக்
காதலுடன் கற்றேன் கனகசபை - மேதையிடம்
அன்னார்தாள் எந்தன் அகமார்ந்த நன்றியினை
பொன்னாக வைப்பேன் புகழ்ந்து. (33)

(ஓவம் - ஓவியம். கனகசபை - இவர் 1950களில் இலங்கை வடமாநில ஓவியக்கலைக் கல்விக்கும் பரீட்சைகளுக்கும் பொறுப்பாக இருந்தவர். ஓய்வுபெற்றபின் ஆசிரிய தராதரப் பரீட்சை மாணவருக்கு யாழ்ப்பாணத்தில் ஓவியம் கற்பித்தவர். அவரிடம் 1952-53 காலப்பகுதியில் யானும் ஓவியம் கற்றேன்.)

காவியத்தைப் பாடுதற்குக் கைகொடுக்கும் கற்பனைபோல்
ஓவியத்தைக் கீறுதற்கும் ஒப்பில்லா - ஆவியதாய்
கற்பனையே நன்கு கலந்திருக்கும் என்பதுவே
விற்பன்னர் ஏற்றும் விளக்கு. (34)

ஆயிரமாம் சொற்களினால் ஆக்கும் வருணனையை
மாயிருஞா லம்போற்றும் மாட்சியிலே - ஆயவொரு
தூரிகையின் கோட்டால் துலக்கவல்ல ஓவியரோர்
பேரயனின் மாயப் பிறப்பு. (35)

(மாயிரு ஞாலம் - பெரிதாக நிலைபெற்றுள்ள உலகம். பேரயன் - பெயர் பெற்ற அயன்ஞ அயன் - பிரமன்.)

ஈடிணையில் ஓவியங்கள் இல்லாத் திரைப்படமும்
நாடகமும் கோயில் நடைமுறையும் - நாடுயர
பாடுபடும் கைத்தொழிலும் பண்பாடும் கல்வியதும்
ஊடகமும் இல்லை உணர். (36)

கட்புலனுக் கன்றிக் கருத்துக்கும் கற்பனைக்கும்
திட்பமுறச் சேவைசெய்தே சித்திரங்கள் - உட்புறத்தைத்
தூய்மைப் படுத்தும் சுவைமழலை வாயழகுச்
சேய்களையும் ஈர்க்கும் சிரித்து. (37)

மரபைத் தொடர்ந்த வரிக்கவிதை போல
(இ)ரவிவர்மா பின்னெழுந்தே எங்கும் - பரவிவரும்
பிக்காசோ செய்த பெரும்புரட்சிப் பாணியதும்
எக்காலும் நிற்கும் இசைந்து. (38)

(வரிக்கவிதை - புதுக்கவிதை.)

விண்ணில் இயற்கை விளைக்கின்ற விந்தைகளும்
மண்ணில் அதுசெய்யும் மாயங்களும் - கண்ணெதிரில்
அப்படியே காட்டியரும் அற்புதஞ்செய் ஓவியருக்(கு)
இப்புவியில் யாரே இணை. (39)

சுண்ணத்தால் கல்லால் சுவையான சொற்களால்
பண்ணிற்கும் பாட்டுகளால் பாவனையால் - எண்ணத்தை
நாடறியத் தீட்டவல்ல நாயன்மார் எல்லோரும்
தேடரிய ஓவியராம் தேர். (40)

1. சுண்ணத்தால் - வரைபவர் ஓவியர்.
2. கல்லால் - உருவாக்குபவர் சிற்பக் கலைஞர்.
3. சொற்களால் - பேசுபவர் சொற்பொழிவாளர்.
4. பாட்டால் - பாடுபவர் இசைவாணர்.
5. பாவனையால் - காட்டுபவர் நடனம் மற்றும் நாடகக் கலைஞர்கள்.)

நாயன்மார் - தலைமைக் கலைஞர்.
நூற்பயன்

கலைகளைக் கற்பார் களித்துச் சுவைப்பார்
கலைகள் கலைஞர்தமைக் காப்பார் - உலகில்
தலைமை நிலைவகித்துச் சான்றோர்கள் போற்ற
நிலைபெறவே வாழ்வார் நிமிர்ந்து.

முற்றும்.



கவிஞர் வி. கந்தவனம்

# சார்பியல் - 14

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

சென்ற தடவையில் நேர மெதுமையாக்கல் பற்றிப் பார்த்தோம். இன்று நேரமெதுமையாக்கலை எடுத்துக் காட்டிய இன்னொரு நிகழ்வினை பார்க்கப் போகிறோம். இதிலே அரையாண்டுக்காலம் என்கிற அழகான விடயம் பற்றியும் தெரிந்து கொள்வோம். எங்களது புவியினைச் சுற்றி வளிமண்டலம் இருப்பது எங்களுக்குத் தெரியும். அதனது தடிப்பு சராசரியாக 60 கிலோமீற்றர்கள் என அறிந்து வைத்திருக்கின்றார்கள். அதாவது புவியின் மேற்பரப்பில் இருந்து 60 கிலோமீற்றர் உயரம் வரையில் எமது வளிமண்டலம் இருக்கின்றது.




அடுத்து, அகிலக்கதிர்கள் (Cosmic rays) எனக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவை பேரண்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து அண்டவெளியில் பயணம் செய்து கொண்டிருக்கின்றன. அண்டவெளிய-ில் காணப்படும் விண்மீன்கள், கலக்சிகள், கருந்துளைகள், அண்டவெளியில் நிகழும் சுப்பநோவா வெடிப்புகள் போன்றவற்றில் இருந்தே இந்த அகிலக் கதிர்கள் வருகின்றன. மிகவும் சக்திவாய்ந்த கதிர்களைக் கொண்ட அகிலக்கதிர்களில் இருந்து எமது புவியைப் பாதுகாப்பவற்றில் புவியைச் சுழவுள்ள வளிமண்டலமும் ஒன்றாகும்.

இந்த அகிலக்கதிர்கள் எமது வளிமண்டலத்தின் மேற்பரப்பில், வளிமண்டலத் துணிக்கைகளுடன் மோதுகையில் ‘மியுஓன்’ (muon) என்கின்ற மிகச்சிறிய துணிக்கைகள் தோன்றுகின்றன. அடிப்படைத் துணிக்கைகளில் ஒன்றான இந்த மியுஓன்கள், எமக்குத் தெரிந்த இலத்திரன்கள் போன்றே எதிர் ஏற்றம் கொண்டவை, ஆனால் இலத்திரன்களிலும் பார்க்க 200 மடங்கு பாரமானவை. கிட்டத்தட்ட ஒளிய-ின் வேகத்தில் செல்பவை. எனவே வளிமண்டலத்தின் மேற்பரப்பில் தோற்றுவிக்கப்படும் மியுஓன் புவியின் மேற்பரப்பினை வந்தடைய 200 மைக்குரோ செக்கன்கள் எடுக்கும். அதாவது 200 மைக்குரோ செக்கன்கள் வளிமண்டலத்தின் ஊடாக இயங்கி வந்தாலே புவியின் மேற்பரப்பில் மியுஓன்களைக் காணமுடியும்.

இந்த மியுஓன்களின் சிறப்பான இயல்புகளில் ஒன்று, தேய்ந்து வேறு ஒன்றாக மாறுவது. இங்கு கூறப்படும் தேய்வென்பது சற்று வித்தியாசமானது. மியுஓன் ஒன்று தேய்வுற்று முற்றாகவே வேறு பொருளாகிவிடாது. அதன் அரைப்பங்கு முதலில் வேறு பொருளாக மாறும். பின்னர் மீதியாக இருக்கும் மியுஓனின் (அதாவது அரைப்பங்கு மியுஓனின்) அரைப்பங்கு தேய்வுறும். அதன்பின்னர் மீதியின்மீதி தேயத் தொடங்கும். அதுவும் கூட அரைப்பங்குதான் தேய்வுறும். இப்படியாகத் தொடர்ந்து தேய்ந்து கொண்டு போகும். என்ன வித்தியாசமானதாக இருக்கின்றதே என்கிறீர்களா! இதுபோன்ற விந்தைகள் இயற்கையில் பலவுண்டு. இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவெனில், ஒவ்வொரு தடவையும் அரைப்பங்காகத் தேய்வுறும் காலம் ஒரே அளவினதாகவே இருக்கும். எடுத்துக் காட்டாக, ஒரு தேய்வுறும் பொருளின் பாரம் 10 கிராம் என்போம். அதன் அரைவாசி தேய்வுற எடுக்கும் காலம் 10 வருடங்கள் எனவும் எடுத்துக் கொள்வோம். பத்து வருடங்களின் பின்னர் அப்பொருளின் 5 கிராமே இருக்கும். மீதி 5 கிராமும் வேறு ஏதோவாக, தேய்வுற்று மாறிவிடும். இனி, மீதியான 5 கிராமின் அரைப்பங்கும் வேறுபொருளாவதற்கு அடுத்த 10 வருடங்கள் எடுக்கும். ஆக, 20 வருடங்களின் பின்னராக, அப்பொருளின் 2½ கிராம் மாத்திரம் இருக்கும். இப்படியாகத் தொடர்ந்து தேய்வுறுதல் நிகழ்ந்து கொண்டே இருக்கும். இந்த மாதிரியான நிகழ்வு ஏற்படுகிற கால அளவை, அரைச்சீவிய காலம் அல்லது அரையாண்டுக் காலம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மியுஓன்களின் அரையாண்டுக் காலம் 1.5 மைக்குரோ செக்கன்கள். இதன்படி பார்த்தால், வளிமண்டலத்தின் மேற்பரப்பில் உருவான மியுஓன் புவியை வந்தடைவதற்கு இடையில் 133 அரையாண்டுக் காலங்களை முடித்திருக்கும். அப்படியாயின் கணித்துப் பார்த்தால், புவியின் மேற்பரப்பில், மியுஓன் ஒன்றானதில் 40 இல் ஒரு பகுதியே காணப்பட வேண்டும். ஆனால் பரிசோதனைகளின்படியிலாகப் பார்க்கையில் மியுஓன் ஒன்றின் பத்தில் ஒரு பகுதியை புவியிற் காணக்கூடியதாக உள்ளது. இது எப்படி என்பதற்கு நேர மெதுமையாக்கல் மிகத் திருப்தியான விடையைத் தருகின்றது. மியுஓன்களின் மிக வேகமான இயக்கம் காரணமாக, அதன் அவதானிப்பில் நேர மெதுமையாக்கலால், அவை புவியை வந்தடைவதற்கு 5 மைக்குரோ செக்கன்கள் எடுக்கின்றது. அதாவது புவியின் கணிப்பின் படியான 200 மைக்குரோ செக்கன்கள், மியுஓன்களின் கணிப்பில் 5 மைக்குரோ செக்கன்களுக்கு ஒப்பான-தாக இருக்கின்றது. இந்த 5 மைக்குரோ செக்கன்களில் மியுஓன்கள் ஆக, 3.3 தடவைகளே அரைச் சீவிய காலப் பகுதிக்குள் வருகின்றன. இந்த 3.3 அரைச் சீவிய காலத்தில் அவற்றின் தேய்வின் முடிவான அளவினைப் பார்த்தால் அது பத்திற்கு ஒன்றாக அமைகிறது. இப்படியாக, மியுஓன்கள் புவியின் மேற்பரப்பில் காணப்படுவதானது அயன்ஸ்ரைனின் சிறப்புச் சார்புத்தத்துவத்தின் நேர மெதுமையாக்கல் சரியானது என்பதனைக் காட்டுகின்றது. தொடரும்...



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# Math Adventure Club!!




## DON'T WORRY

If you are in this situation

JOIN THE POWER TEAM NOW & GET YOUR 75% AND ABOVE AT LEAST

AVOID BEING DROP THE COURSE

**FOR G10, G11, G12 "THE POWER TEAM"**

***ACT IMMEDIATELY AND DON'T MAKE IT WORSE***

இதே நிலை தொடரவிடாமல் மாணவர்களை

செம்மைப்படுத்தும் குழுப் பயிற்சி

75% மிகக் குறைந்த முழுப்பேறு

**info: 416-666-5515**

## FINAL EXAM REVIEW

**STARTS MAY 4TH WEEKENDS ONLY**

**APRIL 20TH 2013 – FOR THOSE STUDENTS AVE BELOW 60%**

**MAY 4TH 2013 – ABOVE AND AVERAGE 60%**

**EACH CHAPTER COVERS THE MOST HIGHLIGHTED QUESTIONS + ANSWERS & AN OUTSTANDING WORK FOR YOU**

**FINAL MARKS AT LEAST 75%**

**DON'T WORRY**

**FOR G10, G11, G12**

**info 416-666-5515**


கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது
Markham NS Dental
Care, Comfort, Convenience, Confidence......
Dr. நளினி சுதர்சன் DDS
Family and Cosmetic Dentistry
உங்கள் அனைத்து பற் சிகிச்சைத் தேவைகளுக்கு நாடுங்கள்
FREE
15 Mins in office Teeth Whitening
Oral Cancer Screening
Cosmetic & Implant
Consultation and Advice
State-of-Art-Dental Technology
All your dental needs
Open 7 days
Always accepting new and Emergency patients
We speak English, Tamil, Tagalog, Urdu, Cantonese, Hindi & Kannada
All type of insurance accepted (Welfare, ODSP, Cinot & Healthy Smile)
Sedation Dentistry
Sedation dentistry program was designed to offer fearful patients a safe, comfortable means of receiving the treatment they need.
NS
Treats all age groups, including children
All aspects of dentistry practiced
Education & Prevention
Open Seven Days A Week
www.MarkhamNSDental.com
9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111
MON - SAT 9:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM


வாய்ப்பும்...வளர்ச்சியும்...
சூப்பர் வருமானம் தரும் EMini S&P500
சில மணி நேரத்தில் வீட்டில் இருந்து கொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?
CanBull Inc
647-706-2964
www.CanBull.ca
முதலீட்டின் ரகசியங்கள்:
வெற்றிகரமான முதலீடு குறித்து சில முக்கிய ரகசியங்கள் உண்டு. இந்த ரகசியங்கள் பின்பற்றுவதற்கு எளிமையானவை. ஆனால் பலராலும் பின்பற்றப்படாதவை . நீங்கள் அந்த ரகசியத்தை பின்பற்றினால் நிச்சயம் ஜெயிப்பீர்கள். மகாபாரதத்தில் அபிமன்யுவின் கதை நம் எல்லோருக்கும் தெரியும். சக்கரவியுகத்தை அமைத்துக் கொண்டு எதிரிகளை துவம்சம் செய்தவன். ஆனால் அப்பேர்பட்ட வீரனுக்கு அந்த சக்கர வியுகத்திலிருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் போனதுதான் விதி. முதலீட்டாளர்களாகிய நாமும் சரியான நேரத்தில் முதலீடு செய்கிறோம். ஆனால் எப்போது வெளியே வருவது என்று தெரியாததால் இழப்பைச் சந்திக்கிறோம். ஒரு முதலீட்டிலிருந்து எப்போது வெளியே வருவது? நம் தேவையும் எதிர்பார்ப்பும் நிறைவேறிவிட்டால், அடுத்த நிமிடமே அதை காப்பாற்றிக்கொண்டு வெளியே வர வேண்டும். அதை கற்றுக் கொடுக்க நாங்க ரெடி. கற்பதற்கு நீங்க தயாரா? அழையுங்கள் CanBull Futures Trading!
EMini S&P500 டெக்னிக்கல் பார்வை:
1400 WILL PENETRATE TO 1429 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505!
1363 WILL SLIDE DOWN TO 1315 AND 1295 TO HIT THE PREVIOUS LOW 1252 & 1100
THE 5 RICHEST MEN IN THE WORLD
1 Carlos Slim Helu $69 B
2 Bill Gates $61 B
3 Warren Buffett $44 B
4 Mukesh Ambani 22.3 B
5 Lakshmi Mittal 20.7 B
LIVE CHAT ROOM & LIVE FLOOR TRADING
தேவை - பணம்
தேடல் - CanBull Inc
வெற்றி - நிச்சயம்
GTA SQUARE
222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2


SKN
SKN FINANCIAL
இப்பொழுது எமது சேவை Brampton-ல்
Now @ Brampton
அதிக சௌகரியத்திற்கு!..
அர்த்தமுள்ள கேள்விகள்?
உங்கள் அடைவு நகைகளை தவணை முறையில் மீளமுடியுமா?
முடியும்!. SKN-ல் தவணை முறையில் நகைகளை
மீட்டு உங்கள் வட்டியை சேமியுங்கள்
நம்பிக்கை சௌகரியம் நிறைந்தது SKN
40 வருடங்களுக்கு
மேலான நம்பிக்கைக்கு
SKN
SKN Now
@ Brampton
BRAMPTON
85, Kennedy Road South
Unit - 33 (Next to TIM HORTONS)
Kennedy & Steeles
905-499-0800
SCARBOROUGH
2677, Eglinton Avenue
Unit - 4 ( Close to CIBC )
Brimley / Eglinton
416-269-5393




# பிரிட்டிஷ் மகாராணியின் கௌரவ பதக்கம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (24-02-2013) 45 லோசன் வீதி, ஸ்காபரோவிலுள்ள கனடிய அரச முன்னாட் படையினர் நிலைய மண்டபத்தில், மாட்சிமை தங்கிய இரண்டாம் எலிசபெத் மகாராணியாரின் வைர விழாப் பதக்கம் வழங்கும் வைபவம் நடைபெற்றது. ரூஜ் றிவர் நாடாளுமன்றப் பிரதிநிதி இராதிகா சிற்சபைஈசன் இதனை ஒழுங்கு செய்திருந்தார். எல்லாமாக 29 பேருக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டது. கனடா எழுத்தாளர் இணயத் தலைவரும், ஒன்ராரியோ முதுதமிழர் மன்றச் செயலாளரும், பிரபல சமூக சேவை ஆர்வலரும், தொரொன்ரோ கல்விச் சபையின் முன்னாள் கல்வி ஆலோசகரும், எழுத்தாளரும், சிவயோக சுவாமிகளின் சிவதொண்டன் சபை ஸ்தாபகருள் ஒருவரும் அதன் முன்னாள் தலைவரும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய திரு. சின்னையா சிவனேசனுக்கும் இப்பதக்கம் வழங்கப்பட்டது.





பிரிட்டிஷ் மகாராணியின் வைரவிழா விருது வழங்கும் வைபவம் கடந்த 24.02.2013 அன்று நடைபெற்றது. Royal Canadian Legion, 45 Lawson Road, Scarborough வில் நடைபெற்றது. அவ்வைபத்தின் போது ஸ்காபறோ முது தமிழர் சங்கத் தலைவர் திரு. முத்தையா தேவராஜா அவர்கள் முதியோர்களுக்கு ஆற்றிவரும் சேவை களுக்கும் மற்றும் சமூக பணிகள் தொடர்பாக பெறப்பட்ட விபரங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்படி பதக்கம் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி ராதிகா சிற்சபைஈசன் அவர்களால் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

# ஆர்க்கோவின் பின் உள்ள அரசியல்

பகுதி 1

தூறல்

**வானரன்**



வழமை போல் 2012க்கான ஒஸ்கார் விருது விழாவும் முடிந்து விட்டது. முக்கிய விருதுகள் சில

| விருதுகள் | வெற்றி பெற்றோர் |
|---|---|
| சிறந்த படம் | Argo |
| சிறந்த இயக்குனர் | Ang Lee, "Life of Pi." |
| நடிகர் | Daniel Day-Lewis, "Lincoln. |
| நடிகை | Jennifer Lawrence, "Silver Linings Playbook." |
| துணை நடிகர் | Christoph Waltz, "Django Unchained." |
| துணை நடிகை | Anne Hathaway, "Les Miserables." |
| பிற மொழித் திரைப்படம் | "Amour." (ஒஸ்ரியா) |
| ஒளிப்பதிவு | "Life of Pi |
| எடிட்டிங் | "Argo" |
| இசை | (Original Score) "Life of Pi," Mychael Danna. |
| திரைக்கதை | (Adapted) Chris Terrio, "Argo. |
| திரைக்கதை | (Original) Quentin Tarantino, "Django Unchained." |

இவ்வருட படங்களில் பல அரசியல் படங்கள். மிக முக்கியமாக சிறந்த படத்துக்கான போட்டியில் பங்குபற்றிய லிங்கன், ஆர்கோ ஆகிய படங்கள் நேரடி அரசியல் படங்கள். இவை உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை. லிங்கனை தெரியாதவர்கள் எவருமிருக்கமாட்டார்கள். லிங்கனின் வாழ்க்கையை ஸ்ரீபன் ஸ்பில்பெர்க் படமாக்கியுள்ளார். ஆர்கோவுக்கும் கனடாவிற்கும் நேரடித் தொடர்புகளே உள்ளன. இதுவும் ஒரு உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டது. இவ்விரு படங்களும் பல தவறான கருத்துக்களை கூறியுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. முதலில் கனடாவுடன் நேரடித் தொடர்பு கொண்ட ஆர்கோ பற்றி விபரங்களை பார்ப்போம். ஆர்கோ படத்திற்கான முழுச் சம்பவங்களும் நடைபெற்ற இடம் இன்று அமெரிக்காவை நோக்கி கையைக் காட்டும் ஈரான். 1979ம் ஆண்டு முன்னாள் ஈரானிய அதிபர் ஷாவுக்கு எதிராக குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. பிரான்ஸ் இல் இருந்து கொமெய்னி ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார். ஈரான் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஊரடங்கு சட்டம் அமலில் இருந்த நேரங்களில் வீட்டின் மொட்டை மாடிகளில் கூரைகளில் ஒலிபெருக்கி கருவியின் மூலம் 'அல்லாவோ அக்பர்' என குரல் எழுப்பினர். செப்ரெம்பர் 1979 Ebrahim Asgharzadeh இவர் ஒரு பல்கலைக்கழக மாணவன். இவர் தெஹ்ரானில் உள்ள முக்கிய பல்கலைக் கழகங்களான University of Tehran, Sharif University of Technology, Amirkabir University of Technology , Iran University of Science and Technology ஆகியவற்றை இணைத்து Muslim Student Followers of the Imam's Line என்ற அமைப்பை தொடங்கினார். முதலில் ஐவர் இக்குழுவில் இருந்தனர். அவர்களில் ஒருவர் தற்போதைய ஈரானிய ஜனாதிபதி என்ற கருத்தும் உண்டு. இதனை ஈரான் மறுத்துள்ளது. சோவியத் யூனியன் மதத்துக்கு எதிரான கருத்துக்களை கொண்டுள்ளமையால் அவர்களுக்கு எதிராக செயல்படவேண்டும் என்ற கருத்தும் இவர்களிடமிருந்தது. இவ் அமைப்பு அமெரிக்க தூதராலயத்தை முற்றுகையிடுவது எனத் தீர்மானித்தது. முதலில் இது கொமெய்னிக்கு தெரிவிக்கப்படவில்லை. கொமெய்னிக்கு தெரியவந்த பொழுது அவருக்கு ஒரு அச்சமும் இருந்தது. மாநில அரசுகள் கொமெய்னிக்கு சாதகமானவையாக விளங்கின. அவை சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டால் முற்றுகை முறியடிக்கப்படும் என்ற அச்சம் அவரிடமிருந்தது. மாணவர்கள் மிகத் தெளிவாக இருந்தனர். தெரிவு செய்யப்பட்ட 500 மாணவர்களைக் கொண்ட ஒரு குழு முற்றுகையிடுவது என தீர்மானமானது.

சிபிஐ அதிகாரி எனச் சொல்லி கிரானைட் அதிபர்களான ரெட்டி சகோதரர்களின் வீட்டிலிருக்கும் பலகோடி மதிப்புள்ள நகை, பணத்தை எடுத்துச் செல்கிறார், ஆதி என்ற பெயர்கொண்ட ஜெயம் ரவி. அடுத்தக் காட்சியிலேயே அவர் சிபிஐ அதிகாரியல்ல, தாய்லாந்து நாட்டிலுள்ள பட்டாயாவில் பெரிய தாதா என்பது தெரிகிறது. பணத்தையும் நகைகளையும் பறிகொடுத்த ரெட்டி சகோதரர்கள் அவரை தேடுகிறார்கள். இன்னொரு பக்கம் மும்பையைச் சேர்ந்த ஒரு கோஷ்டி ரவியை எப்படியாவது இந்தியாவுக்கு அழைத்து வர திட்டமிடுகிறது. அதற்குக் காரணம் மும்பையில் திருநங்கையின் உடல்மொழியுடன் இருக்கும் பகவான் என்ற இன்னொரு ஜெயம் ரவி. அரசியல் செல்வாக்கு உள்ளவர். ஆனாலும், மும்பையில் எல்லா கெட்ட செயல்களுக்கும் ஒரே ஆளாக இருக்கும் பகவானை சட்டம் நெருங்குகிறது. 'என்கௌண்டர்' செய்து



அவரை கொல்ல அதிகாரிகள் திட்டமிடுகிறார்கள். பகவானை தப்பிக்க வைக்க அதே மாதிரியான தோற்றத்தில் இருக்கும் ஆதியை ஆள் மாறாட்டம் செய்ய நினைக்கிறார்கள். தாய்லாந்தில் தாதாவாக இருக்கும் ஆதியைக் காதலிப்பதுபோல் நடித்து அவரை மும்பைக்கு அழைத்து வருகிறார் நீத்து சந்திரா. ஆதி எப்படி தப்பிக்கிறார் என்பது முடிவு.

கதாநாயகன் ஜெயம்ரவி, திருநங்கை, தாதா என இரண்டு மாறுபட்ட பாத்திரங்களில் வருகிறார். திருநங்கைகளின் நடை, உடை, முகபாவனைகள் என அச்சு அசலாக மாறியிருக்கிறார் ஜெயம் ரவி. ஆனால், தாதா 'ஆதி' செய்யும் வேலைகள் எல்லாமே 'தாத்தா' செய்வது மாதிரிதான் இருக்கின்றன.

கதாநாயகிக்கு அதிக முக்கியத்துவம் உள்ள படம். நீத்து சந்திரா அதை சரியாக பயன்படுத்தியும் இருக்கிறார். அருமையான நடிப்பு. கதையை நகர்த்தி செல்வது இவரே. பறந்து பறந்து சண்டையிடுகிறார், சிகரெட் பிடிக்கிறார் 'அதுவும் டஜன் கணக்கில் சிகரெட்டுகளை நீத்து ஊதித்தள்ளுவது' நிச்சயம வேறு யாரும் இந்த பாத்திரத்தை ஏற்க முன் வந்திருக்க மாட்டார்கள்!

ஒரு பாடலுக்கு மட்டும் முன்னாள் கதாநாயகி சாக்சி தனி ஆட்டம் ஆடியிருக்கிறார்! சுதா சந்திரன், ஜெயம் ரவி அம்மாவாக வருகிறார்.

யுவன் ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை படத்தின் பலம். ஆனால், பின்னணி இசைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த யுவன் பாடல்களில் கோட்டை விட்டுவிட்டார். எந்தப் பாடலும் மனதில் நிற்கவில்லை. தேவராஜ் - மகேஷ் என்ற இரண்டு ஒளிப்பதிவாளர்கள். இவர்கள் கைவண்ணத்தில் பாங்காங்கும் கோவாவும் மிளிர்கிறது. திரைக்கதையில் ஏகப்பட்ட ஓட்டைகள். சினிமா வழக்கப்படி

- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

எவ்வளவு துப்பாக்கி சண்டை போட்டாலும் எல்லா தோட்டாக்களில் இருந்தும் கதாந-ாயகன் மட்டும் தப்பித்து விடுவார். ஆனால், இந்தப் படம் தப்பிக்குமா? அமீர் தப்பிப்பாரா? கஷ்டம்தான்.

# ஆர்க்கோவின்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

உண்மையில் மற்றொரு கனடிய தூதரக அதிகாரியின் வீட்டிலும் இவர்கள் தங்கியிருந்தனர். தஞ்சமடைந்த ஆறு பேருக்கும் வெளியேறுவதற்கான கடவுச் சீட்டுக்களையும் கனடிய தூதுவரே வாங்கியிருந்தார்.



அமெரிக்கா கனடிய கடவுச் சீட்டுக்களில் தயாரித்த ஈரானிய முத்திரைகளில் தவறான திகதிகள் இருந்ததை கனடிய தூதரக அதிகாரி கண்டு பிடித்து திருத்தியுள்ளார். அப்போதைய அமெரிக்க அதிபர் ஜிம்மி காட்டர் சி.என்.என் க்கு அளித்த பேட்டியில் "The other thing that I would say was that 90 percent of the contributions to the ideas and the consummation of the plan was Canadian. And the movie gives almost full credit to the American CIA. And with that exception, the movie is very good" (கனடாவிற்கே 90 வீதமான பங்களிப்புண்டு. ஆனால் படம் சி.ஐ.ஏயையே காரணம் எனக் காட்டியுள்ளது) எனக் குறிப்பிட்டுள்ளார். படத்தில் இறுதியில் ஈரானிய உள்நாட்டுப் படையினர் (Home Guard) விமான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் எதுவுமே உண்மையில் நடை-பெறவில்லை. அங்கு அவர்கள் செல்லவேயில்லை. படத்தின் விறுவிறுப்புக் காக சேர்க்கப்பட்டவை இவை. அதேபோல் சன நெருக்கடி மிகுந்த சந்தைப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களும் தவறானவை. இதுபோல் படத்தின் இறுக்கத்தை அதிகரிக்க காட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே சி.பி.சி மூன்று விவரணத் திரைப்படங்களை வெளியிட்டிருந்தது. இவற்றில் கூறப்பட்டுள்ள உண்மைத் தன்மை விருது பெற்ற படத்தில் இல்லை. Escape from Iran: The Canadian Caper, Escape from Iran: The Inside Story, 444 Days to Freedom (What Really Happened in Iran) ஆகிய படங்களே அவை.

அண்மைக் காலங்களில் வெளிவந்த சில அரசியல் படங்களில் உள்ள நம்பகத் தன்மையும், நேரடி மொழியும் இப்படத்தில் இல்லை என்பதே பல விமர்சகர்களது கருத்து. Richard Linklater's "Bernie," Martin Scorsese's "Hugo," Wes Anderson's "Moonrise Kingdom ஆகிய படங்களுடன் ஈரானிய படமான Abbas Kiarostami'ன் "Close-Up மற்றும் Jia Zhangke's "24 City" போன்ற படங்களை இங்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வருட ஒஸ்காரில் ஆர்கோவுடன் இறுதிப் பட்டியலில் இருந்த படங்கயும் 2012 வெளிவந்த அரசி யல் படங்கயும் மேலுள்ள படங்கயும் விரிவாக பார்ப்பதன் மூலம் அமெரிக்க மயமாதலில் ஒஸ்காரும் ஹொலிவூட்டும் ஆற்றும் பங்கு வெளிப்படும். அடுத்த இதழில் இவற்றை விரிவாகப் பார்ப்போம்.

# சிந்தனை செய்மனமே!



மனித குலத்தின் சாதனை அனைத்துக்கும்
சிந்தனை ஒன்றே காரணம்
காட்டிலும் மேட்டிலும் இருந்து சிந்தனை
செய்தோர் சித்தர்கள் - ஆனால்
அஞ்ஞானி ஆனவன் விஞ்ஞானி ஆனதும்
அன்றாடம்
கண்டதை சிந்தனை செய்ததே.
ஓடும் நதியில் ஓடி மிதந்த ஒருபொருள்
கண்டவன் ஓடம் செய்தான்
காட்டிலும் மேட்டிலும் கால்கடுக்க
நடந்தவன்
கால் மிதி வண்டி அமைத்தான்
பறக்கும் பறவையின் பறப்பினை கண்டவன்
பறக்கும் விமானம் அமைத்தான்
சூரிய சந்திர கிரகங்களின் சூத்திரம் அறிந்தான்
சீக்கிரம் அதன்மேல் காலடி வைத்தான்
இன்னும் இன்னும் எத்தனையோ கண்டான் அத்தனைக்கும்
அவனின் சிந்தனையே காரணம்
சிந்திக்க தொடங்கிய மனிதா நீ ஏன் இன்னமும்
உன்னைப் பற்றி சிந்திக்கவில்லை
சிந்தனை செய் மனிதா உன்உள்ளே புகுந்து
நீ உன்னை அறிய சிந்தினை செய்
உன்னையே நீ அறிந்தால் உன்உள்ளே உலகமே
அடங்குவதை நீ உணர்வாய் மனிதா
சிந்தனை செய் மனமே தினமே ஆண்டவன் திருவடி
அடைய சிந்தனை செய் மனமே

- கவிநாதம் - பரந்தாமன்

# சிறந்த அறுவடைக்கு

சிறப்பான அனுபவங்களுடன் வாழ்க்கைச் சக்கரம் சீராக ஓடுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்பது எனக்கு இப்போ நன்கு விளங்குவதனால் நம்பிக்கையுடன் நிம்மதியாக வாழ்கிறேன்.

வாழ்வு தம்மை எவ்வாறு அநீதியாக, மோசமாக, பாரபட்சத்துடன் நடத்துகிறது பாருங்கள் எனப் பிரலாபிப்பது பலருக்கு மிகவும் விருப்பமான விடயம். ஆனால் உண்மையில் கதையே வேறு! விதைத்தல், அறுவடை எனும் நிகழ்வுகளைக் கொண்டது வாழ்வு. விதைப்பதற்கு உங்கள் நேரம், முயற்சி, மூலதனம் போன்றவற்றை நீங்கள் செலவழிக்கிறீர் கள். இவற்றிற்குப் பதிலாக உங்களுக்குக் கிடைப்பதுதான் உங்கள் அறுவடை. தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவற்றை வாழ்வு தரத் தவறி விடுகிறது என்பதை உங்களுக்கு நிரூபிக்கச் சிலர் கதைகதை-தயாய் அளப்பார்கள். ஆகவே வாழ்வை நம்ப முடியாது எனக் குமுறுவார்கள். ஆனால் விதைத்தால்தான் அறுவடை செய்யலாம் என்ற பகுதியை மட்டும் தம் கதைகளில் இவர்கள் சொல்லாமல் விட்டுவிடுவார்கள். அவர்களின் குழப்பத்தில் இது அவர்களுக்கு விளங்காமல் இருந்திருக்க லாம். ஆனால் கட்டுக்கோப்பான பழக்க வழக்க விதிகளுடன் தீவிரமாக முயற்சி செய்தால்தான் சிறந்த அறுவடை எவருக்கும் கிடைக்கும்.

உனது ஜீவியம் மகிழ்ச்சியாக விரிவதற்கு உறுதி, கட்டுப்பாடு, உண்மை, தீவிர முயற்சி நிறைந்த ஆளுமை உனக்கு இருக்க வேண்டும். உன்னையே நீ கசக்கிப் பிழிந்து முழுமையாக முயற்சித்தால் நீ கொடுத்த அனைத்தும்



முற்றுமுழுதாய் நிச்சயம் உனக்குத் திரும்பக் கிடைக்கும் என்பதை நீ நம்பியிருக்கலாம். இப்படி எனக்கு முழுதும் ஒருபோதும் திரும்பி வராது என நீ சந்தேகிக்க ஆரம்பித்தால் உடனடியாக அந்த நாளே உன் விதைத்தலான சுயமுயற்சி குறைந்து விடும். உனது பயத்தை நீ வெளிப்படுத்தினாலும் உனது சக்தி குறைந்து விடும். இத்தகைய தருணங்களில்தான் உனது நம்பிக்கை குறுக்கிடுகின்றது. விதைத்தலின் போது உனது சக்தியை உறுதியுடன் ஒரு கட்டுப்பாடான முறையில் நீ உபயோகித் தால் தான் உனக்கு நல்ல அறுவடை கிட்டும் எனும் நம்பிக்கை உனக்கு இருக்க வேண்டும்.

ஒரு விடயத்தில் சில விவரங்களைக் கணக்கெடுக்காது கஷ்டமான காரியங் களைத் தவிர்த்து நீ முழுமையாகச் செயற்படவில்லை என்பது உனக்குத் தெரிந்தால் உனக்குத் தரவேண்டியதை வாழ்வு தரவில்லை என்று குறைகூறாதே. உனக்கு நம்பிக்கை இல்லாதிருப்பதை கட்டுப்பாடில்லாத முயற்சியுடன் இணைத்துக் குழப்பாதே. உனது வாழ்வையும் வாழ்வு நீரோட்டத்தையும் எப்போதும் பூரணமாக நம்பலாம். உனது தீவிர முயற்சியை விட உனது வெட்டி வாய்ப்பேச்சு கூடுகின்றபோது மட்டுமே வாழ்க்கை நீரோட்டம் உனக்கு உதவும் என்பதை நம்பமுடியாது என்பதை மறந்துவிடாதே.

வாழ்வில் நீ விரும்பியதை அடைந்திட செய்ய வேண்டியவற்றைச் செய்யாது இன்றுவரை வீண் வாய்ப்பேச்சில் நீ கதைகதையாய் அளந்து காலத்தை விரயமாக்கியிருக்கலாம். இன்று உறுதி யான தீர்மானத்துடன் உனது மனமெனும் மண்ணைக் கொத்திக் கிளறிப் பண்படுத்து. உனது தெளிவான சிந்தனை-களாலும் பேச்சாலும் அதற்கு நல்ல போஷாக்குள்ள உரமிடு. கட்டுக்கோப்பான தீவிர முயற்சியுடன் உனது இதயம் விரும்பும் குறிக்கோளாகிய விதை நெல்லை அந்தப் பதனிட்ட மண்ணில் விதைத்து விடு. ‘வினை விதைத்தால் வினை விளையும், தினை விதைத்தால் தினை விளையும்’ என்பதை முற்றுமுழுதாய் நம்பி குறிக்கோளை அடைந்திட இன்று உறுதி யான கட்டுப்பாட்டுடன் தீவிர முயற்சியில் இறங்குகிறேன்.

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 213

மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# சளித் தொல்லை (PHLEGM ACCUMULATION)

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நாம் சுவாசிக்கும் போது நமது மூக்கின் வழியால் தொற்று நோயை ஏற்படுத்தும் வைரஸ்களோ அல்லது பாக்டீரியாக்களோ உள்சென்று விடும். இப்படித் தொற்றியமை சுவாச உறுப்புகளின் மேல் பகுதிக்குச் சென்றால் மூக்கு, தொண்டைப்பகுதிகள் தாக்கமடைய ஏதுவாகும். சைனஸ் உபத்திரவமும் ஏற்படும் .விஷக்கிருமிகள் மூச்சுக்குழாய்களில் பற்றிக் கொண்டால் குரல்வளை, மூச்சுக்குழல், சுவாசப்பை என்பவை பாதிக்கப்படுவதுடன், மார்புப் பகுதியில் சளித்தொல்லை ஏற்பட்டு சிரமத்தைக் கொடுக்கும்.

ஜலதோஷம் வருவதற்கு தொற்றுக் கிருமிகளே காரணமாகும். இக்கிருமிகள் நூற்றுக் கணக்கில் சுவாசக்குழல்களில் ஒட்டிக்கொள்வதினால் ஜலதோஷம் ஏற்பட்டு மூக்கின் வழியால் சளி கொட்டிச் சிந்தியவண்ணம் இருக்கும். அத்துடன் தொண்டைப் பகுதி வரட்சி நிலையடைந்து புண்நிலை ஏற்படலாம். அத்துடன் நின்றுவிடாது தலையும், உடல் எங்கும் வலிக்கும் தன்மையும் உண்டாகும்.

பெரும்பாலும் இந்நிலை ஏற்பட்டால் ஓய்வு முக்கியம் எடுக்க வேண்டும். தண்ணீர் போன்ற திரவங்களை அருந்த வேண்டும். இவ்வேளையில் உறங்கும் போது



தலைப்பகுதியை சற்று உயர்த்தி வைப்பது நன்று. நமக்கு பெரும்பாலும் ஜலதோஷம் ஏற்பட்டால் இருமல் இருப்பதுடன் சளிதென்படும் போது நெஞ்சுவலியும் உருவாகும். இத்தன்மைகள் இரண்டு, மூன்று நாட்கள் இருக்கலாம். எதற்கும் தங்கள் வைத்தியரிடம் சென்று பரீட்சித்து சிகிச்சை பெற்றுக் கொள்வது நன்று.

ஒன்றை முக்கியமாக கவனிக்கவேண்டும். அதாவது ஜலதோஷம் இருக்கும் வேளையில் இருமல் சளிவந்து கொண்டிருப்பதினால் மூக்கின் வழியால் சென்ற கிருமிகள், வைரஸ்கள் பிடியில் இருந்து விடுபட்டு குணம் அடையப்போகும் நிலை உருவாகின்றது எனக்கருதலாம். ஆனால் இருமும் போது ஆறுதலாக இரும வேண்டும். அளவுக்கு மிஞ்சி இருமினால் மெல்லிய சவ்வுகள் தாக்கமடைந்து கிழியலாம். இதனால் கிருமிகள் குடிகொண்டு இருக்கும் நிலை ஏற்படலாம்.

மேலும் தொண்டையில் வரட்சி நிலை ஏற்பட்டிருப்பின் நெல்லிரசம், அருநெல்லி, மல்லிக்கசாயம், திராட்சைப்பழம், மாதுளம்பழம் போன்றவற்றை சாப்பிட்டு வந்தால் வரட்சிநிலை அற்றுவிடும். சந்தர்ப்பம் கிடைத்தால் அதிமதுரம், பனங்கற்கண்டு, தேன் என்பவற்றையும் பாவிக்கலாம். (அதிமதுரக்கசாயம்) தேனை ஓரளவு பழச்சாற்றில் இட்டு பாவிக்கலாம்)

தங்கள் வைத்தியரிடம் சென்றால் தகுந்த முறைப்படி தங்களை பரீட்சித்து உங்களுக்கு உகந்த மருந்துகளைத் தந்து கொள்வார்கள். எதற்கும் தாமதிப்பது நன்றல்ல.

மூலிகை வைத்தியத்தில் தானிபாதி, சீதோபலாதி சூரணம், திராட்சை அரிஷ்டம், அமிர் தயாரிஷ்டம் போன்றவையும் உண்டு. இதற்கு இதனுடன் தொடர்புடைய வைத்தியரிடம் சென்றால் பரீட்சித்து தங்களுக்கு ஏற்றதைத் தந்து விபரங்களையும் கூறிக்கொள்வார்.

எனவே எல்லாமருந்துகளும் எல்லோருக்கும் ஒத்துவராது. காலநிலை, உடல் நிலை, தேகநிலை கண்டு கையாளவேண்டும். வைத்தியர்களின் ஆலோசனைப்படி நடந்து கொள்வது மிக நன்மை பயக்கும்.

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.707.4378



# தொப்பி வியாபாரியும் மனிதனும்



ஒரு குரங்கு காட்டில் மரத்தில் தாவித்தாவிக் கொண்டு சென்றது. அதன் கையில் ஒரு கூடை இருந்தது. அதில் வகை வகையான தொப்பிகள் இருந்தன. அந்தக் குரங்கு அக்காட்டில் உள்ள மிருகங்களுக்கு தொப்பி வியாபாரம் செய்யும் குரங்கு ஆகும். அது மரத்தில் தாவித்தாவி மிருகங்களுக்கு தொப்பிகளை விற்கும். ஒரு கரடி தொப்பி வாங்கிக்கொண்டு சென்றது. அது சென்றபின் குரங்கு தான் கொஞ்சநேரம் தூங்கலாம் என்று நினைத்தது. அது மரத்திற்கு கீழே இறங்கி கூடையை கீழே வைத்து விட்டு தூங்கியது. சில நேரத்தில் அவ்வழியால் சில பயணிகள் சென்றனர். அவர்கள் காட்டில் பல நேரமாக நடந்து சென்று கொண்டு இருந்தனர். அவர்களில் ஒருவர் குரங்கையும் அதன் கூடையையும் கண்டார். அந்த விசித்திரமான காட்சியை கண்டவர், 'இதோ இந்தக் குரங்கு பலபேருடைய தொப்பிகளை திருடி இருக்கிறது' என்றார். அவர் சொன்னது தவறு. குரங்கு குப்பை மேடுகளில் கிடக்கும் தொப்பிகளை எடுத்து நன்றாக சுத்தமாக்கி திருத்தி விட்டு விற்பனைக்கு தகுந்ததாக செய்து விடும். குரங்கு ஒருவரிடமும் தொப்பிகளை திருடுவது இல்லை.

அந்தப் பயணிகளும் தொப்பிகளை தாங்கள் எடுக்கலாம் என்று நினைத்து கூடையில் இருந்த குரங்கின் தொப்பிகளை எடுத்து விட்டனர். அப்போது குரங்கும் நித்திரையிலிருந்து எழும்பி விட்டது. மனிதர்களிடம் தனது தொப்பிகள் இருப்பதைக் கண்டது. அதற்கு என்ன செய்வது என நினைத்து, தான் அணிந்து இருந்த தொப்பியை கூடையில் போட்டு விட்டது. பயணிகளும் குரங்கைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். 'என்ன இந்தக் குரங்கு செய்கிறது' என ஆவலுடன் பார்த்து, இதிலிருந்து நாம் ஏதாவது அறியலாம் என நினைத்து ஒரு பயணி தான் அணிந்த தொப்பியையும் கூடையினுள் வைத்தார். பயணிகள் ஏதாவது எதிர்பார்க்கினம் என புரிந்த குரங்கு மற்றவர்களையும் தொப்பியை கூடையினுள்ளே போடுமாறு கையை அசைத்தது. இதைக் கண்டு பயணிகள் ஆச்சரியப்பட்டனர். அவர்களும் தொப்பிகளை கூடையினுள் போட்டுவிட்டு என்ன நடக்கும் என எதிர்பார்த்துக்கொண்டு இருந்தனர்.

இதுதான் சரியான சந்தர்ப்பம் என குரங்கு நினைத்தது. குரங்கு தொப்பி நிறைந்த கூடையுடன் காட்டினுள் ஓடி சென்றது. பயணிகளும் ஏமாற்றம் அடைந்தனர். 'குரங்கிடம் ஏமாற்றப்பட்டுவிட்டோம்'! என நினைத்துக் கொண்டு சென்றனர். குரங்கும் தனது வியாபாரத்தைத் தொடர்ந்தது.

**நீதி: நேர்பட ஒழுகு!**



**ஞா. ஆரணி**
**அகவை 14**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## நாவாந்துறை சென். மேரிஸ் கனடா கிளை
## *Navanthurai St . Mary's Canada Branch*

நாவாந்துறை சென் மேரிஸ் கனடா கிளையின் 2013ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம்.



| | | | |
|---|---|---|---|
| தலைவர்: | டானியல் ஜீவா | செயாளர்: | ஆசீர்வாதம் அன்ரனிப்பிள்ளை |
| பொருளாளர்: | அருளப்பு பாலத்துரை | உப தலைவர்: | வீரசிங்கம் ஜான்சன் |
| உப செயலாளர்: | அன்ரனிப்பிள்ளை ஸ்ரீபன் | | |
| நிர்வாக உறுப்பினர்கள்: | சூசைப்பிள்ளை மரியதாஸ் | பிலிப் டிடாக்கஸ் | |
| | பிரான்சிஸ் பிரேமானந்தன் | இரெட்ணசிங்கம் சேகர் | |
| கணக்கு பரிசோதகர்: | சூசைப்பிள்ளை மரியதாஸ் | | |

# அபத்தம்!..

**15ஆம் பக்கத்தொடர்ச்சி**

அரசியல்வாதி களுக்கு எங்களது பண்பாட்டு விழுமியங்கள் தெரியாதா? அக்கறை யின்மையா? அலட்சியமா? உண்மையில் நீங்கள் அவர்களை கொச்சைப்படுத்தியுள்ளீர்கள்.



•நிகழ்ச்சியின் பின் அரங்கில் பல நிகழ்வுகள் நடந்தேறியிருக்கும். இவையெது வும் பார்வையாளர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு அது அவசியமுமல்ல. ஆனால் அவற்றை மறைப்பதன் மூலம் மேலும் உங்களை நீங்களே குற்றவாளி யாக்குகின்றீர்கள். மனந்திறப்பீர்களா?

•நிகழ்வு உங்களுக்கு வெற்றி என்பது கூட்டத் தெரிந்த எவருக்கும் இலகுவாக தெரிந்து விடும். 25,000 ஐ 50 ஆல் பெருக்கினால் 1,250,000.00 என விடை கிடைத்துவிடும். இதனை விட விளம்பர வருமானம். இவ்வளவு வெற்றியைத் தந்த தமிழர்களுக்கு ஒரு இலவச நிகழ்ச்சியை நட்ட ஈடாக கொடுக்க வேண்டியது உங்களது கடமை. செய்வீர்களா?

மறைத்து மறைத்து தான் நாங்கள் எதுவுமற்றுள்ளோம். இனியாவது மனந்திறந்து ஒரு மடலை எழுதுங்கள். தமிழர்கள் மன்னிப்பார்கள். உங்களது அடுத்த நிகழ்வுகளுக்கு ஆதரவளிப்பார்கள். இல்லையெனில்.... இசையை ஆய்வு செய்யுமளவிற்கு எனக்கு அறிவில்லை. எனவே இளையராஜாவின் நிகழ்வை பற்றி எதுவுமே நான் கூறவில்லை. என்னைப் பொறுத்த வரை நிகழ்ச்சி தொடங்க முன்னரே நான் ஏமாற்றப்பட்டு விட்டேன் என எனக்கு தெரிந்திருந்தது. நிகழ்வின் முடிவில் கூட அதில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை.

பிற்குறிப்பு: றினிற்றி நிறுவனத்துடன் பல தடவைகள் தொடர்பு கொண்டேன். பதிலெதுவும் கிடைக்கவில்லை. அதன் பின்னரே இம் மடலை எழுதியுள்ளேன்.

# வெண்ணிற புகைக்காக மீண்டும் ஒருமுறை காத்திருக்கும் மக்கள்



கடந்த தைமாத இறுதியில், வத்திகான் நகரிலிருந்து வெளியிடப்பட்ட அறிவித்தலானது முழு கத்தோலிக்க உலகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 1.2 பில்லியன் கத்தோலிக்க மக்களின் ஏகபெரும் ஆன்மீகத் தலைவராக எட்டு வருடங்களுக்கு முன், தனது எழுபத்தி எட்டாவது வயதில் பதவி ஏற்றுக்கொண்ட புனித பாப்பரசர் 16ம் பெனடிக்ட் தனது பதவியிலிருந்து மாசி மாதம் இருபத்தி எட்டாம் திகதி உடல்நலக் குறைவு காரணமாக விலகுவார் என்ற அறிவிப்பு வெளியானது. தனது வயது முதிர்ச்சியின் காரணமாக, கடந்த சில மாதங்களாக தனது உடலும் மனமும் ஆன்மீகப் பணிகளைச் சரிவர செய்யமுடியாத அளவுக்கு மோசமாடைந்து இருப்பதால் தான் பதவியை விட்டு விலகுவதாக அறிவித்தார். உடல்நலக்குறைவால் ஒருவர் தனது பதவியை விட்டு விலகுவது என்பது எல்லா அமைப்புக்களிலும் ஒரு சாதாரண விடயமாகத்தான் கருதப்படும். ஆனால் கத்தோலிக்க திருச்சபையால் மட்டும் அதை சாதாரண விடயமாக பார்க்க முடியவில்லை. அவரின் இராஜினாமா எவ்வகையான நடைமுறை சிக்கல்களை உருவாக்கபோகிறது என்பதை எவராலும் யூகிக்க முடியவில்லை. யேசுநாதரின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான புனித இராயப்பரின் தலைமையில் கட்டியமைக்கப்பட்டதாக நம்பப்படும் கத்தோலிக்க திருச்சபையை, தொடர்ந்தும் வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே பாப்பரசர்கள். யேசுநாதர் தனது பணிகளை ஆரம்பித்து, சிலுவையில் அறையப்பட்ட இடமான எருசலேம் அல்லது அதை அண்மித்த நகரங்களில் கத்தோலிக்க மதத்தின் தலைமைப்பீடம் அமையாமல் ஏன் ரோமாபுரியில் அமைந்தது என்பது ஆராய்ச்சியாளர்களுக்கு எப்போதும் ஆச்சரியமான விடயமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அரசியல் தலைமைத்துவம் அந்த காலங்களில் ரோமாபுரியை நோக்கியே இருந்தபடியாலும் செல்வாக்கு மிக்க பெரும் தொகை மக்கள் ரோமாபுரியை சுற்றி இருந்ததும், அது ஒரு வர்த்தக மையமாகவும், அரசியல் கலாச்சார நிகழ்வுகளுக்கான பெரும்தொகை மக்கள் அந்நகருக்கூடாக பிரயாணித்ததும் காரணமாக இருந்திருக்கலாம். புனித இராயப்பர் ரோமாபுரியில் மரணமடைந்ததாக நம்பப்பட்டாலும், அவரால்தான் அங்கு கத்தோலிக்க திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டதற்கான எந்த சான்றும் கிடையாது, ஏறத்தாள நாற்பதாம் ஆண்டளவில் அதுவும் புனித இராயப்பரின் ரோமாபுரி வருகைக்கு முன் இரண்டு தசாப்தங்களுக்கு முன்பே ரோமாபுரியில் கத்தோலிக்க திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அதைவிட அவர்தான் கத்தோலிக்க மதத்தை ஸ்தாபித்தவர் என்று நம்பப்பட்டாலும், அவர்தான் ரோமாபுரியின் முதல் ஆன்மீக தலைவராக இருந்தார் என்பதற்கும் எந்த சான்றும் கிடையாது, எது எப்படியோ அவர் வழி வந்ததாக நம்பப்படும் பாப்பரசர் இன்றும் ரோமாபுரியின் தலைநகரான வத்திகானில் நிலைகொண்டு இருப்பது எல்லோரும் அறிந்ததே.

கடந்த அறுநூறு ஆண்டுகளில், பதவியை விட்டு விலகும் முதலாவது பாப்பரசர் 16ம் பெனடிக்ட் தான். 1415ம் ஆண்டளவில் பாப்பரசர் கிரகேரி அவர்கள் உட்பூசல் காரணமாக தனது பதவியைத் துறக்க வேண்டி வந்தது. பாப்பரசரின் மறைவுக்கு பின்புதான் அடுத்த பாப்பரசர் தெரிவு செய்யப்படும் வழமை வத்திக்கானில் நீண்டகால பாரம்பரியமாக இருந்து வந்தது, ஏனெனில் இரண்டு பாப்பரசர்கள் இருந்தால் அது நிர்வாக சிக்கல்களுக்கு வழிவகுத்து, கிறிஸ்தவ சமூகத்தை பிளவுபட வைத்து விடும். அதைவிட சின்னச் சின்ன விடயங்களுக்கும், அரசியல் காரணங்களுக்காகவும் பாப்பரசர் தனது பதவியை விலக வேண்டி வரலாம் என்ற நோக்கில்தான் அந்த நடைமுறை வழக்கில் இருந்தது. ஒரு மதகுருவாக தனது ஆன்மீக பணியை ஆரம்பிக்கும் ஒரு கத்தோலிக்க குருவானவர் பல நிலைகளைத் தாண்டி கடைசியில் பாப்பரசராக வர வாய்ப்புக்கள் இருந்த போதிலும் எல்லோராலும் அந்த நிலையை எட்டமுடியாது. ஒரு சாதாரண குருவானவர் தனது திறமையாலும், சேவையாலும் ஆயர் என்ற முக்கிய பதவியை அடைகிறார். இதனையும் கடந்து தனது தலைமைத்துவ திறமையாலும், மக்களை கவரும் பண்பாலும் பேராயர் என்ற பதவிக்கு உயத்தப்படுகிறார். இதனையும் தாண்டி பாப்பரசரால் கார்தினால் என்ற உயர் பதவிக்கு நியமிக்கப்படும் போது, அவரும் அடுத்த பாப்பரசராக வரும் வாய்ப்பை பெறுகிறார்.

கார்தினால்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சபையை கார்தினால்கள் கல்லூரி என்று அழைக்கப்படுகிறது. பாப்பரசர் இறந்தபின், கத்தோலிக்க திருச்சபையின் பொறுப்புக்கள் அனைத்தும் இந்த கார்தினால்கள் கல்லூரியின் நிர்வாகத்துக்கு கீழ் வந்துவிடும். அவர்களின் முதலாவது பணி இறந்த பாப்பரசரின் சம்பிரதாய சடங்கை நடத்துவதுதான். பாப்பரசர் மரணமடைந்தவுடன், வெள்ளியினால் செய்யப்பட்ட சுத்தியல் கொண்டு மூன்று முறை அவரின் நெற்றியில் இலேசாக தட்டப்பட்டு அவரின் பெயர் சொல்லி அழைக்கப்படும். அவரிடம் இருந்து பதில் வராதபோது பாப்பரசர் மரணித்து விட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். அதனைத்தொடர்ந்து அவரின் அரச முத்திரையும், அவர் அணிந்திருக்கும் புனித இராயப்பரின் நாமம் கொண்டழைக்கப்படும் மோதிரமும், கழட்டப்பட்டு அழிக்கப்பட்ட பின்தான், பிரேத அடக்கத்துக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும். இருவாரங்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்ட பின் புதிய பாப்பரசர் தெரிவு ஆரம்பமாகும். பாப்பரசர் 16ம் பெனடிக்ட் இன்னும் உயிருடன் இருப்பதால், பாரம்பரிய சடங்குகள் ஒன்றும் அவசியமற்று விட்டது. பாப்பரசர் இராஜினாமா செய்தவுடன் புதிய பாப்பரசர் தெரிவுக்கான ஆயத்தங்கள் உடனடியாக தொடங்கப்படும். பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாப்பரசர் கிளமன்ற் இறப்பின் பின் ஏற்பட்ட கசப்பான அரசியல் காரணங்களால் அநேகமான கார்தினால்கள் வாக்களிக்க மறுத்துவிட்டார்கள். இது மக்களை சினம் அடைய செய்தது. இக்கட்டான நிலையை முடிவுக்கு கொண்டுவர, அவர்களுக்கு பாணும் தண்ணியும் தான் உணவாகக் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. அப்போதும் அவர்களால் முடிவு எடுக்க முடியாது போனபோது அவர்கள் இருந்த மண்டபத்தின் கூரை கழற்றப்பட்டபோதுதான் பாப்பரசர் தெரிவு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

அந்த சம்பிரதாயம்தான் இன்றும் தொடர்கிறது. வத்திக்கானில் அமைந்துள்ள புனித செஸ்ரின் ஆலயத்தில், பூட்டப்பட்ட மண்டபத்தினுள் கார்தினால்கள் ஒன்று கூடி புதிய பாப்பரசரை தெரிவுசெய்வார்கள். எண்பது வயதுக்கு உட்பட கார்தினால்கள் மட்டும் தான் வாக்களிப்பில் பங்குகொள்ள முடியும். 117 கார்தினால்கள் வாக்களிக்க தகுதி பெற்றாலும், 115 பேர்தான் வாக்களிப்பில் பங்குபற்றுவார்கள் என்று அறியப்படுகிறது. இந்தோனேசியாவை சேர்ந்த கார்தினால் ஒருவர் சுகவீனம் காரணமாக பங்குபற்ற மாட்டார். மற்றவர் எடின்பரோவை சேர்ந்த கார்தினால், இவர் 33 வருடங்களுக்கு முன்பு நடந்ததாக கூறப்படும் சில முறைகேடுகளுக்கு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று அண்மையில் குற்றம் சாட்டப்பட்டார். இத்தருணத்தில் கடந்த திங்கள் கிழமை தனது உடல்நிலை காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்து கொண்டார். குற்றச்சாட்டுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க தான் பதவியை துறந்தார் என்றும் கூறப்படுகிறது. தொடரும்...

அ. அன்ரனி மனோகரன்

# ..பிடித்தவர்கள்

16ஆம் பக்கத்தொடர்ச்சி

இல்லாட்டி இடுப்பிலை அந்த நூலைக் கட்டலாம். காசும் அவ்வளவு கனக்க இல்லை. 108 டொலர்கள் கொடுத்தால் போதுமாம்'.

நீலவேணி கேட்டுக் கொண்டிருந்தாள். ஒன்றும் சொல்லவில்லை. அன்னப்பிள்ளை மாமி தொடர்ந்தாள்.

'உங்கை கனபேருக்கு புது வீடு என்று குடிபோகேக்கை உப்பிடிப் பிரச்சினையள் கனக்க இருந்து, அந்தச் சாமியார்தான் எல்லாம் தீர்த்து வைச்சவராம். பாக்கிலை வந்து பார் பிள்ளை. எத்தினை பேரின்ரை கையிலை நூலைக் காணலாம். நான் ஒருக்காலும் போகேல்லை. உவள் கனகம் அடிக்கடி அந்தச் சாமியாரிட்டை போறவள் போலை. நாலஞ்சு நூல் கையிலை கட்டியிருக்கிறாள்'.

மாமி தொடர்ந்தாள் 'உனக்குச் சொன்னால் என்ன, வேதக்காரரும் போயிருக்கினமாம். எல்லாம் புது வீட்டுப் பரிகாரத்திற்குத்தான். உவன் ஜேம்சும் பெஞ்சாதி பிள்ளைகளும் கூட அவையின்ரை புது வீட்டுக்குப் போகேக்கை சாமியாரிட்டைப் போய் நூல் கட்டித்தானாம் குடி புகுந்தவை. உண்மை பொய் எனக்குத் தெரியாது, கனகம்தான் சொல்லுறாள். ஓம் பிள்ளை! இன்னமும் அவையின்ரை இடுப்பிலை சாமியாரின்ரை நூல் இருக்குதாம். அந்த நூல் கட்டோடைதான் சேர்ச்சிற்கும் போறவையாம்.'

நீலவேணி முகத்தில் ஆர்வம் தெரியவே அன்னப்பிள்ளை மாமியின் குரல் கொஞ்சம் உரத்து உறுதியாய் வந்தது.

'சும்மா ஒருக்காப் போய்ப் பாத்திட்டு வாங்கோவேன். என்ன நடக்குதெண்டும் தெரிய வரும். நீ சொன்னால் சிவா கேட்பான். சரியோ பிழையோ ஒருக்காப் போய்ப் பாத்திட்டு வாங்கோவேன்.'

நீலவேணி இன்னமும் ஒன்றுமே சொல்லாமல்தான் இருந்தாள்.

- இன்னமும் முடியவில்லை.

# பொதுமகளிடம் நாட்டங்கொண்டு புறத்தொழுகி மீண்டும் தலைவியிடம் வருகின்றான். தலைவி அவனை ஏற்றுக்கொள்கின்றாள்.

தலைவி என்ன நினைந்தாளோ என ஏங்குகின்றான். தோழியை நாடி விசாரிக்கின்றான்!

அகத்தொழுக்கம் புறத்தொழுக்கம் என்பது தமிழர் கண்ட சால்பு. ஐங்குறு நூறு என்னும் பாடல்களை இயற்றிய ஓரம்போகியார் மருதத்திணையில் வேட்கைப் பத்து எனப் பாடல்களைத் தந்துள்ளார். இங்கு தலைவியைப் பிரிந்து புறவொழுக்கத்தில் நீண்டநாட்கள் இருந்து தனது தவறை உணர்ந்து தலைவிடம் வந்து கூடியிருந்த தலைமகன் தோழியிடம் கேட்கின்றான். நான் பரத்தையர் பால் செல்லலாகிய புறவொழுக்கத்தை மேற்கொண்டவேளை நீங்கள் என்ன நினைத்தீர்கள் என்று தனது துணைவி அடைந்த வேதனையை அறியும் பொருட்டு வினாவுகின்றான். தோழியோ அதற்கு விடையிறுக்குமாற்றாய் ஓரம்போகியார் பின்வரும் பாடலைத் தருகின்றார். அதாவது முதலிலே தலைமகனை வாழ்த்துவதனைக் காணலாம். ஐங்குறு நூறு என்னும் சங்க இலக்கியத்தில் மருதம் பாடிய ஓரம்போகியார் தலைமகன் பரத்தமைபாற் சென்று மீண்டமையை சித்தரிக்கும் பாடல்கள் 10 இடம்பெற்றுள்ளன.

வாழி ஆதன், வாழி அவினி!
நெல்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!
என்வேட் டோளே, யாயே, யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்!
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க! எனவேட் டேமே. - 1.
- ஓரம்போகியார்

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

எனத் தலைவனை வாழ்த்தி அவனது நாடு பொலிவுற வேண்டும் என்பதனைக் கூறுவதனால் அவனது ஊர் சிறக்கவேண்டும் விருந்தினரை வரவேற்று உபசரிக்க நன்னிலத்தில் நெல் விளையவேண்டும். அதற்கு அறத்தொடு வாழ்ந்தால் அன்றோ மழை பெய்யும் மாதம் மும்மாரி பெய்து நாடு சிறக்கவேண்டும் அதன்வழி வயல் நன்கு விளைவு தரவேண்டும், இரப்போருக்கு ஈவதற்கு பொன், பொருள் சிறக்கவேண்டும் என அவள் விரும்பினாள். இங்கு அவள் உன்மீது அன்பும் காதலும் கொண்டவளாக இருந்தாள். உனது புற ஒழுக்கத்திற்குத் துணைபோன பாணனும் வாழ்க என்றும் விரும்பினள். அது மட்டுமன்றி காஞ்சிமலர் அழகாக மொட்டவிழ்க்கும் நறுமணங் கமழும் இயல்பும் சிறுமீன்களின் துர்நாற்றம் வீசும் நிலையையும் ஒருசேர சமமாக நோக்கினள். அதாவது அழகும் வனப்பும் பொருந்திய தலைவி, பரத்தையையும் தன்னோடு ஒப்பநோக்கினாள் என்பது புலவர் மறைமுகமாக தோழி தலைமகனுக்கு பரத்தையரை சிறுமீனுக்கும் தலைமகளை மலருக்கும் ஒப்பிட்டுக் காட்டி தலைகளது பெருமையை உணர்துவதாக அமைகின்றது பாடல். தலைவனின் நலத்தையும் பெருமையையும் அன்றி அவள் வேறொன்றும் நினைத்திலள் என்று தன் தலைவிக்காகப் பரிந்து பேசுகின்றாள் தலைமகளின் தோழி. உள்ளுறை உவமம் தொக்க நிற்கின்றது. நறுமணம் கமழும் காஞ்சி மலர் எங்கே? புலால்நாற்றம் நிறைந்த சிறுமீன் எங்கே? நீ இதனை உணராது இருந்தனையே என்கின்றாளோ தோழி? அதுமட்டுமன்றி குலமகளையும் பொதுமகளையும் ஒப்பநோக்கும் தன்மை அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. தலைவனின் ஊர் புலாலும், மலரும் ஒருங்கே விளையும் இடமாகக் கொள்ளப்படுகின்றது.

இரண்டாவது பாடலிலும் தலைவி தலைவனை நினைந்து ஒழுகினாளே தவிர வேறொன்றும் அறியாள். உன் நலன் பெருகவே விரும்பினள் என்கின்றாள் தோழி:

வாழி யாதன் வாழி யவனி
விளைக வயலே வருக விரவலர்



எனவேட் டோளே யாயே யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்த நிகர்க்கும்
தண்டுறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க வெனவேட் டேமே. -2
- ஓரம்போகியார்

தலைவியோ இல்லறம் மதித்து அதனையே தனது உள்ளத்தில் நினைந்து ஒழுகினாள். உனது அன்பு அவளிடத்தில் குறைந்துபோகும் தன்மையை அறிந்தும் அவள் உன்மீது அன்பு குறையாது அதிகரித்துச் சென்றது. வயல் நிலம் நன்கு விளையவேண்டும். உனது பெருமை குறைவடையாது உன்னோடு அல்லது உன்னை நாடி வருகின்ற விருந்தினருக்கு உணவு படைக்க வேண்டும். இரந்து வரும் புலவர் பெருமக்கட்கு பரிசில் பொருட்கள் வழங்கவேண்டும் என எண்ணினாள். அத்தோடு மிக அழகிய நறுமணம் கமழும் நீலோற்ப மலரோடு நெய்தல் மலரை சரிசமமாக நோக்கினாள் என்பது குலமகளோடு பொதுமகளைச் சரிசமமாக நோக்கி அவ்விடம் உறைகின்ற தன் தலைவனுக்கு நற்பெயர் கிட்டவேண்டும். அவனது பெருமைக்கு இடையூறு விளையக்கூடாது என விரும்பினாள் என்று உரைக்கின்றாள். எனக்கென்ன துன்பம் நேர்ந்தாலும் தனது துணைவனுக்கு அல்லது காதலனுக்கு எந்தவித இடையூறும் நேரக்கூடாது. அவன் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியாள் உன் தலைவி எனத் தோழி தலைவனுக்கு அவளின் உள்ளன்பையும், உணர்ச்சிகளைக் கூட உனக்காக அடக்கிக் கொள்கின்றாளே. நீ அதனை உணரவில்லை. ஆனால் அவளை நான் நன்கு அறிவேன். என்னிடம் தனது குறைகள், உள்ளக் கிடைக்கைகளை அவள் பகிர்ந்துகொள்ளும் உயிர்தோழியல்லவா என்று உரை பகர்கின்றாள் தோழி!

தொடர்ந்து வரும் பாடல்களிலும் அவள் தலைவனின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படக்கூடாது என்ற பெருநோக்குடன் உள்ளாள் என்பதனை எடுத்துரைப்பதாக அமைகின்றது ஓரம்போகியாரின் வேட்கைப் பத்து பொதுநல வேட்கை.

# பிறந்தநாள் காலையில் ஒரு முதுமையின் முணுமுணுப்பு



நேற்றுப் போலிருக்கிறது
அறுபதைத் தாண்டிய தாவலில்
இன்று எழுபதில் இல்லை எழுபத்து மூன்றில்
சென்றதினித் திருப்பாது
ஆட்சி ஆவணம் மண்ணும் மனைவியும்
ஆருக்குச் சொல்லி ஆறலாம்
ஆண்டவனைத் தவிர அனைவரும் அழுகையில்
சிலர் சிரிப்பார் சிலர் அழுவார்
நான் அழுது கொண்டே சிரிக்கின்றேன்
என்றவனும் இன்று இல்லைப் போய்விட்டான்
நின்று பின்னால் திரும்பிப் பார்க்கிறேன்
என்னோடு வந்தவர்கள் பலரைக் காணோம்
சிலர் எங்கோ இருந்து சினந்தும் சீறியும்
செய்ய நினைத்தது எத்தனையோ
செய்து முடித்தவை சிலவே தான்
இதனையும் இயக்க இடர்பாடு எத்தனை?
சிரித்த முகத்துடன் சேர்ந்து சீரழித்தவர் சிலரா?
சிறைமீட்டேன் என்றும் சிந்தனை தந்தேன் என்றும்
சொற்பொழிவில் எழுத்துருவில் மகிழவைத்தேன் என்றும்
ஆக்க இலக்கியத்தில் படைப்பும் பிடைப்பும் அருளினன் என்றும்
ஆன்மீகனாய் அலைவரிசைகாட்டி ஆவன செய்தேன் என்றும்
பாராட்டுகள் பதக்கங்கள் கேடையங்கள் பலவும் தந்தனர்.
உலகம் என்பதை இன்னும் உணரேன்!
உயர்ந்தோர் மாட்டே என்பது வெறும் பாட்டேதான்
உருளுவதும் உண்மை உருட்டுவதும் உண்மை
உன்னை மட்டும்மா? எத்தனை எத்தனை உயிர்கள்
மனிதனைப்பார் பறவையைப்பார் மாடு ஆடுகோழியைப்பார்
உன்னை மட்டுமா உலகம் உருட்டுவது?
படைத்த அத்தனையும் உருளுது புரளுது
நடைதொடர் நம்பிக்கையில் என்கிறது மனம்
இந்த மனமே நலிகிறது சோர்கிறது நடுங்குகிறது
நாளை என்னவோ என்றும் ஏங்குகிறது
நாகராசன் சொன்ன நாளை மற்றுமொரு நாளே
என்பது என்னை இயங்க வைக்கிறது இயங்குகிறேன்.

**- புலவர் ஈழத்துச் சிவானந்தன்**

*அகவை எழுபத்து மூன்றில் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் வாழ "விளம்பரம்" பத்திரிகையும் வாழ்த்தி நிற்கின்றது.*

# Education

## Review Tutorials - 134

### BIOLOGY 12, IB and AP

(A) Identify and name the following compound.



(B) Outline the potential benefits and possible harmful effects of genetic modification?

### CHEMISTRY 12 & IB

**(11)** A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow$
$7H_2O(l) + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

**(12)** Balance the equation in acidic solution

$FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

### PHYSICS 11& 12

**(11-A)** Two balls are thrown vertically upward, one after the other with a 1.2 s time difference. Balls reach maximum heights at the same instant (these heights are different). If the initial speed of the first ball is 25.0 m/s, determine the initial speed of the second ball.

**(11- 12)** A Child (P) slides down a frictionless slide –X with 32° incline. An another Child (Q) slides down a slide -Y with 32° . The speed of child -Q at the bottom of the slide is exactly half of the speed of child- P. Determine the coefficient of kinetic friction between the child - Q and slide- Y. (Assume the lengths of the slides X and Y are same)

### MATH 11

If a bus travelled 10km/h faster, it would take 2 h less time to make a 400km trip. Determine its speed?

### FUNCTIONS /Adv. FUNCTIONS 11& 12

**(12-A)** Determine the leading coefficient of a polynomial function with the 3rd difference 6.

**(12-B)** Determine an equation of a $4^{th}$ degree polynomial function with zeros 1,2 of order 1 and 3 of order 2 passing through (4, 20).

### Calculus 12

Find the limits $\lim_{x\to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$

## Answer key 133

### CHEMISTRY 12, IB and AP

(A) First ionization energies of Li<B< Be
Li- $1S^2\,2S^1$ Be- $1S^2\,2S^2$ B- $1S^2\,2S^2 2p^1$
Atomic radius Li> Be> B; therefore ionization energies increases with the decrease of radius . However , Be > B Removal of an electron from $S^2$ orbital is harder compared to that of $2P^1$

(B) Among the increases of successive ionization energies there is a sharp increase in $6^{th}$ ionization energy. Therefore this element has 5 electrons in the valence orbital. Therefore Group V or Group 15.

(C) (i) $NO_3^-$ (ii) $NO_2^-$ (iii) $SO_4^{2-}$ (iv) $CO_3^{2-}$ (v) $I_3^-$ (vi) $CH_3^+$
(i) trigonal (ii) bent (iii) tetrahedral(iv) trigonal (v) linear (vi) trigonal

### PHYSICS 11& 12

(11-A) For the car Vc = 24 m/s; Police car Vi =0 m/s², a =2m/s². If the police car catch the car in '$t_c$' s and with the displacement of 'd' m.
For the car $\Delta d = v\,\Delta t_c$; $t_c = (t_p + 3)$; $\Delta d = 24 (t_p + 3)$
For the police car $\Delta d = v_i \Delta t + \frac{1}{2} a \Delta t^2$;
$\Delta d = 0 + \frac{1}{2} \times 2\,\Delta t_p^2$
consider the distance travelled by the speeder and the police car are same.
$24 (t_p + 3) = \frac{1}{2} \times 2\,\Delta t_p^2$
Solve for $t_p$ using quadratic formula.( ans=26.7 )

(11-B) (a) 0. 6 km (downstream) (b) 0.9 km/h (downst.

### Functions 11/ Adv. Functions

(11-A) (a) 3 b) 11 c) -1 d) $-4x + 3$
(11-B)
(a) -3.3&+0.77; (-1.25,8.13); {x∈R}, {y∈R, y ≥ 8.13},o-up
(b) +3 & -2.5; (0.25,-15); {x∈R}, {y∈R, y ≥ -15}, opens up

(12-A) (a) -4, +2 ; 3; +; 3 to 1
b) +3, +5; 4; +; 2 to 1
c) -4, +2 ; 4; - ; 3 to 4

### Calculus 12

Find $\lim_{x\to\infty} \frac{\sqrt{x^4+1} - 2x^2 - 1}{x^2}$ Ans: -2

### BIOLOGY 11 &12

**(11A)** Large amounts of proteins - integral proteins, peripheral proteins.
lipids - phospholipids, glycolipids, and cholesterols. , carbohydrates – glycoproteins
(a) plasma membrane – Encloses the cell, protective barrier, helps to hold the cytoskeleton and thereby provide integrity and shape, selective permeability, transport of molecules, communication with other cells
(b) Lysosome – digestion of materials within the cell and recycling of unwanted products

*Answer key 134 - next issue*
**Contact: 647 341 3975**
Dr. A.Sri Krishnaraj PhD

KEEN TUTORING CENTRE

**E mail: ask@ keentutoringcentre.com**

# மூட்டுவலிகளில்...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

இரத்தத்தில் உள்ள யூரிக் அசிட்டே காரணம் என்கிறார். தற்போது புதிய மருந்துவகைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. Anakinra, Canakinmab, Rilonacept என்பனவே அவைகளாகும்.

பொதுவாக யூரிக்அசிட்டை கூட்டும் சில உணவு வகைகள் உள்ளன. தேநீர், கோப்பி, கொக்கோ, சொக்கிளேட் ஆகியவற்றை குறைத்தல் வேண்டும். கடல் உணவு, ஈரல், மிருகங்களின் சிறுநீரகம், இதயம், இனிப்பு பாண், இறைச்சியிலிருந்து தாயாரித்த உணவுகளை கட்டாயம் தவிர்க்க வேண்டும். பீஸ் (Peas), பீன்ஸ், கீரை என்பனவும் உண்பது கூடாது. பியர், வைன் போன்ற மதுவகைகள் இந்நோயை கூட்டுவது.



கீல்வாதத்திற்குரிய தீர்வுகள் மிகவும் முக்கியமானவை. வீடுகளில் செய்யப்படக் கூடியவையாக முதலில் நோவினை குறைப்பதற்கு ஐஸ் கட்டிகளை பாவிக்கலாம். அத்துடன் உடல் நோவை குறைக்கும். Ibuprofen மருந்தினை எடுக்கலாம். சில தேகப்பயிற்சிகளை செய்யலாம். கால்களை Epsom Salt உள்ள நீரில் அமிழ்த்தலாம். சூடுள்ள குளிப்பு செய்யலாம். ஸ்ரோபெரிஸ் விதைகள், தானியங்கள் உண்ணலாம். விட்டமின் C எடுக்கலாம். தினமும் 8 -10 கிளாஸ் நீர் அருந்தலாம். Apple cider வினிகர் முன்பிருந்தே பாவனையில் உள்ளது.

கீல்வாதத்தினை குணமாக்குவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இது ஒரு தாக்குதல் நோயாக இருப்பதால் எதுவித முன் அறிகுறிகளும் இருப்பதில்லை. எனினும் இதனை தீர்ப்பதற்கு நோவினை அகற்றும் மருந்துகளே பாவனையில் உள்ளன. அஸ்பிரின் பாவிக்க கூடாது. தற்போது Arthritis self management program (ASMP) மூட்டுகள் பற்றிய செய்திகள் பல்வேறு வலை அமைப்புக்கள் என்பன உதவுகின்றன. நீண்டகால கீல்வாதம் உதவியற்றநிலை, உளச்சோர்வு என்பவற்றினை ஏற்படுத்தவல்லது. இந்நோயாளிகள் மருத்துவர்களிடம் முழுநேர தொடர்பு கொண்டு நோயினை அகற்ற முயலவேண்டும்.

**50**

**PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE**

**AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

***GTA Square Mall (FINCH & MIDDLEFIELD***

தொடர்புகளுக்கு: ***416.917.6883***

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

***www.tamilvanakkam.com***

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# நகைச்சுவைத் தொடர் 263 ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





சிவராத்திரிக்கு மன்னார் (மாதோட்ட நன்நகரில்) சாமி மட்டுமிருந்து ஆமியில்லாத காலத்தில் பரிவாரங்களுடன் ரெயினில் சென்றகாலத்தையும் கேரதீவு வழியாக சங்குப்பிட்டியூடாக பஸ்சில் சென்ற காலத்தையும் நினைத்துப் பார்த்தார் உலகர். ஒவ்வொருசாமத்திற்கும் பாலாவியில் குளித்து குடத்தில் நீரெடுத்து சிவனுக்கு ஊற்றி வழிபட்டது மறக்க முடியவில்லை. சிவராத்திரிக்கு வருடத்தில் ஒருமுறை நித்திரைவிழிப்பது சமயத்தைச்சார்ந்தது. ஆனால் நாடுவிட்டு நாடு வந்து 2, 3 வேலையென சாதாரண தூக்கம்கூட பகலில் ஆந்தைபோல் தூங்கி இரவிரவாக வேலை செய்பவர்கள் எத்தனை பேர்?



தூங்காமல் தூங்கி சுகம் பெறுவதெக்காலம்?
மார்ச் 9 சிவராத்திரி (விழிப்போடு இருங்கள்!)

இலங்கையில் பாடசாலை அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சியும் பட்டங்களும் வழங்கப்படுகிறன. - பிபிசி வானொலிச்செய்தி
ஆமி கலைத்தால் பாடசாலைகளில் ஒதுங்குவோம்.
பாடசாலை அதிபர்களே ஆமியானால்?

ரூபன் இப்படி ரூபிக்கு படவசனம் போல் பேசிக்காட்ட என்ன ரூபன் பஞ்ச் டயலக் இன்றைய இளம் கதாநாயகர்கள் மாதிரிப் பேசிப்பாக்கிறாய் என்று ஆட்டிலறி அன்னம்மா கேட்க

அது அன்னம்மா அன்ரி பிபிசி நியூஸ் கேட்டவர் அதுதான் என்று சொல்லி முடிக்கமுதலே சும்மாவே கொய்யாத் தடியாலையும் பிரம்பாலையும் அடிக்கிற வாத்திமார் பிறின்சுப்பல் மாருக்கு ஆமி ரெயினிங் கொடுத்தா நல்லாத்தானிருக்கும் எண்டு ஆட்டிலறி அன்னம்மா சொன்னா...



ரூபி, மாசிப்பனி மூசிப்பெய்யும் என்பார்கள். அதுபோலத்தான் காற்று மழை புயல் பனிப்புயல் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கின்றன. பாடசாலைகள் சர்வகலாசாலைகள் காலநிலைக் கோளாறால் மூடப்படுகின்றன.




நல்ல பேரை வாங்கவேண்டும் பிள்ளைகளே! மாணவர்கள் சிறுவர்கள் இந்த வருட ஆரம்பத்திலிருந்து துப்பாக்கிச்சூட்டிற்கு பலியாகியுள்ளனர். சில கொலைகளுக்கு திட்டமிட்ட போதை வஸ்து கடத்தல் காரணம் என பொலீசார் கூறுகின்றனர். மாணவர்களையும் இளைஞர்களையும் கல்வித்திட்டங்களில், கலை கலாச்சாரங்களில் ஈடுபடுத்தாததன் விளைவுதான் காரணம்?



ஏமாறாதே! ஏமாற்றாதே!
ஐ.நா. சபையில் இலங்கைப் பிரச்சினையின் பக்கங்கள் புரட்டப்படுகின்றன. சொன்னவற்றை செய்யாமல் எங்களையே ஏமாற்றிவிட்டது இலங்கை அரசு என அமெரிக்க பிரதிநிதி மனம் விட்டுச்சொல்லுகிறார்.
சிலபேரை சிலநாட்கள் ஏமாற்றலாம். கொஞ்சப்பேரை கொஞ்சநாள் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லா நாளும் ஏமாற்றமுடியாது.
(எத்தனை காலம்தான் ஏமாற்றுவார், இந்தநாட்டிலே, சொந்த நாட்டிலே)

உலகண்ணை சனல் 4 இல் முள்ளிவாய்க்கால் கடைசிச் சண்டையில் வெளிவராத பல உண்மைகள் வெளிவரத்தொடங்கிவிட்டன. அதை காட்டவிடாமல் இலங்கை அரசு பல முயற்சி எடுக்கினமாம் என்று செக்கண்ட் புளோர் செல்லம்மா தொடங்க ஆட்டிலறி அன்னம்மா சிரித்துக்கொண்டே சொன்னா.



கமல்ஹாசனின் விஸ்வரூபம் படம் பல தடைகளைத் தாண்டி வந்திட்டுதாம். முள்ளிவாய்க்கால் விசயம் விசுவரூபம் எடுக்கேக்கை தெரியும் என்று உலகரைப்பார்த்தபடி சொன்னா.
சட்டம் ஏமாந்து போனாலும் போகும். தர்மம் என்றைக்கும் பழிவாங்கித்தீரும். ஆசையே துன்பத்திற்கு காரணம்.



மார்ச் 1-15…..

1. மார்ச் எம்.கே. தியாகராஜ பாகவதர் நினைவு தினம் (மன்மத லீலையை வென்றார் உண்டோ.., சொப்பன வாழ்வில் மகிழ்ந்தேன்)
1. சுவிற்சர்லாந்தில் பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்பிளின் கல்லறையிலிருந்து அவரது உடல் திருடப்பட்டது
2. நா. சிவலிங்கம் நினைவுதினம் (2010) நிச்மன்ட் கில் இந்து ஆலய வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து அதன் வளர்ச்சியில் இறுதிவரை பங்குகொண்டவர்.



3. அலெக்சாண்டர் கிரகாம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தவர். பிறந்ததினம் (1847-1922) (அவரது தாயாரும் மனைவியும் செவிப்புலனற்றவர்கள். அதுவும் இவரின் ஆய்வுக்கு காரணம் எனக் கூறுகிறார்கள். பிறந்தது பிரிட்டன், வாழ்ந்தது கனடா.
3. சிரித்திரன் ஆசிரியர் யாழ். கரவெட்டி சிவஞான சுந்தரம் நினைவுதினம். (1996) சவாரித்தம்பர் வீரகேசரியில் மித்திரன் பத்திரிகைகளில் இவரது கேலிச்சித்திரங்கள் பிரபலமானவை.



7. ஆசுகவி ஈழத்து எழுத்தாளர் கல்லடி வேலுப்பிள்ளை நினைவுதினம் (1860-1944)
8. அனைத்துலக மகளிர் தினம் (ஐக்கியநாடுகள்) (1945 ல் கனடாவில் கொண்டாடப்பட்டது )
9. மகா சிவராத்திரி
9. நேரமாற்றம்



10. 1876 ல் அலெக்சான்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்
11. 1902ல் காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரி வரை 21 மைல்நீள புகையிரதப்பாதை போடப்பட்டது.1905ல் மதவாச்சிவரை நீடிக்கப்பட்டது. (இப்போ எங்கேயென்று தேடவேண்டாம்)(பாதையெங்கே பயணம் எங்கே)
11. உலக சிறுநீரக நாள்



மட்டுவிலில் வசிப்பவளாம் ……….மாலா
காதல் கொண்டவனின் பெயர்…… பாலா
இருள் நிறம் கொண்ட அவள் ……மேலா(ல்)
பாவை பட்டப்பெயரும் கொக்கோ..கோலா
1972-1973..களில் கலகலப்பு நகைச்சுவையிதளில் வெளிவந்த கவிதையில் ஒரு பகுதி

## இரு அமெரிக்க ஜனாதிபதிகளுக்கிடையேயான ஒற்றுமை! இது ஒரு தற்செயலா?

1. ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln) காங்கிரஸ் இற்கு தெரிவுசெய்யப்பட்ட ஆண்டு 1846, ஜோன் எஃப் கெனடி (John F. Kennedy) காங்கிரஸ் இற்கு தெரிவு செய்யப்பட்ட ஆண்டு 1946.

2. ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட ஆண்டு 1860. ஜோன் எஃப் கெனடி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஆண்டு 1960.

3. இரு ஜனாதிபதிகளும் குடிசார் உரிமைகளிற்கு (Civil Rights) முதலிடம் கொடுக்கிறார்கள்.

4. இரு ஜனாதிபதிகளுடைய மனைவியர்கள் வெள்ளைமாளிகையில் வசிக்கும் போது தங்களது குழந்தைகளை இழந்தார்கள்.

5. இரு ஜனாதிபதிகளும் தலையில் சுடப்பட்டார்கள்.

6. இரு ஜனாதிபதிகளும் சுடப்பட்டது ஒரு வெள்ளிக்கிழமை நாளில் ஆகும்.

7. லிங்கனின் காரியதரிசியாக இருந்தவர் பெயர் கெனடி . கெனடியின் காரியதரிசியாக இருந்தவர் பெயர் லிங்கன்.

8. இருவரும் கொலை செய்யப்பட்டது அமெரிக்காவின் தெற்கு பகுதியில் வசிப்பவரால். (Southerns)

9. இரு ஜனாதிபதிகளையும் தொடர்ந்து ஜனாதிபதியாக வந்தவர்கள் பெயர் ஜோன்சன் (Johnson), இவர்கள் இருவரும் அமெரிக்காவின் தெற்கு பகுதியில் வசிப்பவர்கள். (Southerns)

10. லிங்கனை தொடர்ந்து வந்த ஜனாதிபதி அன்றூ ஜோன்சன் (Andrew Johnson) பிறந்த ஆண்டு 1808. கெனடியை தொடர்ந்து வந்த ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் (Lyndon Johnson) பிறந்த ஆண்டு 1908.

11. லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் (John Wilkes Booth) பிறந்த ஆண்டு 1839. கெனடியைக் கொலைசெய்த லீ ஒஸ்வோல்டு (Lee Harvy Oswald) பிறந்த ஆண்டு 1939.

12. இரு கொலைகாரர்களும் அவர்களுக்கு உரிய மூன்று பெயர்களால் அறிமுகமான வர்கள். அந்த இருவருடைய பெயர்களிலும் இருப்பது பதினைந்து எழுத்துக்கள்.

13. லிங்கன் சுடப்பட்ட கொட்டகை (Theater) யின் பெயர் ஃபோட் (Ford). கெனடி சுடப்பட்ட கார் லிங்கன் (Lincoln). அது செய்யப்பட்டது ஃபோட் (Ford) நிறுவனத்தால்.

14. லிங்கன் சுடப்பட்டது கொட்டகையில் (Theater) அவரை சுட்டவர் ஒளித்தது களஞ்சியத்தில் (ware house). கெனடியை களஞ்சியம் (ware house) இருந்து சுட்டவர் அவர் ஓடி ஒளித்தது கொட்டகை (Theater) ஒன்றில்.

15. இரு ஜனாதிபதிகளையும் கொலை செய்தவர்கள் நீதி விசாரணைக்கு கொண்டு வர முன்னர் கொலை செய்யப்பட்டு விட்டார்கள்.





16. லிங்கன் சுடப்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் இருந்து மேரிலாண்ட் (Maryland) இல் உள்ள மன்றா (Monroe) இல் கெனடி சுடப்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் மர்லின் மன்றாவுடன் (Marilyn Monroe) தொடர்பு படுத்தி கதைகள் வெளியானது.

- நன்றி உலகத்தமிழோசை

# நியூ ரங்கனாஸ் நகைமாடம்

## NEW RANGANAS JEWEL HOUSE

உங்கள் பழைய தங்க நகைகள் கூடுதல் விலைக்கு வாங்கும்
ஒரே இடம். அடகு வைத்த நகைகள் மீட்பதற்கு
பணவசதி செய்து கொடுக்கப்படும்.
ஒரு முறை தொடர்பு கொள்ள வித்தியாசம் புரியும்.







## சேமிப்பு !

புதிய தங்க நகை சீட்டு ஆரம்பம். பதிவு செய்யும் ஒவ்வொரு
வாடிக்கையாளர்களும் தங்கநாணயம் ஒன்றை
இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். தங்க பிஸ்கட்டுகள்
அல்லாவிட்டால் பணமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**Rangan: 647.947.2864 / 647.702.2159**

*Inside GTA Square Mall (MIDDLEFIELD & FINCH)*
*5215 Finch Ave E. Unit #164, Toronto, ON M1S 0C2*






**Siva Mailvaganam** Direct: 416 230 2991

Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca
80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4

**Build An Investment & Protection For Your Loved Ones**



**BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA**

| AGE | FEMALE | | MALE | | TAX FREE MONEY |
|---|---|---|---|---|---|
| | PER MONTH | MAX COST | PER MONTH | MAX COST | |
| 25 | $125.55 | $30,091 | $153.29 | $36,789 | $250,000 ++ |
| 30 | $170.68 | $40,992 | $193.71 | $46,470 | |
| 25 | $198.55 | $47,652 | $271.26 | $65,102 | $500,000 ++ |
| 30 | $288.61 | $69,266 | $350.50 | $84,127 | |

20 YRS PAY OUT PLAN

- Super Visa (100% REFUNDABLE)
- RRSP (SAVE 40%)
- RESP (SAVE UP TO $9200)
- Critical Illness Insurance (100% CASH BACK)
- Life Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Travel Insurance

RBC Royal Bank | IA Pacific | BMO | Canada Life | Manulife Financial

**We're Hiring!**
Telemarketer, one who can speak Tamil & English.
Please contact **416 230 2991**



















***Free Real Estate Class -*** Call: ***416.321.6969***




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com www.tamilvanakkam.com***

